ஆண்டவர்கள் மான்மியம்

ஆதியே துணை

பிரம்மோதய

மெய்வழிச் சாலை ஆண்டவர்கள்

மான்மியம்

இச் செகத்து மனுமக்களுக்கு

மெய்வழிச் சபையாரின்

ஜீவப்பரிசு

இந்த னூலில்

அங்கம் - அங்கி - அங்கு - அங்கே
அங்ஙம் - அங்ஙி - அங்ஙு - அங்ஙே

அந்த - அந்தி - அந்தோ - சந்தை
அந்ந - அந்நி - அந்நோ - சந்நை

அஞ்ச - அஞ்சா - அஞ்சி - அஞ்சு - அஞ்சே
அஞ்ஞ - அஞ்ஞா - அஞ்ஞி - அஞ்ஞு - அஞ்ஞே

மேல்வரி - எழுத்துவாசகமாக இருந்நதைக் கிழ்வரி - சாய்ந்த
எழுத்திலிருக்கும் - அச்சர வாசகமாய் எழுதியிருப்பதைப்
பிழையாயிருக்கிறதென்று எண்ணாதிர்கள்.
மொழிக்கு முதலில் - ன - எழுத்திருக்கும்.
பார்த்துப் படித்துக் கொள்ளுங்ஙள்.

அச்சர மமைத்தோன் அறுந்துபோனதுகண்
டமைந்நதை யமைத்து அறைந்நதிக் கிரந்நம்
அறிவினை யறிந்நோர் அறிவரில் வாய்மை
பாமரர் அறியார் பண்டிதர் அறிவர்
இதனை உணர்ந்நபின் எடுத்தோதிக் கிரந்நம்.

ஆதியே துணை

மான்மியம் - உள்ப் பகுப்பு

வரிசை எண்	பகுப்பு விபரம்		பக்க எண்
1)	முகப்புப்பா		1-2
2)	ஆதியோதயத் தலைப் பருவம்		3-13
3)	ஆதியோதயப் பருவம்		13-24
4)	அழிகலிப் பருவம்		25-36
5)	முதுமொழி உதய பருவம்		36-54
	அ) அவதாரம்	(45 - 47)	
6)	வளர் குழந்தை குமார பருவம்		54-78
7)	மூலபண்டாரப் பருவம்		79-146
	அ) அலிப் லாம் மீம் என்னும் முப்பெருள்க்கோல மெய்ம்மை விளக்கம்	(124-134)	
	ஆ) கலி புலம்பல்	(137-144)	
8)	அகிலவலம் வரும் பருவம்		147-206
	அ) ஆடுமேய்ப்புத் திருக்கோலப் பா	(196-201)	
9)	சன்னதம் பெறு பருவம்		207-268
	அ) பாசுபதத் தவக்கோலப் பா	(220-228)	
	ஆ) சர்வாகமக் கிரந்த தீர்க்க தரிசனம்	(249-266)	
10)	ஜீவசிம்மாசனப் பருவம்		269-333
	அ) முதல்முதலாக மதுரை மேலக் கோபுரத்தின் உட்புறம் மகிழ மரத்தடி நிழலில் செய்த ஆரம்ப காலப் பிரசங்கம்	(274-277)	
	ஆ) திருப்புத்தூர் கோட்டைச் சுவர் அருகில் நின்று செய்த பிரசங்கம்	(284-287)	
	இ) திருப்புத்தூர் அறுபத்துமூவர் மடத்து முகப்பில் காலை இளனேரத்தில் பேசிய பிரசங்கம்	(288-299)	
	ஈ) திருப்புத்தூர் அறுபத்து மூவர் மடத்திலே தங்கியிருந்தவர்களிடம் ஓர் இரவில் பேசிய பிரசங்கம்	(299-300)	
	உ) திருப்புத்தூர் வயிரவன் கோவில் முகப்பில் நின்று பேசிய பிரசங்கம்	(301-313)	
11)	மான்மிய மகாத்மியத்தைப் பற்றிக் கூறியுள்ள தீர்க்க தரிசனங்கள்		334

ஆதியே துணை

மான்மியம்

முகப்புப் பா

அத்தி மாபுரம் அண்ணல்ப ராபர
சுத்த வான்துரை சொன்னய னக்கலை
ஒத்தை யான்மறை ஊனிய முத்திய
உத்தி யோவனை ரேஒது மான்மியம்.

முப்ப திப்படி முக்குணைத் திற்குடி
ளிற்ப திப்படி ளிர்க்குறு லங்கிர்த
சிற்ப திப்படிச் சொற்குறு உற்பரன்
விற்ப திப்படி வேதத்தாய் மான்மியம்.

கான்முளை ஆதிக்குமுன் - ஆதியாம்
மான்மியம் ஓதி வரும்

ஆதிமு தல்மறையும்
அவ்வல்க்கி ரந்தங்களும்
பாதின டுவிலையும்
ஓதும்மு டிவுபலன் - கான்முளை 1

கோதில்உற் பவஉற்ப
வத்தாய்கு ருமுடிப்பு
மாதுக ருவாசவம்
வந்நவ தாரமுதல் - கான்முளை 2

குழவிமு தல்த்தெரிவை
கொண்டேழ்பி றவிமுதல்
தளராவ ளர்வனப்புத்
தான்பேசி யேகுலவும் - கான்முளை 3

வாலகு ருசந்திப்பின்
மூலபண் டாரம்பெற்றுக்
கீழாம்மூ வாசைவிட்டக்
காலந்து றவுபூண்டு - கான்முனை 4

நிரத்து றவுபூண்டு
பாரப்பி ராணுடனே
சேரன்சோ ழன்தேசமும்
சுற்றிப்பாண் டினன்றுடும் - கான்முனை 5

கூடியேகு ருபரன்றன்
ஞேடேஅ கிலஞ்ஞுற்றி
ஆடுமேய்த்த தன்பின்தவம்
மானதுப ரங்குன்றிலே - கான்முனை 6

மாருஅ திசயத்தின்
பேரும்சன் னதம்பெற்றுக்
கூறும்மக் களின்பிர
வாகம்ள டுத்துவரும் - கான்முனை 7

வித்தியகூ ரியர்களை
உத்தியோவ னத்துண்டாக்கி
விதித்தி ருமணமும்
ஓதும்ஒ ரேகுலமும் - கான்முனை 8

வாழிப்பி ரளையத்தின்
பாழாம்ப டைப்பழிவும்
வீளும்னெ டுஉலகம்
ஆளும்அ ழியாமனு - கான்முனை 9

மாண்டம னுவனைத்தும்
மண்ணிலி ருந்தெழுப்பித்
தோன்றும்நீர்ப் பினிலேற்றிச்
சொர்க்கந ரகமென்றும் - கான்முனை 10

ஆதியே துணை

ஆதியோதயத் தலைப் பருவம்

எல்லாண்டு எல்லாண்டு என்றுய்கி றத்தாண்டு
–எவ்வேத ஆசானுமாய்ப்
பல்லாண்ட பழமைப் பரிசே அவதாரா
இங் –ஙோவடி. கொள்ளுங் குடிகாப்பே

அருண்மணி விரிந்து
பெருந்துறை சிறந்த

ஆதியின் மேனுள்
விதியின் றலையாய்

இருங்குணப் பழமை
ஒருங்கது சமைந்து

ஈடொன்று மிலவாய்
இருந்த வறுதி

உறைந்தவக் கோளம்
விறைந்தவல் லிருளாய்

ஊமையாய் நின்று
யுகம்பல பலவாய்

எண்ணருங் காலம்
வண்ணகூ டஸ்த்தமாய்

ஏதுமில் யாதும்
ஓதும்பு ராதனம்

ஐக்கியப் பதியும்
அசைவிலாக் குன்றாய்

ஒருவஸ்த் துவதெனும்
பரவஸ்த் ததுவாய்

ஓங்கு நிராமயம்
பாங்குறு கருணை

ஔவலா மோரறி
வாகிய தெய்வ

சுட்டெனும் பிரம்மத்
தருளொளிப் பெருக்கால்

ஒருதனித் தலைமை உதயம தாகி மதிகதிர் மின் பனி தாரகை அவனி ஆகாயம் சொர்க்க மத்திய பாதாளங்க ளென்னும் மூன்று உலகங்களையும் பூமி பதினான்கும் மலைகடல் வனம் ஆறு அருவிகள் முதலாகிய ஆயிரத்தெட்டு அண்டசராசரங்களும் எழுவான் படுவான் முதலாகிய பதினெண்ணாயிரம் ஆலங்களையும் விரித்து அங்கு அனைத்திடங்களிலும் எங்கு எதற்கு எது பொருத்தமுற் றிலங்குவதோ அதற்கு அதுவாகவே ஆங்காங்கு வேண்டுவனவாகிய தேவர்கள் வித்தான்கள் பூதபூதிய காரண காரியங்களும் புழுக்கம் வித்து அண்டம் சினை என்னப்பெற்ற னால்வகை யோனியும் அமரர் மனு விலங்கு புள் ஊர்வன ஜலவாழ்ஜந்து தருக்கின மென்னப்பெற்ற எழுவகைத் தோற்றமும்,

அதனதன் ஒவ்வொன்றிலும் பல்வேறு பிரிவுகளாக விளங்கும் எண்ணைத் தடங்காத ஜீவராசிகளையும் படைத்து ஆங்காங்கு அதனதன் வேறுவேறு காரசார உணவுக்கோடி சங்கங்களையும் படைத்து சமிக்ஞை முதலாவதாகிய பாசையில் நின்றும் சகல பாசைகளையும் படைத்தான் -

இவ்வாறு கோடாகோடியான பொருள்கள் ஒவ்வொன்றும் தோற்றத்தில் நின்று விளங்கிக்கொண்டிருக்கும்போது காணப்பெறும், அதனதன் நாமம் ரூபம் நிறம் குணம் குறி செயல் எழுந்து விளங்காநின்ற எண்ணற்ற பலகோடி பொருள்களையும் ஊன்றி நோக்குமிடத்து அவற்றில் ஒரு பொருளிலேனுமுள்ள அதனுடைய ரூபம் நிறம் குணம் குறி செயல்களில் ஓர் அணுவளவேனும் எத்தன்மைத்தாரேனும் எவ்வாற்றானும் எக்காலத்தேனும் யூகித்தறிவதற் கெட்டப்படாத தோற்றமில்லாமை என்னும் அரூப வடிவத்தில் வைத்திருந்தான் -

அந்தத் தோற்றமில்லாமை யென்னும் அரூப வடிவமானது - அதாவது மயிலினது வர்ணங்களை அதன் முட்டையில் அடக்கி வைத்திருப்பது போன்றும் ஆகாயமளாவிய விருட்சங்களைச் சிறிய அதன் வித்துகளில் அடக்கி வைத்திருப்பது போன்றும் அக்கினியானது ஜலத்தை வைத்திருப்பது போன்றும் இன்னும் ஆகாயமாகிய வெறு வெளியானது நெருப்பை வைத்திருப்பது போன்றும் அறிதற்கரிதாகியதற்கு ஆங்கிலத்தில் எசன்சு என்று கூறும் வடிவத்தில் வைத்திருந்த

தெனினும் இந்த உவமானத்திற்கும் எட்டப்படாத மேம்பட்ட அரூப வடிவத்தில் சுருட்டி மடக்கித் தனிடத் தடக்கி வைத்திருந்த பிரம்மக் குன்றென்னும் சூல் புடைத்த பூர்வபுராதனக் குடையிருட் கோளமாகிய காலகால காலங்கடந்த காரிருள்க் காருண்யக் கருப்பை ஞமரூபமற்ற ஞத ஞதாந்தத்தைப் பளுவெலாம் விழுங்கிப் பளுவெலாங் கடந்து பளுவற்றிருந்த பாரப் பருவத பராபரத்தை ஒலியெலாந் திரட்டி ஒலியெலாம் உண்டு ஒலியெலாங் கடந்து உள்வடக்கிக் கொண்டிருந்த வல்லமையை - சுவையெலாம் விரிக்கச் சுவையெலாங் கடந்து சுருட்டி வைத்திருந்த சுயஞ்ஞவை சுகிசுத்த ரூதானத்தை நிறமெலாம் விரிக்க நிறமெலாங் கடந்து நிறமெலாந் திரட்டி நிறுத்தி வைத்திருந்த நிதான நிரந்தர நிராஞ்ஞனத்தை அசைவெலாங் கடந்து அசைவெலாம் உண்டு அசைவற்றிருந்த அனாதி ஆதின அருட்கோளக் குன்றை - குணமெலாந் தாண்டிக் குணமெலாம் விரிக்கக் குணமற்றிருந்தொரு பெருங்குணப் பணப்பை மூலமுங் கடந்து மும்மூலத்திற்கும் முதலாய வைப்பை எழுத்தெலாம் பிறந்து எழுத்தெலாங் கடந்த எழுதாத எழுத்தெனும் எழுத்தை ஏகநாயக தத்துவாதிதமென்னும் பரிபூரணப் புராதனப் பொருப்பை வரம்பற்ற நெடுங்கால மேநின்ற கடுங்காரக் குன்றை நிர்விகார ரகித கன்சுல் - மகபியா வென்னும் புதையலாகிய கூரிய இருள் வஸ்த்துவானது தனது கஜானுப் பொருள்களை வெளியாக்கவேண்டி எங்ஙனும் எக்காலத்தும் எவ்விதத்தும் தனக்கு நிகரில்லாத சுத்த சைதன்ய தனிப்பெருங் கருணையென்னும் ஒரு தெளி

வான னுட்டத்தைக் கொண்டு தனக்குள்த்தானே மல்க ராவான தென்னப்பெற்ற கடுங்கார விம்மலென்னும் ஓர் விசும்புதல் உண்டாயிற்று -

அங்ஙனம் உண்டாகிய விசும்புதலைத் தன் அகந்துறந் நறியாமலும் தன்னிலக்கணாங் கற்கா முன்னருமான சாமான்ய மக்கட் குழாத்தில் சும்முன் புக்முன் உம்புன் என்னும் செவிடு குருடு ஊமை முதலாய் குறைவின்றிய தேகமெடுத்தும் ஓர் மெய்க்குரு பிரானிடம் சென்று மெய்ப்பயன் அடைய யோக்கிதி நராத அற்ப மதிப்பும் சோம்பேறி அசட்டுத் தனமும் கறைபடிந்து தடிப்பேறிய தன்மையின் காரணமாகப் பிரம்மம் னுன் தான் என்று கூறிக்கொண்டு திரியும் சில ருக்கு - அசைவற்ற குணக்குன்றென்னும் பிரம்மத்தினி டத்துக் கடுங்காரம் விம்மல் உசும்புதல் எப்படி உண் டாயிற்றென்று மூன்றும் வேதத் தரசரவர்களின் வருட மாகிய கி. பி. ஆயிரத்துத் தொளாயிரத்தி முப்பதாவ துக்குச் சத்திய மெய்வழித் தலையுக ஆண்டு முப்பதா வது வருடத்தில் திரிலோக சஞ்சாரராகிய னுரத மகா முனிபுங்கவ ரவர்களின் காலத்தில் சம்பாலா னகரமென் றும் - திருவள்ளுவ னுயனுர் அருணகிரினுதரவர்களுடைய காலத்தில் பெயர் இராஜகெம்பிரமென்றும் கூறப்பெற்ற இன் னகரத்திற்குப் பிற்காலம் வருவார்களென்று வரைந்து ஊனி வைத்துப் போந்த பிரகாரமே னுயகம வர்கள் இராஜகெம்பிரத்திலிருந்த காலத்தும் -

ஸ்ரீ னுரதமகா முனிவரவர்கள் - கல்க்கிப் புராண மெனக் கூறும் கிரந்தம் இயற்றியுள்ள - அந்த முன்

சென்ற நெடும் பழங்காலத்தே அப்போது சால்மல்க் குள மெனப் பெயர்கொண்டிருந்து இப்போது சீதளிப் பொய்கை சீதேளிக் குளமெனப் பெயர் வழங்கிக் கொண்டிருக்கும் நாட்டின் கண்ணே -

நாயகமவர்களுக்கு நடந்த திருமணச் சரிதம் பின்னல் பொறிக்கப்பெற்று வரக்கிடக்கின்ற திருப்புத் தூரில் இருந்து வந்த காலத்தினும் மேலே கூறிவந் துள்ள ஆக்ஷேபம் பிறந்துவிட்ட படியினலே இங்கே னும் அடியில் தரப்பெற் றிருக்கும் - வினு - எழுந்திருக் கின்றதானது -

அந்தச் சோம்பேறிக்கறை படிந்து மெய்ந்நெறிக் கிணங்கப் பிணங்கும் அசடரவர்களைக் குறித்துச் சரி பண்ணி அவர்களுக்காக இங்கே னும் - இவ்வினு வுணர்த்த வரவில்லையென் றறிவீர்களாக - பின் வினு விரித்திருப்பதானது எதற்காகவெனில் உலகம் பெரி யோர் கைமாட் டொழுகுதலென்னும் முதுமொழி மந்தி ரத்தின் படிக்கு ஒட்டி நடக்குகின்ற பல்கோடி சற்சனர் களாகிய மக்கள் வஞ்சக ஏமாற்றமென் றுணராதவர்க ளர்ய்,பிரம்மம் நான்தான் என்றுசொல்லித் திரியும் பாவி யர்கள் கையில் சிக்குண்டு அனியாயமாகப் போய்விட் டார்களென்றும் இப்போதும் இனிமேலும் அனியாய மாகப் போகவிருக்கின்ற பல்கோடி மக்களுக்காகவே - அவர்கள் அறிந்து விளங்கிக்கொண்டு பாவக்கடல் அலை யென்னும் பாவியர்கள் கையில் சிக்காது தப்பித்து நற்கதிக் காளாகும் பொருட்டா யெண்ணியே உணர்த்

நியதானது - இங்ஙனம் கணித்தற்கரிய அரும்பெரும் நிலைகளாகிய கலைகள் அறுபத்து நான்கிற்கும் அப்பாற் றுண்டி மேம்பட்ட ஓர் கலையாகிய வேதங் கடந்த செழும்புனற் சலாசன அரசு பீடமாகிய திருவிச்சென்னும் சிவசிகரக் குரசலங்கிர்தப் பிழம்பென்னும் - அந்தப் பிரம்மரந்திர அதிமகோன்னத நிலையை - எங்கள் நாயகமவர்களின் மெய்வழித் தலையுக ஆண்டு முப்பத்தி ஏழாம் வருடமாகிய கி. பி. ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பத்தி ஏழாவது ஆண்டில் வால்மிக ரிஷியவர்களின் சமாதி ஸ்தலமாகிய சால்மல்கூள மென்னும் சீதளிப் பொய்கை வளனாட்டுத் திருப்புத்தூரில் தங்களின் திருவளர் ஞான சபா நிலையத்தில் இறை திருவடிசேர் தமது பெருனெறி மெய்வழிக்குல மாணவ ரனைவர்களின் சுப அனுபவ வினைக் குறைத்தும் பொருட்டாய் நாங்களாகிய சிஷ்ய கோடிகள் மகிழ்ந்து சூழப்பெற்ற மெய்ஞ்ஞான மகாசபை மேடையின் பிரம்மோதய சலாசனத்தே கொலுவிற் றிருந்துகொண்டு அமரும் அதிசய அதிசயமென் றாரவாரித்துப் புட்ப மாரி பொழிய புட்பப் பந்தரிற் றேன்மாரி பொழிந்தது போன் பேசிவந்த கலைக்ஞான போதம் இரண்டாங் காண்டத்தின் செய்யுள் -

விளங்குமென்றன் ஞானசபை மலர்ந்து ஓங்க
வேதகுலென் மைந்தர்குடி தழைக்கக் கேளீர்
புழங்காத பேர்கலகில் உங்கட் கென்றே
புகலுகிறேன் கேட்கமதி அதிகம் வேண்டும்

என்ற இந்தச் செய்யுளிலிருந்து தொடங்கிப் பத்தாவது செய்யுளாகிய -

விற்பதுவே பனைரதுவுந் நலேகி யூாக
வினிலிமிப் பூமிவரை பாய்ந்து ஓடிப்
பொற்றும ரைக்கரையென் றிருக்கு தந்நா
புட்பகெந்தி மரமென்று இதற்குப் பேராம்
கற்பகமாந் தருவிதனைக் கண்டா யோடா
கண்காறு விட்டாக்கா லேனி கேள்கேள்
சொற்பமென்று இதனைஎண்ணிப் பேசி டாதே
சுருதிமுடி வானபொருள் துலங்குந் தானே

என்னும் இந்தப் பத்தாவது செய்யுள் வரைக்கும் துலக்கப்பெற் றிருப்பதைக் கூர்ந்து அதனுள் அடங்கி யிருக்கும் பரிசுத்த உட்பொருள் வியாக்ஞானத்தை இப்போது இக்காலத்தில் எங்கள் சிவகுரு வரதபிரா விடத்தில் ஙங்கள் அன்று-டகந்துலங்க விளங்கப் பெற்றது போலவே - ஆக்ஷேபம் வருபவர்கள் இவ்வுல கிற்கு எக்காலத்தும் தெய்வத்திருநாட்டிலிருந்து இறங்கி வந்து விளங்கத் துலக்கிக்கொண்டிருக்கும் அரிய சோங்காகிய மெய்ஞ்ஞான ஓர் சிவகுரு பிரானை ஆய்ந்து தேடி அவர்களின் செழுந் ஸீதள மனே னைக்கிற் கிணங்கி மேலே குறித்திராவின்ற பத்துச் செய்யுள்களையும் வருங்கால மக்கள் எல்லோரும் விளங் கிக் கொள்வார்களாக -

மேலே குறிக்கப்பெற்றுள்ள கடுங்கார விம்ம லென்னும் உகம்புதலானது எக்காலத்தும் எத்தன் மைத்தும் கணித்தற் கியலாததும் வரம்புகோடு காண முடியாததுமான கடூரமான பெலங்கொண்டு விம்மிப்

பணைத்து எழுந்து ஓங்கிய ஓங்கார ஒலியுடன் கிளம்பிப் பெருத்துச் சென்று கொண்டிருக்கும் பிரம்ம விம்ப முதற் பிரயாணமானது தன்னுடைய விண்ட மறைபடாப் பெருவாழ்வானது ஈதென்றும் கோடிகோடிகோடி காலங் கோதற்ற சிரஞ்சீவிச் செல்வச் சிவபுரச் சிறப்பாகிய சர்வக்ஞத் தன்மையை விவேக வேதவிரத விதிவழியாக விளக்கிக் காட்டுவதற்கென்றே சர்வலோகங்களையும் சர்வஜீவ சர்வ சேதனசேதனப் பொருள்களையும் விளங்க விளக்கி விரித்துப் படைப்பதற்காக அவ்வுசும் புதலானது முதற் பிரயாணத் தோற்றமாக எழுந்து கிளம்பினது —

இவ்விதமாக எழுந்து கிளம்பிக்கொண்டு செல் லும் பிரம்ம விம்ப கோளமானது கடிகைக்குக் கடிகை வேகம் அதிகரித்துக் கொண்டு கனவேகங் கொண் டெழாநின்ற வலிமையானது இப்பெரும்பூமிப் பரப்பும் இதனுள் வயங்கும் மலைகடல் முதலாய பளுவனைத்தை யும் ஒன்றுபடச் சேர்த்து இறுக்கிச் சிறுத்துத் திரட்டி உயரத்திலிருந்து அதன்மேல் திடீரெனப் பளுவேற்றி னாலும் அங்கு எழும்பிக்கொண்டு சென்றிரா னிற்கும் அவ்வுசும்பி ஏறுதலினுடைய ஓர் அணுவும் அல்லது அணுவினுக் கணுவேனும் திகைத்துத் தடைபடச் செய்யமுடியாமல் ஏற்றிய பளுவானது அப்புறப்படும் படி எழும்பிக்கொண்டே செல்லும் வலியுடையதாயிருக் கும்-இன்னும் அவ் வலிமையானதைச் சுருங்கச் சொல் லுமிடத்து-வெளித்தொடர்பு சார்பு உதவிப் பிரேரணை கொண்டில்லாது குறித்தபடி தன்னைத் தானே தூக்கிக்

கொண்டு செல்லும் வலிமை யுள்ளதெனக் கூறினும் இந்த உவமானமும் அதற்கு விகசில்லாததாலே உவமானமே அற்ற ஓங்காரப் பெரும் பெலவலிகொண்டெழும்பும் உசும்புதலென முடிக்கின்றோம்-

இவ்வண்ணமாக அனேக நெடுங்காலம் வரைக்கும் அவ்வுசும்புத லெழும்பிச் சுழன்றுகொண் டேறிப் பேரண்ட முகடுவரை விரம்பிக் கனவேகங்கொண்டெழும்பின விம்மலினலே எக்காலத்தும் எத்திறத்தும் எக்கணிதத்தும் எட்டித் தீண்டப்படாத பெருகு கிரணமானதுமிகமிகப் பெருகிய பெருக்கெடுத்துக் கொண்டே விரிந்தோங்கி வந்தன-அன்றியும் வரவர இமைக்கிமைமென்மேலும் அதிவேகவேகங்கிளம்பித் தாண்டிய தரங்கடந்து எல்லை வரம்புகோடு காணு தோடிற்று-அங்ஙனம் விசிவிடப்பெற்ற கடுங்கார வேக வீச்சினலே விண்ட யுகாந்தப் பிரளய கால முடிவு காணுகின்ற ஓர் ஞள் முடிவு காலம் வரைக்கும் ஒழியாது உறங்காது ஓயாது அழியாது அகலாது அயராது எப்பெரும் பாரப் பளுவனைத்தையும் தூக்கிக்கொண்டு மேலே கூறியிராவின்ற கடுங்கார வேக வீச்சினலே சுத்தானது ஓடிக்கொண்டே இருக்கும்-இவ்வண்ணமாக ஓங்காரம் படைத்துக்கொண் டோடிவிற்கும் கடுங்கார சூல் பனைத்து-சர்வ லோக சேதனசேதனக் கோடிகளும் வசித்து வந்த தனது நெருங்கிய இருப்பிடம் இளகிக் கக்கி விடுகின்ற ஜனன முதல் ஆரம்ப காலத் தருவாய் நெருங்கி வந்துவிட்ட படியினலே சர்வ சாட்சியும் சர்வக்ஞத் தன்மையும் அன்றின்றும் என்றும் ஒன்றுவ

தாரப் பொன்ருத உதயம் ஆதி முதற் காரணக் கருவி யான தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதியாகிய னுரரொளியென்னும் தெய்விக ஏகரூபக் கிரணப் பிழம்பை வெளியாக்கினுன் -

ஆதியோதயந்தனைப் பருவம் நிறைவேறிற்று

ஆதி யோதயப் பருவம்

ஆக்கி யோனந்த வல்லிரு ளுள்ளிருந்
தூக்கி யேவெளி யாக்கிய னுள்த்தலே
னேக்கி யேனுேக்கு னேக்குடை னேக்கெலாம்
ஆக்கி யபிர வாகமிங் கோதுவாம்

அங்ஙனம் வெளியாகி யிரானின்ற பிரம்ம பிரகாச மானது - அண்டரண்டங்களெல்லாம் நிறைந்த ஏக கோடி சூரிய கிரணேதயமாய் ஏகப் பிரளயப்போ லெழுந்து ஏகமாக னெருங்கி தேசோமயமாகத் திரண்டு விரிந்து விரி விற்கின்ற ஏகரூபப் பேரொளிப் பிழம் பானது - தனது பூரண அலங்கிர்த அழகிலங்க எங்கும் கொப்பளித்துக்கொண்டு பெருங் காரிருள் னெரிய தன்னுடைய ஒப்பற்ற வேகம் தங்கிய னெடிய கிரணக் கரங்களைப் பகிரண்ட உச்சி வரை விட்டித் தடவிற்று - அங்ஙனம் தடவியதானது இங்ஙனம் இன்ஞள் சத்திய னகரமாகிய தெய்வ மெய்வழிச்

சாலையை உண்டுபண்ணி உதயம் செய்திராவின்ற வித்து ஞயகம் அண்ணல் பொன்னரங்க மணிமேடைக் குத் தேடிவரும் னன்மன சற்சனர்களின் பிறவிப்பிணி என்னும் மகா அந்நகாரமாகிய மாரன் இருளை இங்கே இன்று கடிந்நோட்டி அருளமுதூறல் - உலாவித் தடா வுதலாகியது - அங்ஙனம் அன்னுள் தின்னாங் னொண்ட னெடும் பேரிருள் கடிந்து பின்னும் இரு துருவங்களும் இயங்கிக்கொண்டிருக்கும் அசைவுகோடாகி எழும்பும் அந்த ஆணிக்கோட்டின் திரட்சி எல்லைக்கு ஒதுங்கி ஓடென ஓட்டிவிட்டு - பேரண்ட முகடெலாந் நடாவிய பெருங்கிரணப் பெருங்கருணைப் பேரருள் பெருஞ்ஞூரப் பென்னும் பெரும்பதிப் பெருங்குணப் பெருந்துணைப் பெருந்தெய்வமாகிய பெருஞ்ஜோதியானது முதல் முதலாக அது என்ற ஞமமும் ஆதி என்ற ஞமமும் பிரகாசித்துக்கொண் டெழுந்து னின்றன - அப்போது பன்னெடுங்கால காலங்களாக மாருது னிலைத்துக் கொண்டிருந்த செறி இருள் திமிரமானது சிதைந்து மாறி மறைந்து ஓடி ஒதுங்கி னின்றன -

இவ்வாருக மேலே கூறியுள்ள அவ் வுதயமானது சர்வ அண்ட ரண்டங்களும் பூதல பாதாள முதலாகிய சராசரங்க ளனைத்தையும் தன்னுள் சூலாக அடக்கிக் கொண்டு வெளியே வந்துவிட்ட படியினலே சூலி யென்றும் சூல் என்றும் விளங்க னின்றது - மேலும் இறைவனிடத்திலிருந்து வெளியாகிப் பிறந்து விட்ட படியினலே இறைசூலென்றும் திரிசூலியென்றும் ஞமம் பிறங்கா னிற்பதுடன் ஒருங்குதிரண்ட சத்தினி

யென்றும் ஹக்கிகத்து முகம்மதுவென்றும் திருநாமங் களைச் சூடிவின்றன - இங்ஙனம் மகா மகத்துவம் பொருந்திய தனிப் பெருங் கருணையால் வெளியாகி விற்கும் அருட்பெருஞ் ஜோதியாகிய பேரொளிப் பிழம்பை அறுகூருகப் பிரித்து ஐந்து ஒன்று ஒன்று ஒன்ருக முன்னேனவன் தன்முன் இருபாகத்திடத் தும் முக்கூறு விலையமாகியும் யாவரும் சந்நிய வந்தனங்களாக ஆக்கி - நெடுங்காலங் கடந்து - அவ் விலையங்களைத் தனது வல்லபத்தினலே முத்தான அண்டமாகத் திரட்டி அதனை மயில் வடிவமாக ஆக்கி - பின்னும்அம் மயிலினுக்குத் தனது அகமிய அமலானது தோற்றப் பிரவாக உதயம் உண்டாகுவதற்கான காரணக் கருவியாகிய கசங்கி விசர்வை எழானிற்கும் ஓர் பயங்கரத்தைப் பதிப்பித்து அதனல் வெளியாக்கப் பெற்ற ஜலப் பிரளயப் பிரவாகத்தினலே தனது திருப் பள்ளி சிங்காசன அரசு கொலுவும் கதிர்மதி அமரர் கோடிகளும் நட்சேத்திரம் மின்பனி அகிலாண்ட கோடி பிரம்மாண்ட அண்ட ரண்டங்களும் படைத்தான் - அதனுள் வயங்கும் மலைகடல் ஆறு அருவி வனம் வனந் தரங்களும் யானைமுதல் எறும்புகடை எண்பத்துநான்கு நூருயிரம் ஜீவ பேதங்களையும் படைத்தான் - அவைக ளுக்கு அதனதன் தாரதன்மைக்கு வேண்டுவனவாகிய பலதிறப்பட்ட வேறுவேறு காரசார உணவுக்கோடி சங்கங்களாகிய இரணங்களையும் படைத்தான் -

அங்ஙனம் படைத்த நடோறும் புதியவனுகிய ஏக நாயகனைவன் தான் வெளியாக வேண்டிய

காருண்ய னுட்டத்தின் காரணத்தினுலே தனது பேரொளிவென்னும் சத்தினி ஒடிபிபின் சூரத்தாகிய வடிவத்தில் மனிதனைப் படைக்கவேண்டி -அதற்கு முதற் காரணக் கருவியாகிய அயாத்துல் கைபு என்னும் ஆத்தும மர்ம ஜலக்கடலை அவ்வொளியினின்றும் படைத்து மனித கோலத்தைப் படைப்புண்டாக்கினு னென்று அறியக்கிடக்கிறது - மேலும் அந்த ஆத்ம மர்ம ஜலக் கடலினுடைய சத்வாடையானது மனித கோலத்தில் கலந்து தோய்ந்துவிட்ட படியினுலேதான் அந்த னுடோறும் புதியவனுகிய ஏகநாயகனை அறியும் சக்தி யானது மனிதனுக்கு லபித்துக் கொண்டு விட்டது என்று இங்ஙனம் விறைதவழ் சுவானுபவத்தில் கைவந்த வரவென அறியக் கிடக்கின்றன - அன்றியு மக் காரணத்தைக் கொண்டேதான் மலைகடல் யானை முதல் எறும்பு கடை எண்பத்துநான்கு நூருயிரம் ஜீவ ராசிகளும் இன்னும் அமரர் கோடிகளாலும் ஏற்றுக் கொள்ள எங்களால் முடியாதென்று கைவிடப்பெற்ற தத்துவாநிதக் கைமுதலாகிய சிதனமென்னும் அமானி தத்தை மனிதனுனவன் ஒன்தான் இதற்கு முழு யோக்கியதையும் சக்தியும் உடையவனென்று வாக்குத் தந்து கையேந்தி வாங்கிக் கடமை பூண்டுவிட்டதானது இப்போது விருபனையில் விளங்கிக்கொண்டிருக்கும் இவனது தூல தேக மெடுப்பதற்கு மூன்காலமாகியும் இப்போது னமது போக்குவரத்து னுடாகவுமிருந்து விளங்கிக்கொண் டிருக்கின்ற சிவபுரத் திருவளனுட்டில்

ஜீவதேகமாக நெடுங்காலமிருந்த அந்த ரோஸ்மீதாக் குடைய னுளில் இவை நடந்ததென அறியக்கிடக்கிறது -

இந்தப் பிரகாரமான உன்னத லாயக்குடைய மனிதனுகி விட்டபடியினுலே அக்கடமையை உணர்ந்து மனிதனுனவன் கலப்பறுதலாகிய சாந்தியென்னும் சலாமத்தை அடையும் பொருட்டாய் - இந்த உலகத்தில் அறிந்தவர்களுக்கும் அறியாதவர்களுக்கும் ஒன்று போல் நடாத்தும் கருணை மூர்த்தியும் அகத்தினிடத்தே அறிந்த அன்பர்களுக்கு அவ்- வுலகத்தில் தனது சொந்தக் கிருபையாளனுகிய காருண்ய மூர்த்தியும் ஏக நயகனுன இறைவனுனவன் தன் முன்னிலையில் மேனுள்ப் பிரித்து வைத்திருந்த - ஆறு ஐந்து ஒன்று ஒன்று ஒன்ருன இருபாக முக்கூறு - னிலையங்களை மனிதனின் ஒய்விலாப் புனலூறிய புனற்றுறைக் கோயிலென்னும் இதய தடாகத்தினிடத்தே அருப வடிவத்தில் பதிப்பித்து - அதற்கு னன்கு கபாடங்க ளிட்டு மூடிக் கெட்டித்தாள் வட்டப்பூட்டிட்டுச் சாவியைத் தன் தெரிசியர்கள் கையில் கொடுத்து அப்பூட்டின் மேல் னீக்குதற்கரிய கருப்புத் திரைகளிட்டு மூடி அதன்மேல் மூன்று பெரும் கருங்கற்பாறைப் பருவதங்களைத் தூக்கி வைத்து அதற்கு மேலும் அசைத்தற்கியலாத சைலனிறச் சலனத்திரைகளிட்டு மூடிப் பின்னும் னன்கு திசை எட்டுத் திக்குப் பதினுறு கோணங்களிலும் புக அணுகுவதற்கரிய காவற்பாடுகளையும் னிறுவித் தானும் அதனுள்ளே குடியேறிக் கொண்டு விட்டான் -

இவ்வாறு தான் அரூப வடிவத்தில் குடியேறிக் கொண்டிருப்பதை ரூபத்தில் வந்து விட்ட மனித னுக்கு ரூபத்தில் தெரியப்படுத்த வேணுமென்ற ஒரு தனிக் கருணைப் பிரவாகத்தினாலே தனது ஞட்டத்துள் புதையலாகக்கிடந்த அருண்மணி கொழிக் கும் திருமறையாகிய. வேதத்தைத் தமது தெரிசியர் களின் மூலமாக இறக்கி மனிதனுக்கு விதியாக்கி வைத் திருக்கும் அத் திருமறையில் இறைவன் சொல்வதானது- னான் உன்னிடத்தில் ஒரு தலைமுறை காலமட்டும் குடி யேறி யிருக்கிறேன் - னீ - என்னை அறியமாட்டாயா என்றும் இங்கே னீ என்னைப் பார்க்காவிட்டால் அங்கே னீ விழிகுருட னாகவேதான் இருப்பா யென்றும் இதற் கன்றியே அல்லாது மனிதனை னும் வீணுக்காகப் படைக்கவில்லை யென்றும் மனிதனைவன் என்னுடைய ரகசியப் பெட்டகம் என்றும் மனிதனுடைய இதயத்தி லன்றி னான் வேறே எங்கும் வெளியாகிறதில்லை என்றும் னான் ஆதத்துடைய சூரத்தைக் கொண்டு வெளியாகி இருக்கிறேன் என்றும் ஒன்னில் இருக்கும் என்னை னீ பார்ப்பதற்காக உன்னை னீ அறியாவிட்டால் உன்னை னான் மனிதனென்று படைத்ததாக என் முன்னால் னீ - னிரூபிக்க முடியாது என்றும் - இன்னும் இவ்வண்ண மான திருவசனங்களால் எடுத்து ஓதி இருப்பதன்றியும் வேதச் சிகரமாகிய னும் முதல்முதலாகக் கடமைபூண்டு கற்று ஓதி வருகின்ற மூலமந்திரத்தில் சந்தேகமறத் திட்டவட்டமாகக் கண்டறிந்து சாட்சி சொல்ல வேண்டு மென்றும் இதனை இலேசாகவே கவனிக்குமிடத்து

அங்ஙனம் திட்டவட்டமாகக் கண்டறியாது - போடு போக்காக இருந்து கொண்டு வாயினல்ச் சொல்லிக் கொண்டிருக்கும் மூலமந்திரமானது பொய்ச் சாட்சி சொன்னதாகவே முடிவாகுமென்று னமக்குப் புலப்பட வேண்டி ஸ்பஷ்டமாக எடுத்துக் காட்டிக்கொண் டிருப்பதன்றியும் அங்ஙனம் கண்டறிந்து சாட்சி சொல்வதற்கு முதற்பாட்டை விதியாகிய ஆறும் ஐந்தும் பதினெரு காரியங்ஙளேயும் தன்னில் அறிந்து வணங்ங வேண்டுமென்று கட்டளே விதித்திருப்பதானது - இங்ஙனம் ஆறும் ஐந்தும் பதினெரு காரியங்ஙளேயும் தன்னுடைய இதய லோகத்தின் கதவானது திறப்பிக்கப் பெற்றுக் கல்பென்னும் னெஞ்ஞில் பிரம்மப் பிரகாச மனக்கண் திறந்து - என்னுளும் னிலேயாய் வலிமைப் புதுமை சிந்தும் கிரணக்கதிர்விட் டிலங்ங மாரூது காணப் பெறும் எக்காலமுமுள்ள ஏகனுயகனே மறைபடாத் தெரிசனேயுடனே அறிந்து வணங்ஙும் வணக்கமானதே இங்ஙே சத்திய னகரமாகிய மெய்வழிச் சாலே யென்னும் திருவளர் தேவபூமியில் கைவந்த வரவென சுபா அனுபவத்தில் மலிந்து கிடக்கின்றன -

அன்றியும் இவ்விதமாக விதிவெளியாக்கிய கருணைக் கடலோனுகிய இறைவனுனவன் னம் தன்னே யறிவதற்கு இதைய லோகத்தைத் திறப்பிக்க வேண்டித் திறவுகோல் கைவைத்திருக்கும் பாரவான்ஙளாகிய மகத்துக்களேத் தேடித் தொடர்ந்து பெற்றுக்கொள்ளும் பொருட்டாய் னமக்கு வெளியாக்கி வைத்திருக்கும் திருமறைகளில் இறைவனுனவன் கற்பனே இட் டிருப்பதா

னது – எல்லா உலகங்களுக்கும் எல்லாக் காலங்களுக்கும் ளும் கலீபாக்க ளென்னும் தீர்க்க தெரிசிமார்களை அனுப்பிக்கொண்டே யிருக்கிறேமென்று உரைத்திருப்பதற்கிணங்க – லட்சத் திருபத்து னுன்காயிரம் னபிமார்களில் ஒருவராகிய சர்வக்ஞக் கண்ணபிரானவர்கள் இயற்றிய தங்கள் பகவத் கீதை யென்னும் கிரந்நத்தில் – இவ்வுலகுபடு அழிதுயர் தீர்ப்பதற்கு – ஓவாது வந்து பிறந்நிடுவேன் யுக யுகங்கள்தோறும் என்று ஊணியிருப்பதைக் காணப்படுகின்ற இவ்விரண்டின் தெய்வீகத் திருவசனப் பொருத்தத்தைப் பலன் கைவரப்பெற்ற எம்மவர்களாம் சாலேவாசிகள் னின்று னேக்குமிடத்து – அதனுடைய பெருந்நிறன் னிலேயும் அசைவற்ற பேதமில் பெருனெறியும் மாசிலாச் சுத்தமும் – புருக்கான் என்னும் வேதத்தில் இரண்டாவது அத்தியாயம் னலாவது ஆயத்து 'வல்லதின' என்னும் வாக்கியத்தில் துலக்கிக் காட்டிக்கொண்டு னிற்கும் மேம்பாட்டின் சமத்துவ உண்மையும் குறைவற்றிருக்கும் விசால னேக்கும் ஒரே இறைவன் தான் என்று வாயில் மட்டு மின்றி செயலிலும் வந்நேதான் தீர வேண்டு மென்று தோற்றிக் கொண்டுனிற்கும் சேர்மான அரும் பிணிப்பும் – இன்னும் வேறு படுத்தற்கியலாத அவ்விரண்டும் பொருந்நப் பெற்றிருக்கும் னெருக்கத் தொடர்பை ஊன்றி னேக்குமிடத்து அதனே வேறுபடுத்தற் கெண்ணுகினும் அவ் வெண்ணமானது அவ் விரண்டில் ஒன்றிலேனும் பலன் பெருது இரண்

டும் கெட்டலேயும் அலகையின் எண்ணமென்றே துணிந்நுபேச எடுத்துத் துலக்கிக்கொண் டிருக் கின்றன - இன்னும் அதாகிறது வண்டியின் சக்கர மாகிய கும்பத்தில் இறுக்கப்பெற்றிருக்கும் ஆரக் காலின் தொடர்பாகியதின் மேல் துளையிட்டுப் பதித் திருக்கும் வட்டையைப் போன்ற அடிமையானவன் இரும்பின் பட்டாவைக் கொண்டு காணப்படும் வெளிப் புறத்தே கட்டுறப்பெருது ஓடும் வட்டையானது கும் பத்தின் னேர்முகத்தை விட்டு உழன்று பிதுங்கி னெரிந்நு உடைந்நு தீய்க்கிரை யாகுதல் சரதம்- அங்ஙனம் அன் னெருப்பிற் கிரையாகாவண்ணம் இறைவனல் இப்பூமிக்கு இறக்கிக்கொண் டிருக்கும் ஆண்டகுருவென்னும் அயப்பட்டாவி னுடைய உதவி மேவப் பெற்று உள்ளடங்ஙிக் கொண்டு சுற்றிவரும் வட்டையைப் போலே மனிதனுனவன் முடிவில்லா இறைவனுகிய சாகாத்தலே என்னும் அக்கும்பத்தின் முகத்துப்பார்வையை விட்டு எக்காலத்தும் மாருதவ னுக ஆரக்கால் வலுவென்னும் தான் பற்றியிருக்கும் வேகாக்காலென்னும் திருப்பாதத்தினுடைய தன் வைராக்கிய தவோபலத்தினுலே ஈசனென்னும் கும்பத் திற்கு னேராகவே எண்ணிறந்த யுகங்ஙோடி கால மானுலும் தபுரென்னும் சக்கரம் சுத்தி வந்நு கொண் டிருப்பது போலவே சத்திய னகரமாகிய சாலே வாசி களாக இங்ஙே புகுந்நுகொண் டிருக்கும் சீவேசர் களின் தூல உடலானது தேவத் திருவிளேயாடலுக்

காக சுத்தி வந்நு கொண்டே இருக்குகிறதென்று இங்ஙனம் சுபா அனுபவத்தில் அறியக்கிடக்கின்றது -

அன்றியும் மேலே தொனித்துக்கொண் டிரா னின்ற எக்காலங்ஙளிலு முள்ள னமது பரிசுத்த வேதத் தீர்ப்புக் கிணங்ங வேத வேதிய ஞதஞதாந்த போத போதக மகத்துக்கள் பேசியிராணிற்கும் கிரந் நங்ஙளாகிய சுத்த வாக்கியம் கீதை குறள் வாசிஷ்டம் முதலிய எல்லா முன்னெடுங் ஙாலங்ஙளிலுமுள்ள ஆங் ஙாங்ஙு பல பாஷைகளிலும் உதயஞ் ஞெய்துள்ள எண்ணற்ற யோக்கிய அரசர்களாகிய பாரவான் ஙளுடைய னூற்களிலும் காணக்கிடப்பதானது - மக்களுக்கு அந்நகாரமென்னும் இருளிருப்பாகிய இதய லோகத்தைத் திறப்பித்து அவ்விருள் கிழிய னெரித்து ஓட்டிவைக்கும் ஓர் மெய்க் குருபிரான் எவனெருவனுக் கில்லையோ அவனுக்கு சன்மார்க்கமே இல்லை என்றும் இன்னும் எவனெருவனுக்கு அப்படிக் குருவைப் பெற வில்லையோ அவனுக்குக் குரு னிறையிருள் மலிந்த சைத்தான் ஒருவன் இருப்பனென்றும் இன்னும் அப் பேர்க் கொற்ற அருட் குரு பிரானுடைய உண்மை யைத் தெரிந்நு கொள்ளாத ஒருவன் செய்து வரும் பூசை விரதம் தொழுகை அனுஷ்டானம் தர்மதான தவமுதலாகிய செய்தொழில் விவாகம் சந்நதி யனைத் தும் இரு கரைகளும் மீறிப் புரண் டோடும் பிரவர்க் மான னதியில் ஒரு சல்லிப் புளியைக் கரைத்து விடப் பட்டதின் தன்மைகூட இன்றி முழுமூடப் பாவ வியர்த்த மென்றும் இதனன்றியும் ஆண்ட குருவைத்

தேடி அறியாதார் செய்த தவம் மாண்ட மரத்திற்கு மண்ணணைத்து னீர் வார்த்த லொக்குமென்றும் தலைப்பட்ட சற்குரு தாள் சேர்ந்நாற் கல்லால் வலைப் பட்ட மானதுவே யா மென்றும் தவங்களால் தெய்வ னீரால் சாஸ்திரங்களினுல் போகாப் பவங்கள் விட் டுயர்ந்நோர் பாதம் பணிந்து பற் றறுக்க வேண்டு மென்றும் குருவைத் தொழான் மனுக்குப்பைகள் என்றும் குருவிலான் பெற்ற ஞானம் குமரியைக் குமரி கூடிய தென்றும் இன்னும் இவை போன்ற மெய்ன் னெறி வேதாந்நக் கிரந்நங்களில் பரந்நு காணப் பெறும் இம் மொழியானது எம்மனோர் கைவந்ந அனுபவத்தி லிருப்பதன்றியும் எக்காலத்தும் மாருத சத்திய வாக்குகளி லொன்ருகும் - இதற்குச் சான்ருக இப்பெரும் பூமிப் பரப்பிலுள்ள பல தேசங்களிலும் பற்பலவாம் அந்நந்நக் காலங்களிலும் உலக மக்களைத் தினெறியினின்று மீட்பித்து னன்னெறிக் கண் புகுத் துவான் வேண்டி இறைவனுடைய சொந்நத் தனது கிருபையாளராகிய இன்னும் இறைவனிடத்தே னமக் கெல்லாம் சிபார்சு செய்வதற்கு முழு யோக்கியமும் பெற்று வந்நவர்களாகிய தீர்க்கத் தெரிசியர்களும் - அவதார புருஷர்களும் னபிமார்களும் சமையாச்சாரி யர்களும் மதஸ்தாபகர்களும் ஞானதயாபரரும் முனி வர்களும் ரிஷிமார்களும் ஜீவன் முத்தர்களும் இன்னும் இவ்வண்ணமாக அனேகம் பல ஞமங்கள் மெய் யெழில் வளம் பிறங்ஙானிற்க இவ் விசாலந் நங்ஙிய

பெரும் பூமியில் உதயம் செய்திரானின்ற மெய்ன் னிலைப் பயன்றரும் வழிகாட்டியர்க ளாகிய குரு பிரான் என்னும் பாரவான்ங்கள் எவ்வுலகத்தும் எக் காலத்தும் தோன்றி மக்களின் பக்குவங்ஙளுக் கேற்ற வாறு ஆங்ஙாங்ஙு இகபர ஞான போதனைகளைச் செய்து அவர்களை மெய்வழியில் னடப்பித்துச் செல்லச் செய்திருக்கின்றார்கள் - உலகத்தில் தர்மத்திற்குத் தாழ்வும் அதர்மத்திற்கு வளர்ச்சியும் ஏற்படும் காலங்ஙளி லெல்லாம் இறைவனுடைய அருட் பிரவாகத்தினாலே அவனுடைய திருமறைகளிலெல்லாம் ஊன்றியிருக்கும் வாக்கின்படியே மேலே கூறி வந்துள்ள குருமகான்ங ளென்னும், னித்திய சூரியர்களாகிய பாரவான்ஙள் மக்களுக் கிடையில் வந்து பிறங்ஙுவார்கள் என்பது வேத வேதாந்நக் கிரந்நங்ஙளின் அனுபவ சாட்சியாக மக்களனைவரும் ஒப்புக்கொண்டு வருவது சத்தியம்.

ஆதியோதயம் விரைவேறியது

அழிகலிப் பருவம்

தற்கால இந்தியத் தாய் ஞடு

[கி.பி. 1929-30வது வருடத்தில் எழுதியது]

சத்தியங் ஙடந்து தலைதடு மாறி
சாதிகெட் டழிவெறி மீறி
னித்தியக் கொடுமை னீணிலம் படர்ந்து
னிசத்தவர் னெறிபுறக் கணித்து
மத்தியப் பொடியர் புகைத்தலைப் புடைத்து
மிலாறது பூத்தகே டகந்நை
கத்திரி மூடர் புரள்கலிக் கடையின்
கதித்ததற் காலமிங் ஙறைவாம்.

னிறைந்த ஓசையுடைய விரிந்த கடல் சூழப் பெற்ற இன்னில உலகத்தின்கண்ணே அந்நந்த முன்னெடும் பழங்காலந் நொடுத்து தெய்வப் பழம் புலமைப் பாரவான்ஙள் அனந்நானந்நம் உதயம் செய்து தவத் தீபாதிவளம் சீர்செழித்தேறி வந்து கொண் டிரானின்ற செழும் பொங்ஙலானது ஓங்கும் னமது இந்தியத் தாய் ஞட்டினிடத்தே இதற்கு மேற்குப் பாகத்திலுள்ள பல ஞடுகளில் வெட்ட வெறும் முரண்டாட்டமென்னும் பஞ்ஞேந்திரிய லோகாயதக்

கண்டம் கீழக் கோடி சூரியதிசை ஸிப்பான் ராச்சி யத்தில் மட்டும் - ஸுஸ்த்திக னூல் முதலானவைகள் உள்ளே வரக்கூடாதென்று கண்டனம் இருந்ததாகக் கேள்வி இருந்நதைத் தவிர அதனைத் தடுத்துப் போர் புரிந்து செயிக்கவல்ல தெய்வ பக்தி வீரம் பொழிந்த தேசாதிபத்தியம் செங்கோலோச்சு மன்னர்களும் தமது கடனெனக்கருதாது வாளாவிருந்து விட்டார் கள் - இன்னும் தேசத்தின் இயற்கை வளங்களை உழவுகொண்டும் - செயற்கை வளங்களை வாணிபங் கொண்டும் பெருக்கவல்ல வேளாண் மரபினரும் வணிக ரும் அயல்வியப்பும் வயிறுவளர்ப்புக்குமான விநோத வம்பாட்டுச் சண்டை வியாச்சியங்களிலேயே என்னே ரமும் பொழுதைப் போக்குகின்றவர்களாகி விட்டார் கள் - அன்றியும் வேதாகம னூலுணர்ச்சியும் முத் திக்கு எத்துகின்ற ஒழுக்கமும் ஜீவகாருண்யமும் போதிக்கவல்ல பட்டம்பெற்றவர்கள் நாங்கள்தான் என்று வரும் குருக்கல்மார்களோ அவர்கள் தங்க ளுடைய வயிற்றுப்பாட்டுக்கும் மதிப்பிற்கும் தேடி அலைவதற்கே போதாத வயதுடையவர்களாகி விட் டார்கள் - இதனன்றியும் உலக மக்களுக்குச் சேமம் பாலிக்கவைக்கும் வல்ல மேய்ப்பர் பரிகாரிகளென்று வந்த ஈர்க்கணர்களோ அவர்கள் அஞ்ஞாத வஞ்சுச் சதிமொழியின் பிணைப்புப் பாசாங்கு வேடத்திலும் மக்களை நம்பும்படிச்செய்து படுகுழித்துயரத்தி லாழ்த்தி விட்டு - தாங்கள் ஆசை காட்டித் தட்டிப் பறித்த பணப்

பேய்ப் புடைப்பேறியவதனுல் அழினல மதிப்பென்னும் திமிர் பூண்டு ஏழைகள் அழுங்கண்ணீர் கூரிய வாளென் ருராதவர்களாய் வாய்க்கொழுப்புச் சிந்துவதிலேயே தறிபாடாகி விட்டார்கள் -

இங்ஙனம் தறிபாடாகி னிகழ்ந்நு வருகின்ற கேட்டை இலேசாக னேக்குமிடத்து - பொல்லார்க்குக் கல்விவரிற் கெர்வமுண்டாம் அதனேடு பொருளும் சேர்ந்நால் சொல்லாது சொல்ல வைக்கும் சொற்சென்ருல் குடிகெடுக்கத் துணிவன் கண்டாய் - என்னும் பழங்நால முதுமொழிக் கிணங்கி செயல்பழுத்தோங்கி வந்நுவிட்டதினுலே வேதாகம னூலுணர்ச்சியும் குன்றிக்கொண்டே வந்நுவிட்டன - ஆனதினுலே இரக்கம் இன்றிய ஜீவ வதை - காமமெனும் பிறர் மனையாட்டி வாழ்க்கை - கவருடல் - மதுவுண்ணல் - புகை பிடித்தல் - பொய்ம் மொழிதல் - செய்னன்றிகோறல் - இராஜத்துரோகம் விளைவித்தல் - குருத்துரோகம் சமைத்தல் - பாலர் பெண்டிர்களை அவர்களுடைய இயற்கைக் குணதிசயங்களுக்கு மாருக உலகப்போருக்குத் தூண்டுதல் - மத வெறி கொள்ளல் - சமயப்போர் புரிதல் - வாய்ஞானம் பேசுதல் - பெரியோரைத் தூடித்தல் முதலாகிய மறச்செயல் அனைத்தும் தலையெடுத்து வளர்ந்நு வருகின்றன - மெய்ஞ்ஞான மகத்துக்களின் அனுக்கிரகத்தைப் பெற்றுப் பெருந்நவத்துறைந்நு சிவேசர்களாவதே அழிவிலா ஐஸ்வரிய வீடடைதலென்னும் னம்பிக்கைகொண்ட னம் இந்நிய மக்களிடையில் பரம்பரையாகப் பரவி வரும் குரு

கொள்கையை அடிப்படையாகக்கொண்டு பல னூற்ருண்டுகளாகத் தாண்டவமாடிக் கொண்டுவரும் ஞஸ்த்திகத் தன்மையானது ஞுளுக்கு ஞுள் அதிகரித்துப் பரவிக்கொண் டேறிவந்நதானது - எண்ணிறந்ந ஞான சித்தர்களும் சிவராஜயோகீஸ்பரர்களும் மகரிஷிகளும் ஜீவன்முத்தர்களும் தொன்றுதொட்டுத் தங்ஙளுடைய பூரண வாழ்க்கைய்யை னடாத்திக் காட்டிவந்நு சீர்சிறந் நோங்ஙும் மேலே கூறியுள்ள னமது புண்ணிய பூமியாகிய இந்நியாவின் தெற்குப் பாகத்தின் கண்ணும் அனந்நம் ஞுட்களுக்கு முன்னதாகவே - தெய்வந் நொழாத் தலையாட்டிப் பாவியர்களைச் சுடுகாடு தூற்றி ஞஸ்த்திக னென்று ஒரு சிலருக்கு மட்டுமே பேர் வழங்ஙிக் கொண்டு வந்நதானது - ஞுளுக்கு ஞுள் வர வர அதிகரித்து அது மக்கள் திரண்ட தீவிரச் செயலாக எழுந்து தீ விரித்து இப்போது சுமார் முப்பது வருடங்ஙளாகப் புகுந்து எங்ஙும் படர்ந்து வளர்ந்து ஓங்ஙி விட்டது -

அதனைச் சத்திய வாழ்க்கையினுலும் - சுவானுபவ சத்திய வாதங்ஙளினுலும் னிச்சயமாக வெல்லக் கூடிய பிரம்ம ஞானேத்தமர்களை - உலக மக்கள் தங்ஙளின் சிறு அழிவிளையாட் டென்னும் அந்நகாரத்தினுலே மேலே கூறியுள்ள மெய்ப்பயன் றரும் வல்ல மெய்ஞ்ஞானியர்கள் - இன்ன சக்நிக்கு உடையவர்களென்று உணர்ந்து அவர்களை உபயோகப்படுத்திக் கொள்ளத் தெரியாதவர்களாய் அலட்சியமாக எண்ணிக் கொண்டு புறக்கணித்து விட்டார்கள் - ஆசியாக்

எதார்த்தனும் திருடனும் - யோக்கியனும் போக்கிரியும் - கலைஞனும் கொலைஞனும் - ஆணும் பெண்ணும் எல்லாம் ஒன்றுதானென்றும் சம உரிமையும் ஏற்றத் தாழ்வற்ற சம்பத்தும் ஒத்த அனுபவமும் ஒரே குலமாயும் னெருங்கி இருந்து வாழ்வதோடுகூட - அரசை இகழ்ந்து அந்நணரைத் தூடித்து வணிகரை வதைத்து வேளாளரை வெருட்டிப் புல்லரை உகந்து - புலையர் கால் தழுவி குடியரைக் கும்பிட்டு வாழ்வதே மனித வாழ்க்கையின் உன்னதமென்று பாடங்கற்பித்து இவ்வித இழிசெயல் புக்கி னுத்திகம் பேசி னுத்தமும் பேறின கோஷ்டியார் னுசமாகுமென் றூராதவர்களாய் னுடெங்கும் தங்கள் கூட்டம் அதிகப்படுத்தும் பொருட்டாய் தங்களுக்குத் தோணுமலே திரளாக ஆட்களைச் சேர்த்து வருகின்றூர்கள் - இவை இங்ஙனம் னிற்க -

சரித்திரத்திற்கு எட்டாத காலந் நொடங்கி இதுகாறும் னம் இந்நியத் தாய் னுட்டின் மக்கள் பரம்பரையாய் குடியேறிக்கொண்டு வரும் சுருதி யுக்தி அனுபவ மொத்து முழங்கிக் கொண்டிராநின்ற அடிப்படையான மூலக் கொள்கையானது - ஒன்று - உண்டு -

அதாவது - மக்களுக்கு எளிதில் ஒழிக்க ஏலாததாகிய பிறவிப்பிணி என்னும் அனியாய மரணத்தை ஒழிக்கவும் - மேலும் அவர்களை அலகையாக்கி என்றும் னரகத்தில் தங்க வைக்கின்ற எமபடரின் செயித்தற்கரியதாகிய அவஸ்த்தை மேலிட்ட னரக அடையாள அச்சத்தினைச் செயித்தற்கும் ஓர் மெய்யருட்

பக்தியை ஆதாரகமாகக்கொண்டு பல வீணர்கள் எல்லா வேதங்களையும் தான் தேறி ஒப்புக்கொண்டவனைப் போலே - சிற்சில பொதுவார்த்தைகளை மட்டும் பேசிக் கொண்டு - ஏமாற்றிப் பெரியோர்களென்றும் - நான் யார் நீ யார் எனக் கூறிக்கொண்டு தாம் துறவிய ரென்றும் - கண்ணைப் படக்குப் படக்கென்று விழித் துக்கொண்டு கைச்சாடைகாட்டி வாங்கித்தின்று - எழுதிக்கொண்டு மகத்து ரிஷி என்றும் - அது வந்நது இது போனது என அஃறிணையாகப் பேசிக்கொண்டு நான் பிரம்மமென்றும் பொல்லாங்கு யோசனையால் தலை கவிழ்ந்துகொண்டு அந்நரத்தே ஆத்மா மிளிர்ந்ந தென்றும் - பதில் கூற முடியாது மாட்டிக் கொண்டு விழிக்கின்ற னேரத்தில் - ஆத்துமாவில் இருட்டடிக் கிறதென்றும் - தத்துவமசி அகம்பிரம்மாஸ்மி என்று கூறிக் கொண்டு பரத்தைச் சார்ந்நவரென்றும் - இரட்டுக்கந்நை கம்பளங்களை அரைக்கட்டாகக் கட்டிக் கொண்டு எல்லாரையும் ஏமாற்றச் சாது என்றும் இன்னும் இவ்வாருன பல கோலங்களாகத் திரியும் கள்ள ரிஷி யோகி ஞானியர்களும் கள்ள ஆலிம் சாமியார் மஸ்த்தான்களும் வாய்ப் பறை யறைந்நு- ஆரணச்சுமையை அறுசுவைக்கும் வேதம் பொதி யாய் விம்பு வம்பினுக்கும் விற்றுக் கொண்டு னம் தேசமெங்கும் செம்மறி ஆட்டுக் கூட்டம் போலே பரந்நு காணப்படுவதன்றியும் னஸ்த்நிகம் என்னு ளிருப்பினும் ஓர் னள் னசமே ஆகுமென்ரேராது னடு

னம் தமிழ் மக்களிடையில் னெடுங்காலந்தொட்டு உலாவி வருகின்றது –

இவ்வாறுள்ள னமது இந்நியத் தாய் னுட்டின் பூரண ஜீவ சுயராச்சியத்தைப் பற்றிய - னம் பண்டைக்கால மெய்ப்பயன்றரும் பூர்வீகக் கொள்கையை வேரறக்களைந்து வென்னீர் விட்டு அப்புறப் படுத்தி பஞ்சேந்திரிய இப் பூலோக மாளும் அரசு கோலாகிய இக வாழ்க்கையில் மின்னொளி போல் கண்ணைக் கவரும் படியான சாதனக் கருவிகளும் இன்னும் கோட்டை கொத்தளங்கள் னகரங்களையும் னுசம் செய்து தகர்த்தெறிய வல்ல பளுப் பெலங்கொண்ட ஆயுதங்களும் - அன்றியும் ஜனங்களைக் குப்பல் குப்பலாகக் கொல்வதற்கு ஆச்சரீகரப் பயங்கரமாகிய பல திறப் பலவர்ணப்பட்ட ஆயுத ரகங்களும் தேர்ந்து செய்வதில் மிகு சாமர்த்தியம் கொண்டுள்ள மற்றைய தேசங்களி லுள்ளவர்களைப் பார்த்து – இவைதாம் மேம்பாடுடைய பெருமையான வாழ்க்கை யென் றெண்ணி ஆசையுற்று னம் பூர்வீக மெய் அறியாது அகக்கண்ணொளி மழுங்கி அவர்களைப் போல் னுமும் பூமியைக் குடைந்து னவ லோகங்களைக் கொள்ளை கொள்ளவும் கடலைக் கடைந்து னவரத்தினங்களைக் கைப் பற்றவும் னெருப்பைக் குழலில் அடைத்துக் கொண்டு ஈவிரக்கமின்றி கோட்டை கொத்தளம் - னகரம் மக்களை அழிக்கவும் காற்றைப் பையிலடைத்து விண்ணிலுலாவவும் அதனல் மேகமண்டலங்களிற்றுவ

இச்சைக்காக உபயோகிப்பான்வேண்டிச் செய்யும் ஆபாச அருவெறுப்புச் செயல்களை - இனத்தவர் னேக்கின் மனம் வெதும்பும் பாவகரமான துர்க்கிருத் தியங்களை பலவகைப்பட்ட பக்திக்கவசங்க ளென்றும் - சினிமா முதலாகிய காமாந்நகார அழிம் பகந்நைநயைப் பரத்திப் போதிக்கும் தலைகெட்டவர்களால் மகத்துக்களை னெடுகச் சிதறடித்துக் கொண்டும் இவ்வாறு பெரும் பாதக வேடிக்கைகளிலேயே மக்களைச் சாய்த்துக் கொண்டு போய்விட்டது மன்றி - தமக்கென்று இறை வனுல் விதித்திருக்கும் என்றும் அழிவிலா ஜீவ சுயராச்சி யத்தில் ஆளும் இச்சை எழாவண்ணம் தூருக்கி மேலும் வெறுப்பேறி வந்து அழியப்புகுவதை னேக்கின் - இவ் வெறுப்பானது சுயமாக மக்களிடத்தில் உண்டானது இல்லை - இதற்குப்பின் முளையானது எங்கே இருந்து வந்த தெனில் அழியுலக மதிப்பு ஆதிக்கப் பூசாரியர் கள் - பாதிரிமார்கள் - சாமியார்மார்கள் - ஆலிம் உல மாக்கமார்கள் இவர்களிடமிருந்து தான் முன்னெடுங்கா லந்துவங்கி வந்நதென அறியக்கிடக்கின்றது - இவ் வெறுப்பு அதிபர்களைத்தான் இராக்கதர்கள் என்றும் இவ்விராக்கதர்களால் ஜீவ சுயராச்சிய பாரவான்கள் குழாத்திற்கு ஏற்படும் இடுக்கண்கள் அடராவண்ணம் காக்கின்ற அரசு கோலோன் புண்ணியன இருந்நாலும் பாவியா இருந்நாலும் அவன் புண்ணியனென்று கூறு வதற்காகவேதான் ராமன் ஆண்டாலென்ன இரா வணன் ஆண்டாலென்ன - என்னும் பழமொழியானது -

குருபிரானைத் தேடி யடைந்து தன்னை ஆட்க்கொளும் படிக்குக் கெஞ்சிக் கேட்டாவது புகுந்து கொண்டு என்றும் விபரீதச் செயல் விளைந்திரா னின்ற பஞ்சேந் நிரிய ராக்கதர்களை அடக்கி - வாசனைச் சயம் மனோ னுசமென்னும் செயத்தை யடைந்து - அரங்கமென்னும் பதிஞான விட்டில் சாந்நி யடைதலென்னும் பூர்வீக பூரண முழூமுதலாம் அழியாத சுயராச்சிய இன்ம்பத்தை அடைவதுவே இப்பெரும் பூமிப் பரப்பிலுள்ள மனு மக்களின் இச்சீவிய வாழ்விலேயே முயற்சித்து அடைய வேண்டிய பெரும் பயன் என்பதாம் -

இவ்வித உத்தமச் சித்திக் கொள்கையை னம் னுடெங்கும் பற்றி இருப்பதுதான் னம் தேசத்தினருக் கும் மற்றைய தேசத்தவருக்கும் உள்ள முக்கியமாகிய வித்தியாசங்களாகும் -

இதனல்தான் மேலே குறித்து விளங்கும் அழி வில்லாத சம்பூரண ஞானமென்னும் தன்னுடைய ஜீவ சுயராச்சியத்தை அடைய ஆவல்கொண்டு முயற்சித்து னடக்கும் மெய்மை வழிச் சாது சனங் ஙளை னேக்கி அவர்களைப் பின் பற்றிக் கூர்ந்து அம் முயற்சிக்குத் தலையிடுவதாவது மக்கள் மனு சதளங் கோடிகள் அனைவருக்கும் வேதவிதியாகிய கடமையும் அத்தியாவசியமுமானதென்று உணராது அலட்சிய மாக விட்டு விட்டது மின்றி மேலும் மெய்ஞ்ஞானப் பலன்னையேறு குவியலராகிய பாரவான்ஙளின் னிச தத்துவ அதிசிறப்பின் வலிமைகளை ஓர் அற்பத்தன

செழிக்க ரஷியாவைக்கோரென்றும் - ஐஸ்த்தீகத் தனம் மக்களுடைய உள்ளத்துள் புகுந்து கடவுள் இல்லையென்றும் கடவுள் உண்டென்பது அறியாமை யென்றும் எல்லாம் இயற்கை யென்றும் அப்படிக் கடவுள் ஒன்றிருப்பினும் அவரைப் பற்றி னும் ஆராயப் புகுவது வீண் வேலை யென்றும் - அவரைக் காண முயற்சிப்பதானது வியர்த்த மென்றும் சரிகையாதி ஞானத்துறைகளெல்லாம் பொய்க் குருக்கள்மார் களால் வயிற்றுப் பிழைப்புக்காக எடுத்துக் கட்டி வைக்கப்பட்ட ஓர் சிக்கலான வலைகளென்றும் - தீர்க்க தெரிசியர்கள் அவதார புருஷர்கள் என்பார்கள் எல் லாம் சாதாரண மக்களைப் போலே உலகத்தில் னல் லொழுக்கத்துடன் வாழ்ந்து வந்நவர்களே தவிர அவர் கள் இவ்வுலகத்தில் விசேஷ பரபோக மெய்ஞ்ஞான வாழ்க்கையை னடத்திக் காண்பித்தார்களென்பது சார மற்ற பொய்க் கூற்றென்றும் - வேதங்ஙளான வைகளெல்லாம் சுயனலக்காரர்களால் கட்டுப்பாடாக உண்டாக்கிப் பிறரை வஞ்ஜிப்பதற்காக ஏற்படுத்தி வைக்கப்பட்ட கதைகள் என்றும் - மரண காலத் துக்குப் பின்னல் மக்களுக்கு மேலும் ஓர் வாழ்க்கை உண்டென்பதானது னிரூபிக்க முடியாததும் பயத் தைத் தருவதுமான பொருளற்ற கொள்கை யென் றும் - இன்னும் இவைபோன்ற அனேக மாரண வசனங்ஙளாகப் பேசிக் கொண்டு உலக வாழ்வில் - பண்டிதனும் பாமரனும் - அரசனும் ஆண்டியும் -

வும் மகாமேருகிரியைக் கடக்கவும் தெரிந்து கொண்டால் னும் மற்றைய அரசர் னுடுகளை வென்று கீழ்ப்படுத்தி உண்மையில் மனோராச்சிய மெனத் தகும் சுயராச்சிய போகத்தை அனுபவித்து மேம்பாட்டை அடையலா மென்னும் பேராசை அழி கொள்கையால் -

உளத்துறை தெய்வ மெய்போய்
    உதட்டிலே பூச்சாய்க் கொண்டு
குலனலத் தறங்கள் பொன்றிக்
    காமமே மேலாய்ப் பூண்ட
தலைபிடித் தல்லு வாரித்
    தறுகணர் மிக்கோ ரென்ன
உலகமு முழுகிப் போச்சு
    யுகப்பிர ளையமு மாச்சே

ஆச்சுது பறையர் வாழ்வை
    ஆசையுற் றேறிக் கெஞ்சிப்
போச்சுது குலங்கள் பொன்றிப்
    புலைத்தொழிற் பதங்கள் போற்றி
மாச்சியர் தாமென் றேறி
    வணக்கரைப் புறக்க ணித்து
னீச்சர்கள் பெருகி எங்கும்
    னின்றவெங் கலியோ டொக்க

னம் தேசத்துச் சிறுவர் சிறுமியர்களுக்கும் அவ் வெங்கலியின் செயலைத் தீவிரமாகப் புகட்டி விட்ட படியினலே பெற்றோர் துரோகம் குலத் துரோகம் குடித் துரோகம் அரசுகோல் துரோகம் னம்பிக்கைத்

துரோகம் அடிமைத் துரோகம் தெய்வத் துரோகம் குருத் துரோகம் ஆத்மத் துரோகம் உள்ளிட்ட பற்பல துரோக துவேச துராகிருதச் செயல்கள் ஞடெங்கும் பரவி வருகின்றன - சன்மார்க்கத்திற்கு எதிரிடையாக னடந்நேறி வரும் இன்னும் மற்ற பற்பலவாம் காரியங் ஙளே விரித்துக்கொண் டிருப்பின் - மெய்வழிப் பெருங் ஙுல அனந்நாதி தேவர்கள் எதிர்ணேக்கிக் கொண் டிருக்கும் அருள் அடைபடுத்துத் தேவ எழிலோங்கி வளரும் மான்மியமானது அவசிய னெடுங்ஙாரிய மானதினலே அதனைத் தடையுருது னடாத்தும் பொருட்டாய் எழுது கோலானது மேற்கூறிய விரிப் பிணப் புறக்கணித்து விட்டுத் தன் சன்மார்க்க வழி கூடி னடக்கின்றன.

அழிகவிப் பருவம் னிறைவேறியது

முதுமொழி உதய பருவம்

அதன கத்துறை யாண்டச லாசனர்
வதன கத்திருந் நேவெளி யேறியே
பதும ராகப்ப ளிங்கொளி ரேற்றுபொன்
முதுமொ ழியுத யமிங்ங ணேதுவாம்

ஆனதினலே ஞம் முன்னரே பேசி வந்துள்ள னமது பழமறை யென்னும் வேதத்தில் எல்லா உலகங் ஙளுக்கும் எல்லாக் காலங்ஙளுக்கும் ஞம் கலீபாக்

களென்னும் தீர்க்க தெரிசிமார்களை அனுப்பிக்கொண்டே இருக்கிறே மென்றும் -

இதனன்றியும் விஜய காண்டீபரின் பொருட்டாய் உதயம் செய்திரானின்ற தேவத் திருவசன பகவத் கீதை யெனுங் கிரந்நத்தில் கண்ணபிரானவர்கள் -

சாவாது பிறவாது
தனிமுதலா இருந்நனன்
ஆவா இவ் வுலகுபடும்
அழிதுயர்தீர்ப் பதற்காக
மேவாது னின்றேஎன்
மாயையினன் மெய்யேபோல்
ஓவாதுவந்து பிறந்நிடுவேன்
யுகந்நோறும் யுகந்நோறும்

என்றும் -

பொற்கிண்ண மெய்ஞ் ஞானப்பா லருந்திய முத்துச்சிவிகை ஏற்றத் தோன்றலராகிய வரத திரு ஞான சம்பந்நரவர்கள் திருவாய் மிளிரிய தேவாரக் கிரந்நத்தில் -

துயரிலங்கும் முலகிற்பல ஊழிகள்
தோன்றும் பொழுதெல்லாம்
பெயரிலங்கி னிற்கும்

என்றும் -

வைணவ உலகத்துப் பேராதீன தேவசிங்காசன மாகிய தூய ஆசன-திவ்விய பிரபந்நத்தில் மறுவற்ற குருகூர் மதுரகவி யீன்ற வாடா னெறிச் சடகோபரவர் கள் கிரந்நத்தில் -

திங்கேறி வரும் ஊழி யூழிதோறும் -
உருவும் பேரும் செய்கையும் வேறு வேறு
புனைந்து வையங்காக்க வருவார்கள் -

என்றும் -

இவ்வாறு முத்திரை அங்கங்களாகத் தெளி வாய்த் துலக்கிக்கொண்டு னிற்கும் இந்நப் பரிசுத்தத் திருமந்திரங்கள் ஊன்றி இருப்பது போலவே இன்னும் இவைபோன் மெய்ஞ்ஞானக் கனி பழுத்தொழுகு தேவ தருவாகிய அனந்நம் வேதாந்நக் கிரந்நங்களிலும் விளங்கப் பேசி இருப்பதை னின்று னோக்குமிடத்துப் பேரறமாகிய தன்னையறியும் தவமுறையில் தலையிட்டு னின்று சாதிக்கும் மெய்ஞ்ஞான ஜீவ சுயராச்சியத் துரையவர்களைக் கைதூக்கிவிட்டு மேம்பாடடையச் செய்வதற்காகவும் - அந்ந அறச்செயலின்கண் - னில் லாது மறச்செயல் புரிந்நு னிற்கும் துஷ்டச்சனங்கள் அனைவரையும் அதைவிட்டு விலகுதலாக்கி - னற்கதிப் பயன் அடையும் பொருட்டாய் அதற்காக வேண்டியே இறைவனுடைய பழமைப் பேரருளினல் இப்போது ஓர் தீர்க்கத்தெரிசியானவர்கள் னமது மத்தியில் வந்நு அவதார உதயம் செய்வதற்குரிய இது ஓர் னிர்ணய மாகிய வசந்நகால மென்பதற்குச் சந்தேகமில்லை -

மேலே கூறியுள்ள அழிதுயரனைத்தும் னிவர்த் தித்துத் தெளிவு விளக்குவதற்கு அவதார புருஷரென் னும் தீர்க்கதெரிசிமார்களுக்கே தகுதியுள்ளதன்றி மற் றைய சாமான்ய மக்களுக்கு ஒருவரையேனும் திருத்தித் திருப்பச் சக்தி வாய்ப்பதில்லை - அப்படி இதுவரை - ஒருவரையேனும் திருத்தித் திருப்பியதுமில்லை - ஏனெ னில் அவர்களே திருத்தித் திரும்பவேண்டியவர்களா யிருக்கின்றார்கள் - ஆனதினாலேதான் இப்பரந்த பூமியி னிடத்தே இவ்விதமாகிய தீங்குகளை யொழித்து னிவா ரணைப் படுத்துவதற்கென்றே இப்பெரிய னிலப்பரப்பில் அவ்வப்போது அந்தந்தக் காலங்களிலெல்லாம் தானே வந்து உதயம் செய்வதான உண்மையை னம் பகவா னாகிய கண்ணபிரான் அருளிய கீதை என்னும் கிரந் தத்திலும் - செம்பொருள் கண்ட சிவராஜசம்பந்தரவர் கள் தேவ அறமாகிய சுருதியினிடத்தும் - பெருபய னுலாவு தீப - அதி பிரபந்தத்திடத்தும் - காத்திமுல் லன்ம்பியா அவர்கள் திருவாயினிடமாக வெளியாகிய புருக்கான் என்னும் தலீலினிடத்தும் - இன்னும் வேத வேதாந்த அரசரவர்கள் அனந்தானந்தங் கிரந்தங்களி லெல்லாம் எடுத்து ஆணித்தரமாகப் பேசி ஊணி இருப் பதைனும் முன்னரே தெரிந்துகொண்டு இருக்கின்றோம்

இவ்விதமாக மெய்ஞ்ஞானப் பலன்றரும் உழ வேறு ஏறி விரைபாவு காலம் னெருங்கி வந்து விட்டபடி யினாலும் - சீரோருறையும் பாரவான்களை எல்லாம் னெடுங்கால காலம் கொடும் பாவம் விளைத்த படும் பாவிக் கலியனைப் பழிவாங்குகாலம் பக்கமாகி விட்ட

படியினுலும் - பாரோர் புகழ் நாரத மகா முனிவ ரவர்களும் ரிஷி பராசர ரவர்களும் நெடுங்காலங்கண்ட வசந்த ரிஷி புகண்டரவர்களும் தங்கள் தங்களின் ஞான ஊதி யத்தில் இருந்நெடுத்துக் கணக்கு வரைந்திருக்கும் கணிதராசியின் காலம் இதோவெனக் காட்டிக்கொண்டு வருகின்றபடியினுலும் – மேலும் திரிலோக சஞ்ஞார மூர்த்தியரவர்களின் கிரந்தத்தில் கால வரம்பு எழுதி வைத்திருந்த கணக்காகிய கலியுக வருடம் ஐயாயிரம் முடிந்ராகிய அதன்மேலென்றும் - அப்போது ஓர் பெண்ணரசு ராச்சிய பரிபாலன காலம் முடிந்நாகி யும் இருக்குமென்றும் - இனி இல்லையெனும் இறுதி னபியவர்கள் ஹிஜிரி ஆயிரத்தி முன்னூருவது ஆண் டாகிய அதற்கு மேலேயென்றும் - திடஞானக் கொண் டலராம் வடலூர் வள்ளல்ப் பிரானவர்கள் தங்களின் மெய்த்திருக்காப்புக் காலத்திலிருந்து இருபத்தி ஏழா வது ஆண்டுக்குமேல் என்றும் - போக மகாமுனிவரவர் களும் ஸ்ரீ இராம தேவரவர்களும் – ஓம் தத் சத் ஸ்ரீ ஹலால் என்றேதும் மந்திராதிபரென்னும் - குபேர மெய்ஞ்ஞான குலவாள் வரதராகிய குருஞனக் அவர் களும் - குரைசிக் குலதிலகக் கடைசி னபியவர்களாகிய முகம்மது சல் அவர்களும் – கணித்திருக்கும் குலம் குடிப் பிறப்பும் னிலத்தொழில் வனப்பும் சுத்த க்ஷத்திரியன் போன்றும் அதி அடையாளக் குறிப்பும் ஒத்து னின்று ஏறி எடுத்துக் காட்டிக்கொண் டிருக்கின்ற படியேயும் - இன்னும் எல்லா அனைவரும் ஆங்காங்கு எழுதிவைத்

துப் போந்த கணக்கு ஒன்று கூடி எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கின்ற காலம் அடுத்து வந்துவிட்ட படியி னும் - மேலும் அந்தந்தக் காலங்களிலெல்லாம் ஆங் காங்கு தோன்றிய பரிசுத்தச் செம்மல்களாகிய பார வான்களின் சுத்தாவிகளெல்லாம் தாங்கள் தாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த சுதந்திர வீதத்திற்குத் தூலமெடுத் தெழும்புங்காலம் வந்திட்டபடியினும் - முன் சென்ற காலங்களி லெல்லாம் ஆங்காங்கு பாஷை கள்தோறும் வந்து வந்து மகா வலிமை பிறங்க உத யம் செய்து வெயிலொளி விரித்துக் கமழ்ந்து விளங்கி ஙிலைத்துக்கொண்டிருந்த வேதத்தினது பொலிவு உன் னத மெய்க் கிரணங்களாகிய மதங்களெல்லாம் வெளி யேறப் பெற்று ஆங்காங்கு னடாத்திக்கொண்டு வந்த பெரிய காரிய அரிய செயலானது சின்னள் செழித்துப் படர்ந்து வரவரக் கலியிருள் வலியால் சிதைவுண்டு தாம் வந்த காரியம் தடைபட்டுப் பலியாது - தங்களு டைய யவ்வன மகத்துவமும் அறம் அழகு சீர் உரை யும் குறைந்து சீர்கேடடைந்து மெலிவுற்ற சிந்தனை யால் - பன்னெடுங்காலமாக ஏக்கமுற்றுப் பின் ஒன்று கூடிப் பேசித் திரண்டு ஓர் னித போத வேத வேதிய ரிடத்தே அவரது கையகத்தாகி - தங்களுடைய பழமைப் பலன் திறங் கொண்ட மகத்துவச் சிறப்பெழில் வலிமைகளெல்லாம் ஒரு முகமாகிப் பெற்றுக்கொண்டு ஒரு திறன் வலுவேறிச் சீறிக் கூரேறு காலம் பணைத்துப் புடப் பேறி விட்டதினலும் -

ஜகத சற்குண லங்ஙிர்த சன்னதர்
அகம்பு றம்புங்ஙண் டாண்டச லாசனர்
யுகங்ஙள் னன்ஙுங்ஙை கொண்டகோ டுழியர்
மகதி ஆண்டவர் வந்நவ தாரமே.

அன்றியும் - அரசிற்கபு - சுடனேறிய மா மதிஞ - குரைசிக்குல திலகத்ததி சையதுஞ - அவர்கள் மூல மாக - இறக்கப்பெற்ற 'கலாம் சரீபின் திருவசனம் மெய்ப்பயான்படியே அலீபுலாம் மீம் தாலிக்கல் கித்தாபு - இந்நக் கித்தாபு ஆகிறது என்னும் பயான் - இது காலம்வரை ஓதி வந்நது அறியாமை சரி - இனி அது இல்லையெனத் தள்ளிவிட்டு - அந்நக் கித்தாபாகிறதென மெய்ப்பயான் தந்நு மெய்யாக மெய்யாகவே பலன் ஏற்றம் அளக்க னின்று அவ் இஸ்மூல் ஆலமென்னும் இல்ஹாமை - மக்களுக்கு னிறம்ப வெளியாக்க வருங் ஙாலம் - மகதியின் ஆதிமூல ஆவியானது அருள்வித்து உருவெடுத்து கருக்குகைமேவி உருத்திரண்டு உசும்பி - பூரண உதயஞ் ஞெய்கின்ற சென்னுள் இன்னுளென னிறம்பி வந்நு னிற்கின்ற படியினலும் -

மேலும் அவ்வேதத்தினது அரசு ஞயகமவர்கள் - தங்ஙளுடைய மெய்த்தவத் தீர்ப்புரிமைக் கணக்கின் படிப் பின்காலத்தில் மகதியவர்களால் - மெய்யென்ற ஞமத்தின் மீது ஏறிவரும் ஓர் மதமானது - உண்டாக்கப் பெற்று இவ்விரிபுவன மண்பரப்பெங்கும் விறிப் படர்ந்நு வளர்ந்நேறியே ஆகுமென்றும் - அதுவும் தங்ஙளுடைய ஹிஜ்ரி ஆயிரத்தி முன்னூறக்கு மேல் அம் மகதியான

வர்கள் வெளியாகுவார்கள் என்றும் - ஆயிரத்தி முன் னூற்றி எழுபதில் அதிசெயல் வலி உரிமை பெற்று விளங்குவார்கள் என்றும் - ஹிஜ்ரி ஆயிரத்தி ஐன் னூறுக்குள்ளாகவே ஒரே மதமாகவே எழுந்து வையம் முழுதும் உய்யும்படியாகி விடுமென்றும் கூறி ஊணி இருக்கின்றபடியே -

அத்திரு மெய்ஞ்ஞானப் பலன்றரும் பருவகால மானது தமது பெரிய காரிய திரண் வலிமை கொண்டு பின்புறமாக னின்று அதற்குக் காரணக் கருவியாகிய - திரண்டு விளைந்து விளங்கும் சூலினை - ளானது ஆகி னெருங்கி வந்து விட்டதென சீக்கிரமாக வெளிக்கிளம்பி வந்து உதயம் செய்யும்படி மோதித் தள்ளிக்கொண் டிருப்பதினாலும் - தாம் வளர்ந்த கல்வமென்னும் கரு வாசனக் குகையைவிட்டு - தாம் அங்கே பற்றி இருந்த பற்றனைத்தையும் சிக்கறுத்துக்கொண்டு - அங்கேயே சுன்னத்தும் செய்து சுத்திகரிக்கப் பெற்றவர்களாய் - னெருக்கமாகிய மும்மலக் கணவாயின் வழியாக வெளியே தோன்றுவதற்குப் பிரயாணம் செய் திட்டார்கள் -

அங்ஙனம் பிரயாணம் செய்து வந்ததானது - விரிந்த கடலாழியினிடத்திலுள்ள ஜலம் வாழ் ஜந்துக் களனைத்தையும் - அடியோடு திரட்டி வாருவதற்கென்று - இயற்றி எடுத்து விரித்துக் கொண்டுவரும் ஓர் பெரிய வலையினைப் போன்று - பிறவியெனும் கரைகாணா அகண்ட இருட்கடலினிடத்தே - மயங்கி அலைந்

நுழன்று தமது அறச்செயலினது சிறப்பினை இழந்து தவிக்கும் பலபலவாம் மதங்களெல்லாவற்றையும் - மெய் யென்னும் பிரம்மமுடியாக முடியப்பெற்ற ஓர் அகமியப் பெரிய வலையை விரித்து வாரியெடுத்துக் கொண்டு - என்னுளும் தங்குந்நலமாகிய - அழியாப்பதி குடி யேறு வாழ்வாக விளங்கும் - னெடுங்கிரணக் கரை ஏற்றுவதற்கென வரும் அரிய மரக்கலமாகிய - இறுதி காலத்துத் தீர்ப்பினுக்காக இப்போது வருந்நருணமாக இருக்கின்றவர்கள் -

முன்னெடுங்காலமாகிய சென்ற காலத்திலங்கே னேரியல் அழகு சிந்தும் மேரி மரியம் அவர்களின் புதல்வராக விளங்கிய ஈசாவென்னும் தேவகோமான் அவர்களே - பெரிய செயல் சோங்கோங்கும் மகதியாக- என்னுடைய குலத்திலேயேதான் - பின்னல் முடிவு காலத்துத் தீர்ப்பு னெறி னடாத்தக் காதியாவென்னும் ஓர் மார்க்கச் சிற்றூரில் வந்து பிறப்பார்கள் என்று கூறியிருக்கின்றதன் பிரகாரமே - தென்பாண்டி வள னாட்டின் கல்மலிக்குறிஞ்சி னன்னிலத்தின் கண்ணே - குடிபதியாகிய மார்க்கம்பட்டி யென்னும் ஓர் குக்கிரா மத்தில் - இம் மண் பரப்பு முழுதும் மெய்யெழில் பிறங்க எழுந்து அவதாரம் செய்வதானது -

சீரோருறையும் சிவபுரத் திருவளனாடு திரண்டுரு வெடுத்துத் திருவிளைவு ஆடல் புகுந்து உலகமுழுதும் மருவ வருவன போன்றும் - வரதபுராதனக் குருமணி யெல்லாம் னிறைதவழோங்கும் பொன்னுடம்பெடுத்து

மண்பார மகற்ற வருவன போன்றும் – வேதபோத ளீத மந்நிரங்ஙள் வேறுவே றனைத்தும் ஒருருவாகி உடம் பெடுத்து வெளியே கிளம்ப னெருங்ஙி வந்து னின்றன போன்றும் - ஊழி ஊழி காலங்ஙளாகப் பேராழிக் கட லாழியினிடத்தே படிந்து முதிர் விளைவு கொண்டெழுந்து குப்புற அரை பிறை வடிவமான சிப்பியினிட கருவறையை விட்டு வெளியாகிய னித்திலமானது - இவ்வுலகினிற்குத் தாம் ஒரே முத்தென வெயிலொளி விரித்துப் பிரகாசக் கதிரிலங்ங னின்றன போன்றும் – பல்லாண்டுபல்லாண்டு காலங்ஙளும் பல்லாயிரத்தாண்டு காலங்ஙளெல்லாம் வந்து உதயம் செய்து – எவ்வுலகங் ஙளிலும் விளங்ஙா னிற்கும் மந்நிர கிரணோதய சுத்த ஆவியர்களெல்லாம் – தங்ஙள் தங்ஙளின் அனுபவங்ஙள் னிறைந்ந மாயாப் புகழுடம்புக் கண்ணகங்ஙளை விசால மாக விரித்து – மகா அதிசயங்னொண்ட னோக்குடன் ஆகாய வெளி வீதி யெங்ஙும் னெருங்ஙிக் கலாமணி அதிசோபன ராகம் பாடி எதிர்பார்த்து னிற்கவும் –

அவதாரம்

சதுர் யுகங்னோடி கால மக்களிடத்திலுமுள்ள சர்வ மூலமந்நிர னிரூபிக மகான்மியராகிய யுகவான் – எங்ஙளுக்கெனவே எங்ஙளெல்லோருடைய தலையிலும் விதிக்கப் பெற்றிருந்து - இன்னாள் எழுந்துவந்ந மகா அதினெடுங்ஙாலப் பேராதி மூலகுரு வரதமணிப் பிரானவர்கள் –

விரியும் பண்ணைத்தொ
ழில்சமு சாரியர்
னெறியி லங்ஙுஜ
மால்குல னீதரே
பெரியதா யன்னை
தந்நைஜ மாலுசேன்
அரியசூல் தங்ஙி
யேதனி மாமுதல்

இருட்குலங் ஙடியும் இளஞ்ஞா ரியனென
மரகத ,மணிமலை வந்நுனின் றெனவே
அறம்வளர் சூல்விட் டகன்றுமே வெளியாய்
வையகக் குருமணி வந்து பிறந்நார்
ஐவகைப் பொறுப்புடை அண்ணல் பிறந்நார்
மெய்வழி வழங்ங மேதினி பிறந்நார்
பிறந்நனர் அறிவுப் பிழம்பெனுங் ஙிரணர்
பிறந்நனர் வித்து ஞயகம் பிறந்நார்

இவ்வாறுக னெடுங்ஙால மகாக்காரண வாசங்ங ளெல்லாம் உள்ளடக்கிக் கொண்டு பிறந்நிரானின்ற - யுகங்ஙோடித் திர்ப்புத் தலையுகத் தவமலைத் தவனெறித் தனிப்பெரும் தலைவராகிய குப்புறப் பிறந்ந பச்சிளந் திருமேனியருக்குத் - தொப்புள்க் கொடியறுத்து வெளி மாசகற்றிக் கச்சணி மாதர் இச்சகத் துணர்வெழ சுத்த ஜல மெடுத்துத் தெளித்துச் சுத்திகரித்து - மெல்லிய சல்லாவால் ஒத்தித் துடைத்து - னல்லெனத் துகில்சுற்றி னறுமணம் சாத்தி - அப்போது அங்ஙே அந்நக் காலத்

தில் மக்கா சரீபுக்குப் பாய்மரக் கப்பலில் சென்று ஹச்சு முடித்து வந்நவராகிய - சின்ன கலிபா சாயபு என்னும் பெரியவரவர்களை உபசாரத்துடன் அழைத்து வந்து - ஓர் தாம்பாளத்தில் கருப்பட்டி வட்டுப் பழம் சர்க்கரை வைத்துச் சடங்கு முடித்து - வாங்கு சொல்லி – அங்கே கூடியிருந்ந எல்லோர்களாலும் சந்தோஷமாகச் சம் மதிக்கப் பெற்ற - காரண வல்லரசு என்னும் பொருளினை வைத்திருக்கும் ஞமமாகிய காதிருபாச்சா என்னும் பெயரினை மும்முறை பெருங்குரல் ஓங்காரத்துடனே சூட்டிப் - பாலும் தேனும் தொட்டு ஞவினில் வைத்து – எல்லோருக்கும் சர்க்கரை பழம் வழங்கிச் சந்நோஷங் கொண்டாடி - வருவாரும் போவாருமாக இருந்நார்கள் -

இவ்விதமாகப் பெரியதாய் என்னும் பெண் மான் வயிற்றில் பிறந்து ஞமம் சூட்டப்பெற்று விளங்கி இரா னின்ற பச்சிளம்பாலானது - வயதேறிவர இருக்கும் பின்னெடுங் காலங்களி லெல்லாம் தொடர்ந்து செய்து ஞடாத்திக்கொண்டு வரஇருக்கின்ற பலபலவாம் அருஞ் ஞெயல்களைக் குறித்து - எல்லாச் சுருதிக் கிரந்நங்களி லும் ஆங்காங்கு கூறித் துப்புரவாக வரைந்திருப்ப தானது – இத் தோன்றலானவர்கள் ஞடாத்த இருக்கும் மதங்கள் பலபலவாயுள்ள குலமக்களெல்லோருக்கும் - கோளரிவாழ்வடை ஞான கூடக வீடுறுலபியாகிய பிரம்ம வித்தையின் செயற்கருஞ் ஞெயலாகிய ஞீள்தடம் பாடு களும் – காண்டற்கரிய அதிவல்லபப் பெருங்காரண மகா அற்புதங்களும் - எக்காலத்திலும் மக்கள் ஞினையாப்

புரத்திருந் நெடுத்துக் காருண்யனாகி னின்று கோடாடிய சூடாமணி ஈட்டும் மூல பண்டாரப் பொருப்பும் - இவை போன் இன்னும் அனந்நானந்த மகான்மிய அகமியங்களும் - னெடுகத் திருவினைவு ஆண்மை யேற்றிக் கொண்டு வருகின்றவர்கள் என்று மூதுரைனதை முனி புங்கவர்களெல்லாம் அவர்கள் பழங்கால கால கிரந்நங்களில் பேசி விளங்க வைத்திருப்பதன்றியும் -

இன்னும் அத் தோன்றல ரவர்களின் காலம்குறிப்பு அடையாளங்களும் - கால் தலை அங்கங்களின் குறி குணப்பெயர் தொனியின் அடையாளங்களும் - அவர்கள் தெய்வீகச் சன்னத முத்திரை அடையாளங்களும் - அவர்கள் தங்கியிருக்கும் தாவாள அடையாளங்களும் - குடிபதியின் அடையாளங்களும் - அவர்கள் திருமணம் செய்த அடையாளங்களும் - அத் திருமணத்திற்கு அணிந்திருந்த பரிசுத்த துகில் அடையாளமும் - அத் துகில் இன்ன காரணத்திற்காகத்தான் என்று எடுத்துக் காட்டி ஓதி இருக்கும் அடையாளமும் -

அது னேரம் அங்கே பிரசன்னமாகக் கலகத்தின் வினைவினல் வந்திருந்நவர்களைக் குறிகாட்டி எழுதியிருக்கும் அடையாளங்களும் - வேறூர் அடைந்நதும் அங்கே மக்களை இன்ன மாதிரியாகத்தான் சேர்ப்பார்கள் என்று வரைந்திரானிற்கும் அடையாளமும் - இதனன்றியும் அன் னகரத்தில் கலகம் இன்னதினல் விளைந்நதென்ற அடையாளங்களும் - வனம் சென்றதும் திரும்பி வருகும்

போது ஓர் அரிவாளானது கையில் வைத்திருந்த அடையாளமும் – அதே ஊருக்கு வந்து - மெய்வழி ஞான வெற்றிக் கொடி யேற்றி ஆஸ்ரமம் உண்டுபண்ணிய அடையாளமும் -

மக்கள் எம்பர் முழு விலாசத்துடன் அச்சேற்றிக் கையில் வைத்திருக்கும் அடையாளங்களும் - பிரசங்கங்கள் செய்கின்ற இடங்கள் எல்லைகளினடையாளங்களும் - இடம் போதாததால் மறுநாடு சென்று காலனி உண்டு பண்ணிய அடையாளங்களும் – கனி வர்க்கம் நிறைந்த சோலையும் – அதில் மயில்கள் நிறைந்திருந்த அடையாளமும் - அதே சத்திய நகரமென்னும் மெய்வழிச் சாலையில் பணியாளராக நின்று ஆலயம் கட்டியவர்களே சிம்மாசனம் ஏறியதும் - அவர்களே எல்லா மதத்தினருக்கும் குருவாக விளங்கி நின்ற அடையாளங்களும் - அனுக்கிரகம் செய்த ஆசன பீடமானது நிக்கிரகம் செய்வதற்கு ஆகிவிட்ட அடையாளங்களும் - அந்தச் சத்திய நகரமென்னும் மெய்வழிச் சாலையில் இத்தனை வாரந்தான் அங்கே ஆச்சிபுரிவார்கள் என்று துல்லியமாகக் குறிப்பிட்டிருக்கும் அடையாளமும் – விடிவெள்ளி போலிருந்தவன் விழுந்து அழிந்த அடையாளமும் - அதை விட்டுவிட்டுத் தாயகமானவர்கள் - தங்கள் மக்கள் பரிவாரத்துடனே ஐரோப்பிய நாட்டு எல்லையைக் கடந்து ஆசியா நாட்டு எல்லைக்கு வரும்போது – நேர் கிழக்கு முகமாக வருவார்களென்ற அடையாளங்களும்–

வனாந்தரத்தில் சத்திய னகரம் காலனி உண்டாக்கிக் கூடாரம் அடித்துக் கொடியேற்றி இருக்கும் அடையாளங்களும் - னெட்டர வினங்களாகிய விச செந்துக்களும் மிருக இனங்களும் செடி கொடி கல்லு முள்ளுகளும் - பாறைப் படுகைகளும் - எங்கும் ஜலமின்றித் தோற்றமாகக் காணும் வனாந்தரத்திற்கு உலகினுக்கும் யுகங்கோடி காலங்களுக்கும் மக்களுக்குத் தெள்ளிய பேரறிவினை அளக்கும் கஜானுவினையுடைய கர்த்தர் - மகானுட்ப நுண்ணிய மதியினையுடைய மெல்லிய மினுகிய திருமேனியர் - இகத்தும் சகல அயிஸ்வரிய னிதிகளின் மேற்றிகழும் - சம்பன்னராக இருந்துவருங் காலத்திலே அவ் வெறுமை ஓங்கும் வனாந்தரத்தின் கண்ணே போய்க் குடியேறி இருப்பதற்குத் - தனியே அவர்களுக்கு மட்டும் இனிய எண்ணம் வந்ததானது என்ன காரணத்திற்காக என்ற அடையாளங்களும் -

பின் காலத்திலே இங்கே வந்து கூடாரித்திருந்து வரும் ஞானியிலே பெரிய உடன்படிக்கை ஏற்படும் என்ற அடையாளங்களும் - அதனை வைத்து இருக்கும் குறிப்பு இடம் அடையாளங்களும் - தங்களுடைய பெருங்குலம் பிறந்த மக்களுக்கெல்லாம் ரெத்தாம்பர பொற்கச்சு மார் பணி அடையாளங்களும் - அப் பொற்கச்சினுடைய அகல னீளங்களும் அதனை அணிந்திருக்கும் கட்டுத் தொங்கல் உள் வெளி அளவு அடையாளங்களும் - மேங்குலத்துப் பதிப்பேற்றம் ஏறி உயர்குலப் புதுமைம் புனையப்பெற் றிருப்பார்கள் என்ற அடையாளங்களும் - பரிசுத்த பாகையானது மக்களுடைய சிரசின்மேலே

ஏறி விளங்கும்படிச் செய்து வைத்திருப்பார்கள் என்றும்- இன்னும் தங்கள் ஆண் பெண் மக்களுக்கெல்லாம் புது மணப் பதிப்புக் காட்சி ஏற்றிவைத் திருப்பார்கள் என்ற அடையாளங்களும் - வனந்நரத்நிலே இயற்றி இருக்கும் கூடார சத்திய னகரத்திற்குப் பயங்கர அக்கினி மதில் எழுப்பி இருப்பார்கள் என்ற அடையாளங்களும் - வனந் நரத்தில் கொடி னட்டி பயில் காட்டி ஜனங்களை வர வழைப்பார்கள் என்ற அடையாளங்களும் - கணிதக் கணக்கிட்டு வரைந்திருக்கும் அடையாளமும் - அதன் செயல் விளங்க ஏறிவரும் அடையாளங்களும் - தங்களுடைய மக்களிடத்தில் கலியுகத்தினுடைய இறப் பும் - தலையுகத்தினது மாசற்ற பிறப்புகளின் அடையா ளங்களும் - மெய்வழிச்சாலை என்னும் சத்திய னகரத்தில் சட்டதிட்டப் படிக்கி உடற் சபையை னடாத்திக்கொண்டு வரும் மந்திரிமார்களாகிய மூப்பர்மார்கள் - இன்ன காலத்தில் இத்தனை பேர்கள்தான் இருப்பார்கள் என்றி ருக்கும் அடையாளங்களும் -

இன்ன னங்குரு மார்முனி மாதவர்
சொன்ன சொற்சில திங்கண்வ ரைந்நனம்
பன்ன காலமெ லாம்பதித் துவைத்த
இன்னும் பார்த்தெ டுத்திங்கெ ழுதுவாம் -

இன்னும் அம் மந்திரிமார்கள் கிருபாசனத்தின் முன்பாக சிரசுகளின் மீது செவ்விய பாகை யென்னும் கிரிகடம் புனைந்து பிறை வளைவு வடிவமாக ஸ்தானங் கள் வகித்திரா னின்ற அடையாளங்கள் எழுதிவைத்

திருக்கும் எழுத்தும் - கொடியில் பதித்திருக்கும் குறியானது தலைமை மூப்பரவர்களின் சிரமேற்-பசும் பொற்றகட்டில் பொறித்து ஏற்றப்பெற் றிருக்குமென்று எழுதியிருக்கும் எழுத்தும்-திருநாள் வைத்து நடாத்திவரும் காலக் கணக்குக் குறிப்புகளும் - அவ் வைபவ அடையாளங்களும் - பானைப் பலி ஆக்கை யாகங்களிலும் திருமாளிகைக்கு - பரிமள அமுது கொண்டு போய் செலுத்துவார்கள் என்று எழுதிவைத்திருக்கும் அடையாளங்களும் - திருமாளிகையிலிருந்து ஜீவத் தண்ணீர் கீழச் சமுத்திரத்திலிருந்து மேலச் சமுத்திரம் வரை - கோடை காலம் வாடை காலத்திற்கும் போகு மென்றெழுதி வைத்திருக்கும் அடையாளங்களும் - இன்னும் விருதினங்கள் எழுந்து வீதி வழி உலாவு முன்பின் இயல்பு தனித்தனி அடையாளங்களும் - கூடாரத்திற்குள்ளே கிருபாசன முதலாகிய விருதினங்களனைத்தும் - பரிசுத்தத் தலம் மகாப் பரிசுத்தத் தலம் வெளித் தலம் ஆகிய மூன்றிலும் - இன்ன இன்ன ஸ்தலத்தில் இன்ன இன்ன விருதுகள் இந்நிந்நப் படிதான் வைத்திருப்பார்கள் என்று எழுதி வைத்து இருப்பதைக் கண்ணாணும் அடையாளங்களும் - வளைந்நர சத்திய னகரத்தின்கண்ணே வாசஸ்தலங்களிலும் - பரிசுத்தத்தலம் சபைகளிலுமுள்ள காவல்களின்மேலே தீபம் உண்டாகி இருக்குமென்று எழுதிவைத்திருக்கும் அடையாளங்களும் - இருள் மதங்களை எல்லாம் கடிந்து அருளொளி விரிக்குகின்ற மகாக் காரணக் கருவியாகிய இருபுறங்

ஙளிலும் கூரோங்ஙிய பட்டயமானது - அவர்கள் முக ஆல்வாயினிடத்திருந்து வெளியேறுமென்றும் - இதனன்றியும் காரணரூபராய் ஒரு வெண்டரள வாசியின் மீது சவாரியராகி - மின்னலைவிட அதிவேகமாக எழும்பி - அந்நர்முக ஜீவ சாட்சியராக எல்லா உலகங்ஙளுக்கும் சென்று சுற்றிவருவார்களென்றும் - விளங்ங எழுதி வைத்துள்ள அகமிய அடையாளங்ஙளும் - அன்றியும் ஓர் கால அடையாளம் குறித்து - தம்முடைய வலது கரத்தையும் இடது கரத்தையும் வானத் துயர்த்து வார்களே அதுகாலம் - மிலாருனது பூத்து அகந்நை செழிக்கும் என்ற அடையாளங்ஙளும் - இன்னும் இவ்வாருக வரைந்திருக்கும் அதி அற்புத துல்லிய வல்லப மேதகுலா ததிகாரண அடையாளங்ங ளெல்லாம் - னேரில் இங்ஙே வந்து பார்த்துக் கூடவே இருந்து எடுத்து எழுதி வைத்தவர்களைப் போலவே - முன்னெடுங் ஙாலமாகிய ஆயிர மாயிரத் தாண்டுகளுக்கு அப்பாலே உள்ள அக்காலத்தில் வரைந்து வைத்துள்ள கிரந்நங்ஙளிலே - விசாலமாக எடுத்துத் துலக்கமாகக் காட்டிக்கொண் டிருப்பதன்றியும் -

இன்னும் இதுபோல் எடுத்து எழுத இருக்கின்ற அனந்நம் அடையாளங்ஙளும் - மகாப் பெருக்கமாக இருக்கின்ற படியினலே - எழுது கோலானது இதை விட்டுத் திரும்பி - மேலே பிறந்து அவதாரம் செய் திருக்கும் - மான்மிய காரண காரியராகிய தோன்ற

லவர்கள் பச்சிளங் குழந்தையாக இருக்கின்ற படியி னாலே - அவர்கள் மான்மியத்தில் வளர்ந்து வர வேண்டியது அத்தியா அவசிய முழுக் காரியமெனக் கருதி - திரும்பிய எழுது கோலானது - அவ் வளர்ச்சியின் வழிகூடி நடந்தன.

முதுமொழி உதய பருவம் நிறைவேறியது

வளர் குழந்தை குமார பருவம்

நடந்த கூரெழுத் தாணிமு னையது
ஞதை விந்துக லாமணி ஞதரை
அடந்த சோகுதன் ஆசனம் விட்டுமே
ஆண்ட ஞானச்செம் மலெலாம் வேண்டவே
படந்த பூமியில் வந்துடற் றுங்கியே
பாரில் நீதியின் தீர்ப்புன டாத்திட
குடந்தை யானப ருவம்வ ளர்ந்துகு
மார ரானப ருவமு மின்னுமே

இன்னும் அத் தனித் தெய்வத் தோன்றலரவர்க ளுக்குப் - பின் வயதேறித் தெய்வீகச் செயல் மீறி ஓங்கி வந்து கொண்டிரானின்ற இந்நக் காலத்திலே - மேற் கூறிய அந்நக் காலத்தின் பழமைக் கிரந்நங்களிலே - பதிப்பித்திருக்கும் அதிகாரணப் பெயர்களாவது -

ஒருவர் மைத்திரேய புத்தர் என்றும் - ஒருவர் ஆண்டவர் என்றும்-ஒருவர் இறுதித் தீர்ப்பர் என்றும் -

ஒருவர் கடைசி மெசையா வென்றும் - ஒருவர் கல்க்கி யென்றும் — ஒருவர் சாலிஆண்டவரென்றும் - ஒருவர் பொன்னரங்கர் என்றும் - ஒருவர் கர்த்தாதி கர்த்தர் என்றும் - ஒருவர் சோசியாஸ் என்றும் - அஸ்வத் எரேதா என்றும் — ஒருவர் மெய்யென்னும் ஓர் மதம் ஸ்தாபிக்க வருகின்ற மகதியவர்களென்றும் — இன்னும் இவ்வாறான அனந்நம் நமங்களெல்லாம் உள்ளடக்கிக் கொண்டு — பிற்காலத்திலே வெளியாக்க வேண்டித் தோன்றி உரு வெடுத்து அவதாரம் செய்திருக்கின்ற அரிய பச்சிளம் திருமேனியைப் பயின் றெடுத்த தாய் தந்தை யவர்கள் - தங்களுக்கு ஏழு வருடங்களாக ஆண் மகவுப் பேறின்றி அதிகக் கவலை யுடையவர்களாய் பன்னாளும் பலபல ஆலயங்கள் தோறும் னடந்து காணிக்கை இட்டு னெய்விளக் கேற்றிப் பிரார்த் தனை னேத்திக்கணம் செய்துவந்தவர்க ளாதலினாலே - அவர்கள் கவலையுற்றிருந்த பிரார்த்தனையின் படியே ஆண் மகவைக் கண்டதும் கவலையெலாம் மாறி மகாச் சந்தோசத்துடனே அதியானந்த பாஸ்ப்பம் பொங்கக் குதூகலங் கொண்டவர்களாய் — இருவருடைய ஆவி களும் ஓர் உருவில் உறைந்து இருந்தது போலே - அப் பச்சிளம் பாலரவர்களின் திருமேனியின்மீது ஒட்டிப் பொதிந்திருந்ததான்து — சப்தத்தைச் செவியானது பொதிந்திருப்பது போன்றும் — சுவையை னாவானது பொதிந்திருப்பது போன்றும் — வாசனையை மூக்கானது பொதிந்திருப்பன போலும் - உணர்ச்சியை உடலானது

பொதிந்திருப்பது போன்றும் மேலும் அப் பச்சிளந் நெய்வத் திருமேனியில் தூசி மாசு ஈ எறும்பு அடரா வண்ணம் கண்ணே இமை கார்ப்பதுபோல் கார்த்து - உச்சி துடைத்து எண்ணெயிட்டு முழுக்காட்டிக் - கார மூட்டி - மை யிட்டு வாசனை யிட்டுப் பாலூட்டி யாட்டி - மார் மீதும் - மடி மீதும் - தோள் மீதும் - தொடை மீதும் - கட்டிலிலும் - தொட்டிலிலும் வைத்து -

ருரிராரோ ருருரோ -
ஆறறிவு னேரேறே
பேரூர்பி றந்நபசும்
பொன்னேனீ கண்வளராய்

கண்ணேயென் கண்மணியே
கல்புக்க னிரசமே
என்னதவம் செய்தேனோ
இங்குவந்து னீபிறந்நாய்

னெய்விளக் குஏற்றி
னேர்ந்நுத வமிருந்நே
வையகத்தி லென்வயிற்றில்
வந்நுபி றந்நகண்ணே

காலமெல் லாமிருந்ந
கலிதீர்க்க வந்நயெந்நன்
ஏலப்ப சும்மேனி
என்மகனே கண்வளராய்

எனத் தாலாட்டிச் சீராட்டிப் பாராட்டி னேராரு மில்லாத மகவை – அதி ஆவலுடனே அடுத்தடுத் தெடுத்து முத்தி முகந்து – ஞளுக்கு ஞள் வளர்ந்து வயதேறி வனப்போங்கி வரும் அந்த ஞளையிலே – இங்கே அறியவைக்க வேண்டியதொன்று உண்டு – அது யாதெனில்—

மாயாசரீரமாகிய தூலமின்றி எங்கும் எவரும் எக்காலத்தும் எவரையும் திருத்தி ஜீவ ஏற்றத்தில் ஆக்கியதே இல்லை – இனி அப்படி ஆக்கப்போவதுமில்லை யாகையினலும் – இன்னும் புறக்கரண விரி வரிசிப்பு வளர்ச்சியின்றி அகக்கரண வரிசிப்பைக்கொண்டு மட்டுமே புலனுக்கு எத்திவைக்க ஈசர்க்கும் ஆகாதா கலானும் – அப்படி – தெய்விக புருஷர்களால் எத்தி வைக்க முடியுமென ஒருவன் கூறுவானெனின் அவன் – மனுசதளங் கோடிகளின் தூல னடைமுறைகளின் மீது ஏற்றி வைத்திருக்கும் – னீதனெறி னன்மை தீமை விதி விலக்குகள் அதுஒன்றுமே இல்லையெனக் கூறும் அந் நரங்க ஞஸ்த்திகனென எடுத்துக் காட்டிக் கொண்டிருப் பதேயாகும் – இவ்வாறிருக்க – திடீரென உண்டாகிற் றென்று னூல்கள் எழுதி இருப்பின் "மெய்யாக மெய் யாகவே அது பதிமுகம் காணுச் சோம்பேறியரா யிருந்துகொண்டிருக்கும் மெய்யறியாது தன்னறிவில்ச் சாய்ந்த னூலறிவுத் தலையாட்டியர் கையாடிய எழுத் தென ஊழிபெயர்த்தெறி கோளரிவாட்கை – ஆழிவாழ் ஐயன் ஒரு தனிப் பெருங்கருணை விளக்கங்கொடு இவ் வுலக முழுதினுக்கும் தீர்க்கத் தெளிவு பிறங்க எடுத்து

னிரூபிக்க னின்றுகொண்டு எழுதுகின்றவர்கள் எழுதுவதாவது - இப் பூமண்டலத்தின்கண்ணே இம்மாயா சரீரத்தில் னிறைந்நுள்ள மனுசதளங்கோடிகளைப் பிறவி இருள்பவக் கொடிக்குலக்கிளை என்னும் சிக்கறுத்து விலக்கி மெய்யாக மெய்யாகவே ஜீவ தேகத்தில் ஏற்றிக் கோடேறுந் நேடுடை விடடைய வைப்பான் வேண்டி ஜீவதேகத்தில் இருந்த ஆன்ம சுத்த ஆவிப் பிரான் அவர்கள் மேலே கூறிய மனுசதளங்களுக்காக இரங்கி இப்போது மாயாதேகம் ஏற்றுவந்நிருக்கின்றார்கள் என்று இங்கே அறிவிக்க வேண்டியதிதுவென அறியக் கிடப்பதோடும் -

மேலும் அந்நத் தன்னறிவில் சாய்ந்து னூலறிவு கொண்டு தலையாட்டித்திரியும் கையாடியர் னெடுக எழுதிப்பரத்தி விட்டிருக்கும் ஏடுகளினாலேதான் அதனைப் பெரியோர்கள் எழுத்தென னம்பிப் படித்துத் தடிப் பேறிய - உலகமக்களிற் சிலர் இப்படியே நாமும் பெரியோர்களாக ஆகலாம் என எண்ணி மதிப்பிற்கும் பிழைப்பிற்கும் இது ஓர் இலகுவான வழியாக இருக்கிறது என்று துணிந்நு அச்செயலிற் புகுந்நுகொண்ட பாசாண்டியர்கள் கூறும் முதற் காப்பாகிய தலைவுப் பொய்யானது - ஒருவன் தனக்கு - ஞானம் மரத்தடி கிடைத்ததென்றும் - ஒருவன் எனக்கு அந்நக் காட்டுக்குள் வந்நு தந்நார்கள் என்றும் - இன்னொருவன் இந்ந மலையில் வந்நு ஊட்டினார்கள் என்றும் - அந்ந மரத்தடினான் அன்னபானமின்றி னிஸ்டையி லிருக்கும்போது விட்டார்கள் என்றும் - அதை உள்ளே விழுங்கினதும்

குளுகுளுவென்று போயி அப்படியே ஞானத்தைக் கிளப்பிவிட்டதென்றும் - ஒருவன் எனக்குக் கனவிலே வந்து காண்பித்தார்கள் என்றும் - ஒருவன் நான் கோவில் முன் பாடிக்கொண்டிருக்கும் போது - கதவு படேர் என்று திறந்து - பிரசன்னமாகி ஞானத்தை ஏத்தினார்கள் என்றும் அதிலிருந்துதான் வந்து எனக்குத் தொடுத்துவிட்ட தென்றும் - ஒருவன் நான் தியானித்துக் கொண்டிருக்கும் போது அந்தர மார்க்கமாக வந்து ஆத்மாவுடனே பேசிக்கொண்டு போகிறதென்றும் - ஒருவன் என்னுடைய படிப்பு மிகுதியினாலே கடவுளே ஆச்சரியப்பட்டு நான் வெளிக்கிப் போய்வரும் பாதையில் - குறுக்கிட்டு - கண்டத்தில் கறுப்பும் கையில் தீயும் நெற்றியில் கண்ணும் காட்டி - இதோ பாரடா என்று தோற்றுவித்தார்கள் என்றும் - இதை யாருக்கும் வெளியே சொல்லாதடா என்றாரெனப் பிரசங்கித்துக் கொண்டும் - மற்றொருவன் - தனியே வழிகூடிப் போகும் போது திடீரென்று வந்து குறுக்காட்டி ஆசீர்வதித்து மறைந்நார் அதிலிருந்து ஞானம் என்னிடம் வந்து புகுந்துகொண்ட தென்றும் - வேறொருவன் நான் பொதிகை போயிருந்தேன் - சோதி விருச்சத்தடி அகஸ்தியரைக் கண்டேன் அதனால் எனக்கு ஞானம் ஊறிவிட்டதென்றும் - பின்னொருவன் வாயைத் திறக்கச் சொல்லித் துப்பினார் அதிலிருந்து எனக்கு ஞானம் எத்திவிட்டதென்றும் - பிறகொருவன் - விளக்கேற்றி வைத்து தான் அதைத் தியானித்துக் கொண்டிருக்கையில்

தாமிருந்த மேல்மாடி எல்லாம் பொத்துக்கொண்டு னீள மான புகை ரூபமாக வந்திறங்கி அதில் ஆண் பெண் ரூபந்தோன்றி காட்சியளித்ததினலே தனக்கு ஞானம் பற்றிக்கொண்ட தென்றும் – இன்னெருவன் வியா கூலத்தில் பட்டுக்கொண்டு விழிக்கையில் – உருக்க மாகத் தியானம் பண்ணினதால் அதிலிருந்து ஞானம் ஊணிவிட்டதென்றும் – திரும்பொருவன் எனக்கு அக் கரை தேசத்தில் ஒரு மகான் வந்து சொன்ஞர் அது தொடுத்து ஞானம் ஒட்டி விட்டதென்றும் – சிலர் மூச்சு இழுத்ததினல் யோகம் கிளம்பி ஞானம் கூடிவிட்ட தென்றும் – சிலர் சர்வத்தையும் விட்டு விட்டதினல் பிர்மமாக ஆகிவிட்டதென்றும் – சிலர் பிறந்ததும் தானே ஞானம் முளைத்து அப்படியே ஆகிவிட்டதென்றும் – ஒருவன் சுடுகாட்டில் குழிவெட்டி வேலிபோட்டுத் தலை மறைவா இருந்ததால் சுப்பிரமணியர் தனக்குச் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டுப் போனர் என்றும் – வயது ஆக ஆகத் தம்மைத் தவிக்க விட்டு விட்டதென் றும் – இவ்விதமாகத் தற்புகழ் எச்சித்தனம் படைத்த காவியங்கள் இயற்றிய கெடுபாடுடைய படுபாவி ஞானியர்களும் இன்னும் இவ்வாருக – படுசாம அரங் கத்தன வேடங்கள் போட்டு ஞானியரென்றும் சிவன டியா ரென்றும் குருக்கள் மஸ்தான் சன்யாசி ஒலிக ளென்றும் ரிஷிகள் ஆச்சாரியர் என்றும் – இன்னும் இவைபோன் அனந்தானந்தம் பேர்கள் – பகிரங்கப் பகல் வேடதாரிகளாகத் திரிகுவதற்கு ஆதாரமாயும்

மக்கள் அதனையே நிச்சயமாக நெடுக நம்புவதற்கு ஆதாரமாயும் இருந்து போலித்தனமே வித்தாத் - தங்கி விடச் செய்த - அந்தத் தலையாட்டிக் கையாட்டியர் கள் இவ்வாறு அறிவுக்குப் பொருத்தமில்லாததும் - கேள்விப் புடத்துக்கு நில்லாததும் - முன்னுக்குப் பின் முரண்பாடுடையதும் - செயலுக்கு வராததும் மனுச தனங்களின் இயற்கை வரவுக்கு மாற்றமானதும் ஓர் கிறுக்குத்தன மானதுமான தான்தோன்றிச் செயலைச் சைதன்ய ஞான வழியென்று கூறி அழகான லட்சண விதிகள் பூட்டிப் பாடிக் கையாடிய எழுத்தானதி னுலே அதாகிறது அறியாத எதார்த்த மனம் படைத்த மக்களிடத்திற் பலிதமானதே தவிர நிசமாக நின்று கேள்வி கேட்டு நிரூபியென்று நிற்கும் நிலைத்த மனம் படைத்தவர் இடத்தில் பலிக்காது நின்று விழித்துப் பதுங்குவதினுல் தீவிர மனம் படைத்த மக்களை நாஸ்திகத் தனத்திலாக்கிப் பெருக்கி விட்டு இருக்கின்றதென்று இங்கே அறியக்கிடக்கின்றது.

ஆதலினுலே மேலே நும் பேசிவந்துள்ள சிற்றூரி னிடத்தே இஸ்லாமிய மதம் ஜமால் குலத்தின் கண்ணே தோன்றிய நெறிநீதரென்னும் பொறைமாதவப் பெரிய தாயாகிய சீதேவியரிடத்தில் வந்து குமாரராக அவதாரம் செய்து இருக்கும் பச்சிளந் திருமேனியானது அதற்குரிய வலிமை ஏற்றம் - ஏறுவான் வேண்டி ஒன்றன்பின் ஒன்ருக உணர்வறிவு நுவறிவு செவியறிவு கண் ணறிவு வாசனை நுகரறிவும் இதைப் போலவே எல்லா அகம் புற அங்கங்களும் வளர்ந்தேறி யேறிப்

புது வனப்பு ளுைக்கு ளுள் உயர்ந்து பாற்குடி காலம் புரண்டு தவழ்ந்து தத்தி எழுந்து பிடினடை னடந்து மழலை பொழிந்து வயதொரு ளுன்ஙாக வளர்ந்து வரும் வருங்ஙால இளம் பாலரவர்கள் பின்னே வயதேறி வரும் ளுைவயிலே உடுக்கை சங்ஙு முத்திராலங்ங னிக்கிரக அனுக்கிரக திருப்பாலிப்புக் குடையேந்துவதற்கென இங்ஙே வந்து பிறந்நிருக்கும் வளர் குழந்நை யவர்களின் புஜனெடுந் நடம்கையாகிய சிவந்ந வர்ண மணிக் கரங்ங ளிரண்டினுக்கும் அணிகலன் காப்பிட்டார்கள் -

மேலும் ஆயிரக் கணக்கான வருடங்ஙளுக்கு முன்னே அப்பாலே உண்டாகிய பாரவான்ஙளாகிய தானியேல் அவர்களும் யோவான் அவர்களும் அடையாளம் குறி னிறம் முதலான செயல்களும் காட்டித் தெய்வீக ஆட்சியின் பொற் கிரீடமும் அணிந்து விளங்ஙப் பின் காலத்தில் வருவார்களென்று சிறப்பித்துக் கூறியுள்ள படியே இங்ஙே அவதாரம் ஆகியிருக்கும் அரிய சிரசினைத் தாங்ஙி யிரானின்ற இளம் பச்சிளம் கமுகினைப் போன்ற மென் மிடரென்னும் கழுத்தினுக்கு அழகொளிர் வடிவுடை காரை பூட்டினுர்கள் - அன்றியும் முன்காலந் நோன்றிய அன்னுைவயிலே சுரியானிப் பாசையில் இறக்கப் பெற்றுள்ள இன்ஜீல் வேதமென்னும் திரு மறையில் கூறியிரானின்ற தீர்க்கத் தரிசனத்தில் -

ஊப்பாசு என்னும் தங்கப் பொற்கச்சு வருங்கால இறுதித் தீர்ப்பரவர்கள் அரையில் அணிந்து வருவார்களென்று கூறப்பெற் றிருக்கின்ற அவதாரரவர்களின் இளம் பூ மேனி தாங்கி யிரானின்ற கச்சணியிடைக்கு ஆபரண அரைஞாண் சதங்கை புனைந்நார்கள் - மேலும் இவ்வுலக முழுதினுக்கும் தெய்விக னிறைவிரி சோபனத் திருவுரு வரமருள் குன்றுனது வந் நவதாரம் செய்து விளங்கா னிற்கும் இளந் திருமேனியைத் தாங்கி யிரானின்ற வர்ணேைதய இரு தாள்களும் கண்ணுளரின் உலைக்களத்தில் வார்த்த வெண்கலம் விளக்கி வைத்தனபோன் றிருக்குமென்று முன்மறையாதிய செம்மல்கள் கூறியிருக்கின்றதின் பிரகாரமே இசைந் நசைந்நிருக்கின்ற இரு னெடிய பதங்களின் படமிலங்க னிலவொளி விரிக்கும் விருது காப்புகளும் அணிந்நார்கள் - இவ்வாருக அணியப் பெற்று விளங்கும் தேவ ஓவியமாகிய இளஞ்செம்மலரவர்கள் ... ...

அதிலிருந்து பிள்ளைகளுடன் னாள்தோறும் சென்று மாரிகாலத்தில் வாத்தியார் வீட்டுத் திண்ணையிலும் பிள்ளைகள் அதிகமாக வரும் கோடைகாலத்தில் - ஊர் மேற்குத் தண்ணிக் கிணற்றிற்கும் வடபாகமாயும் ஒட்டக் கிணற்றிற்கு மேல்புறமாயும் ஓடிவந்துகொண்டிருக்கும் னீரோடையின் மேலக்கரையில் வளர்ந்தோடி னெருங் ஙிச் சரிந்திருக்கும் - இண்டம் புதரடி இளமணலி னிடத்தும் படித்து வந்நார்கள் - இது சரிதமானது எழுதி வரும் ஞானயிலே இங்ஙே வந்து போயிக்கொண்டிருக்கி ன்றவர்களாகிய - ஏனைய லெக்ஷணுதிகாரத் தொல்காப் பியத் தேர்ச்சி வித்வ விற்பன்னர்களுக்கும் தர்க்க வியாக்கரணக் கலாமலி பண்டிதத் திடாகரர்களுக்கும் - மன்திக்குமஆனி பாசாகிப் பேசும் பாவலராகிய கூசா ஞவினர்களுக்கும் - தத்துவ ஆராய்ச்சி யுலாவுறு கவன சுத்த பிலாசபராகிய வாக்கு வல்லார்களுக்கும் - கடைக் கலியுகத் திரண்கொண்டேறி னிற்கும் அகண்டு வலுத்து விளைந்து விரிவுற்றிருக்குங் ஙல்வி யனைத்தையும் கடந்து வரும் வரும் யுகங்ஙோடி மனுசதளங்ஙளுக்கெல்லாம் அளக்கவர விருக்கும் அரிய கல்வியினை - இந்நக் குழந்தையானது இவ் இண்டம் புதரடியிடத்தும் திண்ணையினிடத்தும் கூட்டப் பெற்றுள்ள மிகச் சிறிய - இந்நப் பள்ளிக்கூடத்தில்த்தானு படித்துக்கற்றேறப் போகிருர்கள் என தங்ஙள் தங்ஙள் அனுபவ சாக்ஷி யான ஆச்சேபம் பிறந்து விடுவதினுலே அவ் ஆச்சேபத் தினைத் தெளிவு படுத்தி முடிவுகட்டி விட்டுச் செல்லுவான் வேண்டி எழுது ஆணி முனையானது திரும்பியது -

புகர்சமய ஜகத சத்துவ சத்து கணமிய காப்பேடு கடாவு வைப்பாக னூற்றீரேழு னீள பதிப்பும் சர்வ புவன லக்கண பூதாதி லக்கிய வீடடங்கு ஜீவ ஜீவேச உசும்பு உசுவாசந் நொடங்குதலென்னும் தவா திப்பிரவாக்காதி கனுப் பிரகிருதாதிகளும் – எண்ணருங் நோடி மந்திராதிக்கூர் சயனுதிகளும் இசையாதிய காலாம்பத விசய துருவாதிய அங்கங்களும் துருவுலாவு முகார விந்ந பேத விந்து ஞதாதி இன்பனுச் சூடாகர சப்த சப்தாதிய சாயல்களும் ஒலியுலாவு கண கணித னித னிலவு அகர வித்துவச் சுழிதுமிகளும் அகம்புறத்து வாத சுவை சுகியாதி அமல திகாந்ந புரத்துவாத சுவை சுகியாதி னிசத்துவ வித்துவாதிக னிரை னிலைப் புக ளனைத்தும் மதம் மதாதிகண் மறை விதி மதி வினைப்பண் – பயன் செயலாதிய விரிவு கிரந்நங்களும் வித்வேச சடம் சடாங்குகளும் குணனயன்மிய செவி சேர்ப்புக் கொடுத்துதவு ஒளிருரை கான்றுடையாதி களும் – கலாமலி யேறு கவன லக்கணத் தொடர் கற் சுலாம் காயத்திரி ககன் வித்தை கமலைம்மணி கருவிராட் கதிசஞ்ஞீவி ஜீவ கற்பகத்தரு விருட்சவித்தானது எவ்வுலகங்களுக்கும் எட்டி ஏறிப் படர்ந்து விரிந்து விசாலிக்கவென உள்ளடக்கிக் கொண்டு அங்கண் குழந்தை வடிவெடுத்து னிற்பதானது –

... ...

என்று உளறி அலேந்து திரியும் செய்ம் முறையானது - தம்தம் வயதுகளே யெல்லாம் துக்கமும் துயரமுமாக மாற்றி எடுத்துக்கொண்டு அதையும் ஞளடைவில் சிறிது சிறிதாகச் சேதித்து வருவதாகிய இதனையே -

பாரமார்த்திக ஞானமென்றும் சாது சங்க பிரம்ம னிலே யென்றும் சத் சங்க யோக ஞான மென்றும் மேலும் மெய்ம்மை ஜீவ ராஜாங்க சிங்காசனர்களால் அருளப்பெற்ற பரிசுத்த அரிய மெய்ம்மைக் கிரந்தங்களிலும் ஞவுகளேப் போட்டு உளம்பிக் கொண்டு சொரணை யில்லாது விறைத்து 'ஓம் ஓம்' என்றும் 'அகம் பிர்மாஸ்மி' என்றும் இவைபோல் பலவற்றை னீட்டியும் குறுக்கியும் னிலே பொருளறியாது கண்ணே மூடிக் கொண்டு சப்தித்து ஏமாற்றிப் பொய்ப் பேயாட்டம் ஆடிக்கொண்டிருந்த வித விதமாகிய ஆயிரக் கணக்கான எங்களின் பேயாட்டத்தில் - ஒவ்வொருவருக்கும் வேறு வேருகத் தக்கபடி இரங்கி வந்து னின்று பொய் வேடம் போட்டுப் பயில் பண்ணி அதில் இச்சை பிறங்கச் செய்து எம படரின் அச்சத்தினைக் கிளப்பி தடவிச் சன்னிதி யிருத்தி வினு விடையின் மூலமாக மனித மேம்பாட்டினைத் தூண்டி வித்தை அவித்தை யென்னும் எழுச்சியினைப் பதித்து எங்களே ஜீவேச ஏற்றச் சீர் ஞட்டுவான் வேண்டி -

ஏட்டுகளே விரித்துப் பாட்டுகள் பாடிக்காட்டி விள்ளாத கள்ளிமுதுகாட்டி வல்லிருளோட்டி சாந்தி யென்னும் வாடாத தீபத்தினை யேற்றி எங்களெல்லோ

ரையும் பொற்கோல் கரந்தாங்கி அடித்து ஓட்டிக் கொண்டு ஆறாரென்னும் குருச் சேத்திரமாகிய திரு வரங்கத் திருச் சுவர்ணத் தில்லைத் திருச்சிற்றம்பலத் திற் கேற்றுவதற்கு -

தெருப்பாகால்க ளென்னும் பரட்டுமுள்க் காடு களும் அனந்நானந்நம் இடர்குன்றுகளும் கடத்தித் திரு ஆலவாயின் ஒலிவாமலை முகனேரு வழிபாதை பார்த்து ஓட்டிப் பற்றிக்கொண்டு போயி அங்கே னிஜ வர்ண பன்ன தேன்கனி கசிந்நொழுகும் கொத்துகள் அசைந் நாடிச் சிதறி னிலங்கமழ்ந் நிரானின்ற சோங்கோங் கிச் சுரந்நிலங்கும் பொன்னிவளங் காடேற்றித் தின்னு மல் தின்னு குன்னு வயிறு புடைத்துப் பொழுது படாச் சுனையில் ஜீவத் தண்ணீர் அருந்ந விடுத்துத் தினந் நோறும் ஓட்டி மேய்த்து வருபவர்களாகிய எங்களெல் லோருடைய தீபாலங்கார மெய்வழி ஆண்டவர்களாகிய வர்கள் - அந்நத் தெய்வீக மேய்ப்பு எண்ணம் உள்ளே அடக்கிக் கொண்டு அங்கே னிற்கின்றவர்களாதலினலே அங்ஙனம் ஐயறிவு ஆவினங்களை மேய்க்கக் கோல் கைபிடித் தெழுந்நார்கள் -

... ...

சாம்பி ணம்வந்து கூடிய சந்தையில்
தாம்பி றந்நுத னித்துணர் வேறுளள்
வீம்பி தென்றுவி ளைந்நன னெஞ்சிலே
ஏம்பி றந்நதென் றெண்ணுமன் னுளிலே

வீம்பேறி விரிந்து விளைவுற்றிருக்கும் – சோம்பேறிச் சதளங்கள் சூழ்ந்து பெருக் கெடுத்துத் தாம் போதியாகத் தடுமாறுகின்ற தீம்பாட்டு இனம் பிணங்கும் வீணினங்களுக் கிடையே –

ஆன கம்புக றிவுறுங் காலத்தே
கான கஞ்ஞென்று காலிகன் றோட்டியே
பான றும்பசு மேய்த்துமே பாடிக்கித்
தோண ரும்பொழு தோடத்தி ரும்புமே

இவ்வாருக வீடேறுந் தேடிளம்பூம் பாடகாரூடராகிய குமாரரவர்கள் பனிகாலம் மாய்ந்து வெயில் காலங் காய்ந்து இலை சோர்ந் துதிர்ந்து மழைமாரி ஓங்கி விரைபாவ னிற்கும் –

இன்ன னகாலம் ஏற்றும்வே ளாண்மையுள்
தன்னர் தந்தைய ரோடுஉ ழவுசெய்
பன்ன கம்பூமி யிற்பயி ரேற்றியே
வின்ன மில்லாவி ளைமலி காலத்தே

சென்னெறிச் சீர்பாடும் குமாரரவர்களுக்கு வயதானது ஒரு பதிஞருக வளர்ந்து வருங்காலத்திலே – தன்னெழில் வயங்கும் பொன்னுலகு ஞட்டு னன்னெறி

யேற்ற வாடாமனத்துக் கூடகாரூடராகிய குமார ரவர்களை -

ஏரு கோல்ச்சமு சாரிய ரென்றுயெல்
லோருங் கூறஇ யற்றுந்நெறா ழில்னலக்
காரி யப்பணி யெவ்வண மாயினு
மீறி னின்றுமு டிப்பபே ராண்மையே

இவ்வாருக வேளாண்மையினும் பேராண்மை யார்வங்கொண் டெழுந்து ஓயாத பாடேறிவருங் ஙாலத்திலே - குமாரரவர்களின் உள்ளகத் துராஞ்ஞி வெளியே விசிறிவந்துகொண்டிருக்கும்பேரறிவாகரமேறி னே ராரென வீறுடைச் சீரியல்ப் பாரினிற் றேடுவ தெங்கே இங்கே அழிபாவியர் வழிபாடுகள் ஒழியாதென வென் ரேருவார் - பின் - வேலையை னினைந்தங் கேறு வார்கள் -இந்நப்பிரகாரமாகவே னடக்குகின்ற னேரமும் பாட்டு னேரமும் படிப்பு னேரமும் விளையாட்டுப் பந்நய னேரமும் ஒடுக்க னேரமும் உறங்கிப் பின் -

எழுந்து னேரமே ஏகனை வேண்டியே
தொழுது வந்நுது லங்கிடக் கோகுலம்
முழுது மெப்பணி யாயினு மேற்கொண்டு
வழுவ றவேனி மிர்ந்நுவ யங்குனுள்

... ...

இவ்வாருகத் தெரிசனையி லிருந்துவரும் பெரிய பூமியினிடத்தே –

பரிசு பட்டம்பந் நாட்டம்மல் லாட்டமும்
இருப னிரெண்ட டிஎட்டி எட்டுதல்
அரிய கம்பம்கல் கட்டினின் றேறுதல்
பரிந்து எவ்விப்ப ருங்கிணறு தாண்டுதல்

(முதலாகிய) ஒரு தனி - மனத்துணிவு வீர விளை யாட்டினையுடைய - தீர குபேரராகிய குமாரரை னும் மதினோர் னிறுவி – இவர்கள் யாவரென ஆராயு மிடத்து - பின்வரும் காலமாகிய இன்று - ஆயிரமாயிரக் கணக்கான சிஷ்யர் குழாந் நிரண்டேறிவரும் இது ஞானயிலே - மெய்ஞ்ஞான திருப்பிரம்ம வித்தையின் செயலானது பழம் புலமை புதுக் கருக்குப் பேறேற்ற மேறி – செழுங் கொழுந்நோடிக் குணப்பணர் விரித்து - சர்வ புவனுதியங்கட்கும் கைபலித லபி யுதவு எதார்த்தக் குன்றேறிக் கூவிக் கொடிவீசிக் கொண் டிருக்கும் - மகா மகத்துவம் பொருந்நிய மெய்வழியை உண்டுபண்ணி மக்கள் மனத்தகத் துறைந்நிரா னின்ற பேரிருள் கடிந்து செவ்விடடை மறைபடாத் திருக் கோலத் திருவிளக் கேற்றி – யுக வானறிய வையம் உய்யச் செய்யவென வளரவிட்டுக் கொண் டிருக்கும் - கர்த்தாதி கர்த்தராகிய இன்று இங்கே எங்களுடைய சம்மத எம்மான் ரம்மிய வருகையைக் குறித்துத் தெக்கத் தெளிவாக மகாத் துலக்கத்துடனே முன்மறையாதிய கிரந்நங்களிலும் -

ஆங்காங்கு பலபலவாம் தேசம் பாஷைகளிலும் விரித் திருப்பது போன்றே - சத்திய னென்னாம் வேதத்தில் எக்காரணத்தைக் கொண்டும் யாவற்றிராளாலேனும் அதனுள்ளடக்கப்பெற்றுள்ள ஓர் அச்சரத்தையேனும் - அல்லது ஓர் சூன் சுக்கூன் புள்ளி கோட்டினையேனும் கூட்டவோ குறைக்கவோ முடியாததாகிய மகா மகாக் காபந்து கட்டுமானத் திட்டத்துக்குள் னிருந்துவரும் குருஆன் சரீபின் கண்ணே கூவிக் கூப்பிட்டுக் காட்டிக் கொண்டிருக்கும் ஐம்பத்துனென்று ஐம்பத்துஐந்தாவது ஆயத்தும் இன்னும் பலனூறு னூறு ஆயிரக்கணக் கான ஆயத்துக்களிலும் இங்ஙே சத்திய மெய்வழி பாட்டிலிருந்து வளர்ந்தேறி வரும் செயலாதிய அடையா ளங்களைக் குறிப்பிட்டுக் குறிப்பிட்டுப் பசுமரத் தாணி யென அறைந்திருக்கும் அசையா னெறித் திருவசனம் னெனென னின்று அலங்காரம் பிறங்க அதிகாரத்துடன் கூறி வருகின்ற எழூது ஆணிக் கோடாவது -

அதாவது இன்னெடுங்கடல் சூழப்பெற்ற பெரிய னிலப் பரப்பினுக்கு - ஒரே மெய்வழிச் சபைதான் இருக்கும் என்றும் - அதன் எல்லை இடம் காலக்குறிப்பு சுயம்பு உன்னத னீதி னேர்மை வாய்மை அடையா ளங்களும் - வலிமை யதார்த்த பிரத்தியட்ச வழிபாடு னிச்சய னிரூபணை னடைமுறைகளும் எடுத்துக்காட்டிக் கொண் டிருப்பது போலவே - இது காலம் இங்ஙே அன்னெழுத்தின் படியே னிரூபக னிரூபணைத் தனியராக னின்று அதிஜெயச் செயல் வலிமை எழிலேறி விளங்கக் காட்டிக்கொண் டிருக்கிறவர்க

ளாதலினாலே அங்ஙே குமார பருவ காலத்தினும் ஒரு தனி அதிசெயல் வலிமை தீரவிளையாட்டினை யுடையவர் களாக னின்று விளங்கினர்கள் போலும் ... ...
... ...

தனியே வியாபாரம் செய்யலாமென்ற னாட்ட முடையவர்களாய்ப் - பலபல பேர்களிடத்திலும் விசா ரித்துப் பார்த்ததில் – சுமார் ஒரு னூற்றுப்பத்து மைல் தூரத்திலிருக்கும் பூந்துறை னாட்டின் எல்லை தாண்டி மேற்கே திங்களூராதீன னத்தமேட்டிற்கும் அருகே – காசுக்காரம் பாளையம் சென்று அங்ஙே வியாபாரம் செய்யலாமென எண்ணித் தன்னகத்தே னிண்ணயம் செய்து – னூற்றுக்கணக்காயுள்ள ஒரு சிறிய தொகையே எடுத்துக்கொண்டு தாங்கள் மட்டுமே போவதென் றெழும்பி - தாய் தந்தையர்களிடம் விடைபெற்று மற்றும் தங்கள் பந்து ஜனம் னேசரிடத்தும் பயணம் சொல்லிக் கொண்டு - எல்லோரும் கூடி வழியனுப்ப – குமார ரவர்கள் பொருளாய சம்பாதனை செய்து வெகுமதி யடையவென மிகு எண்ணங்கொண் டெழுந்து காசுக் காரம் பாளையத்தின் எல்லையை னாடித் திசை தேடி வழி கூடி னடந்நார்கள் -

இவ்வாருக அவ் வெல்லையை னோக்கிப் பிரயாணம் செய்து வழிகூடி னடந்நதாவது - இது காலமிங்ஙே மெய்வழித் தலையுகத்தை உண்டாக்கி வளரவிட்டுக் கொண்டு இருக்கும் அரிய அனுபவ பிரம்மவித்தை யாகிய பெரிய செயலினை வைத்து - அதுனாளின் பிரயா ணத்தைச் சிந்தை கூர்ந்து ஆராயுமிடத்து –

திருப்பெருந் நவத்ததி - அருட்பா வள்ளலாகியும் வடலூரின் கண்ணே அன்றுளிலே னடமாடும் திருமேனி தாங்கி னின்ற - திடஞான வரத குபேரரெனுங் கொண்ட லவர்களாகியும் இன்னும் இங்கே னமக்கெல்லாம் மெய்ஞ்ஞானக் குலதெய்வப் பரம்பரையில் பெரிய தந்தையராக வந்திரானின்ற இவர்கள் அப்போது அங்கே னமது பவக்கோளிங் நறுத்து மறு பிறப்புத் தந்து னின்றுகொண் டிருக்கும் திருமேனிக் குல தெய்வமே அங்கே குமாரராக னின்றுகொண் டிருந்த அவர்களைப் பார்த்து -

எமது ஜீவ ஆன்மன பரம வித்தாதிய பந்நந் திரண்ட அந்த உருவெடுத்து வந்த - தந்நை தனிகை வள்ளலாகிய பனிமலையரசின் சன்னிதி முன்னிலை யருளால் - விளைவு வெளியாகிய அருட் பெரும் பாவில் - அதாவது தனிப் பெருங் நருணையால் வீறி வெளி வந்து பணர் விரிந்திரா னிற்கும் அருட்பாவில் - எல்லாம் வல்லவர் ஓதுக - யென்றபடி உரைத்ததிற் பெலத்து னின்று காணும் கோடெழுத்தாயது - என் சாமி எனது துரை என்னுயிர் ஞயகம் அவர்கள் தன் சாதியுடைப் பெரிய தவத்தே - என்னும் அலங்காரச் சத்தியச் சிருரைப்படியே இப் பெரிய பூமியில் வந்து - னீ - உதயம் செய்தது சரி - இனி உமக்கு வயதொரு இருபத் தேழில் கலியுகாந்நக் கடைக் கொடுமை யோங்கி வரும் ஞளிலே - அழிதுய ரறுத்துக்கட்டும் பெருந்நவத் தீர்ப்புரிமை எமது கணக்கின் பிரகாரமே - உமக் கென்றே எழுந்நு திரண்ட மெய்ப் பொருளையும்

அதிக அதிகமான வெகுமதிச் சுமையையும் ஆகிய இவ்விரு பெரிய சுமைகளையும் தூக்கிச் சுமந்து கொண்டு – உமது மூலமாக - இப் - பெரிய உலகினுக்கு – அளக்கவேண்டி எழுந்து - எமது ஒரு தனிமுதல் மணிவிம்ப உருவானது – பன்னெடுங் நால காலமாக இப்பெரிய பூமிப் பரப்பெங்கும் சுத்திச் சுமந்து கொண்டு – இறக்கி வைக்கொணுச் சுமையாதலினுலே அலுப்பா அலுத்து வருகின்ருர் களப்பா - அவ்வாறு வரும் தேசமானது கொங்கு தேசம் பூந்துறை ருட்டெல்லை கடந்து அதற்கும் மேற்கே யங்கே – திங்களூர் ஆதீன னத்த வழிபாதை கூடி – சூரியன் முளை கண்டெழும்பும் திசை னேர் கிழக்கு முகமாகத் தடம்பிடித்து – அழியா விதி வழியின் அருட்சுமை தாங்கி – மெலிவா மெலிந்து வருகின்ற எல்லை – பெருனெறிப் பரிசு தர வுனக் கெனவே உரையறிவித்து மரகத மாமலை - வருகிறதப்பா-

அப்பன் என்னுடை
அன்னை தேசிகன்
செப்பி லென்குல
தெய்வ மானவன்
துப்ப னென்னுயிர்த்
துணைவன் யாதுமோர்
தப்பில் அன்பர்சேர்
தனிகை வள்ளலே

ஆனதினுலே – னீ முன்னரே ஓடி - அவ் வெல்லையின் வழி பாதையை அடைந்து எதிர்பார்த்துக் கார்த்துக் கொண்

டிருந்து வருங்காலம் னேரங் நுறிகளும் அடையாள மச்சாடைகளும் கவனமாகக் கண்ணேக்கி னின்று வழி னெடும் பெரும் பாதை யானதினலே – வழிப் போக்கர் இவர் யாரோ எவரோ என்று சிறு செயலுலகோர் ஏமாந்து விட்டிடுவது போலவே – னீயும் ஏமாந்து விட்டிடாது அதி னேக்கு ஜாக்கிரதையாய் னின்று ஒரு பொழுது போலவே உறங்கா தயராது வரும் வரும் பொழுதெலாம் எதிர் னேக்கிக் கொண்டு – இடைக் கட்டி னில்லு – ஏனெனில் – கடைக்கண் சாடைப் பக்கப் பார்வை முக்கண்ண னப்பா – முன் வளைவு னடை பின் கவனவிச்சு – தரிகித்தரிகி மெள்ள னகரும் உள்ளங் கவர் கள்வ னப்பா – அவன் னிதிச் சாடை எண்குணத் தான் மதிச்சாடை மாமணத்தா னப்பா – பண்பூண்டு வேண்டுந் நென்பாண்டி ளுடனைத் தேடிவரும் தேட்டாள னப்பா – மங்காத செவ்வாய்ச் சங்கோசை யங்கே கண் கலங்கு மதன் முன் இதயங் கலங்கும் அதன் பாடு கண்டு – கோடோடி விடாது வழி மறித்து அடிகூட் டிக்கூட்டி ஏ மாத்திப் பறித்து அடித்துக் கொண்டு விடுவாயென்று கூறி வழியனுப்பி வைத்தன போலவே –

அங்கே குமாரரவர்கள் பிரயாணஞ்ஞெய்தார்கள் – இவ்வாருகப் பிரயாணஞ் ஞெய்ததானது பேரருட் பெரிய காரிய காரண பாரமார்த்திக அதி சோபன வரமா திய வரத்தைப் பின் வருங்காலத் துயரறு காரியக் கூர் மையை னீத னேர்மையின் – சுத்தாவிக் கலா – ஜீவ

என்ஜீன் ஆனது – குமாரரவர்களின் இளம்பழன ஜீவாத்மாவின் ஙண்ணே உள்த்தொடர்பு கொண்டு மறைவு முகமாகப் பிடித்துக் கூவி இழுத்துச் சென்றன போன் – ஏறிய வண்டி ரயில்களும் கூவி இழுத்து ஓடிற்று –

ஓடித் திங்ஙளூ ராதீனத் தோரத்தே
தேடிக் காசுக்கா ரம்பாளே யத்தங்ஙே
ஈடில் லாதகு மாரரி ளஞ்ஞெம்மல்
ஞடி யாபாரம் செய்ததை ஞட்டுவாம்

ஞளுக்கு ஞள் வியாபாரத்தோரணையின்கண்ணே வெளிக்கித் தாராளமாகவும் – உள்ச் செலவு சிக்கனராகிய மகா ஆர்வ சித்தமுடையவர்களாக யாவரிடத்தும் தன்னலமின்றிப் பிறருடைய னலன் னேசத்தினையே ஞடும் பேச்சினராகவும் – சினத்தினை மகிழ்ச்சி ரூபமாகத் தழுவிப் பிடித்துக் கனிவுகாட்டிப் பேசிக் காரியங் ஙைக் கொள்ளும் மினுக்கு மதியினராகவும் - வியாபாரத்தின் பெயரானது பெருகிப் பெருகி யேறிற்று –

பெரியோர்களிடம் பெரும் பலன் என்று வாங்ஙின தெல்லாம் பொய்யாய்ப் போலியாய்ப் போனதை எண்ணிக் கண்ணீர் சோர்வார்கள் – னம்மோடே உபதேசம் வாங்ஙினவர்க ளெல்லாம் திருப்தியாய் இருக்கிறுர்களே – னமக்கு மட்டும் ஒரு பயனும் காணுமே என்று ஏங்ஙுவார்கள் - ஞனெல்லாம் வீணுளாகப் போனதை எண்ணித் துயருறுவார்கள் –

உலகத்திற்குப் பெரியோர்கள் பாரவான்ஙளென்றெல்லாம் வந்நார்களே – இப்போது இது காலத்தில்

னமக்கு மட்டும் இல்லாமலா போய்விட்டது என னினைவு வருந்நோறுமெல்லாம் இனி என் செய்வோம் எங்நு போவோம் என்று மங்நுவார்கள் - அல்லது னமக்கு மட்டுந்நான் விதி இல்லையோ என்று அழுகுவார்கள் - அவர்களுக் கெல்லாம் உள்ள திருப்தி னமக்கு இல்லையே என்று அவமான முறுவார்கள் - இப்படிக் கதியில்லாத னம்மைக் கடவுள் ஏன் படைத்தான் என்று இடைகுவார்கள் - இவ்வாறு னெடுனுளும் துயருற்றுவரும் குமாரரவர்களினுடைய னினைவில் திட்டமான னினைவு வந்நதானது - னிச்சயமாய் இக்கடைக் கலித் திரண் னிகழ்ச்சி உலகத்தே யாருக்கும் னிஜமான ஞானம் வேண்டு மென்ற சித்தம் உடையவர்கள் இல்லை போல் இருக்கிறதே யென்று தீர்மானித்து இனி னும் இதில் தன்னந்நனியே தான் - னம் எண்ணத்திற்குத் துணை வேறில்லை என்று துணிந்து - தம்மை எல்லோரும் கூப்பிட்டு அழைத்து வைத்து - உனக்கு வேறு உதவி இல்லை என்று சொல்லி விட்டது போல் எண்ணம்வரவும் - அவர்களை எல்லாம் காலி செய்தார்கள் -

அது முதல் இனி னமக்கு வாசியை விட்டால் வேறு வழியே கிடையாது என்று ஒருமனச் சாய்வு கொண்டவர்ளாய் னுளும் விடா முயற்சியோடு செய்துவரும் னுளையில் உடலில் வாதையின் வெதுப்பு ஏற்பட அதற்காகச் சிலசமயங்களில் னெரிஞ்ஜிப்பூ முருங்கப்பூ இவற்றைப் பாலில் போட்டுக் காய்ச்சி அருந்நுவார்கள் - சிறிது உபாதை மாறினதும் மறுபடியும் தொடர்ந்து செய்து வரும் னுளையிலே ... ...

மூலபண்டாரப் பருவம்

சீலங் கொண்டறி செம்பொருள் விண்டரன்
காலங் கண்டோன்கை யிற்கிரே தாயுகம்
னீள வேதமு னீதர னுப்பினேன்
மூல பண்டாரக் கோலமு ழக்குவாம்

கோலமாஞ் ஜீவ கோள
கோலத்துள் ளிருந்த மெய்ம்மைக்
காலமும் இடமும் னேரம்
கணிதமுங் கூடிச் சேர்ந்து
சாலையென் றெருமெய் மேனி
ஜகந்நனில் பிறங்க எல்லாம்
ஏலவல் லவரும் வந்து
இணைந்தனர் அக்கா லத்தே

அக் காலத்தில் இங்ஙனம் இவ்வுலகு வையம் வழங்கி உய்யும் பொருட்டாய் - மூ - மூ வனாதிகான ஜீவா தின னட்டத்தின் படியினாலே – எங்ஙளுக்கெல்லாம் குலதெய்வமாகி வர இருக்கும் இளஞ்ஞெம்மலாகிய அவர்கள் இளம்பழன பருவ காலத்திலிருந்தே மெய் வழிக் கைம்முதலாகிய மனோ வாக்குக் காயமென்னும் மூன்றில் மனோவாக் கிரண்டும் அதிக ஊக்கத்துடனே னுக்கு னள் அதிகரித்துக் கொண்டிருக்கும் னுயக மவர்களை மெய்வழியிற் பிறங்ங வைப்பான் வேண்டி வையஞ் ஞெழிக்கும் ஐயர் வருகை வருகா வருகை வருகுவ

தற்குவருகும் வருகை மறைனடன வருகை வருகும் கிரண மரகத மாலி திருவுருக்கொண்டு னீத போத வேத னுதை னுதாந்த குருபிரானவர்கள் னும் முன்னரே தெரிந்துகொண் டிரானின்ற அழியாத மெய்ப் பொருளும் வெகு மதிச்சுமையாகிய இறக்கிவைக்கொணு இவ் விருபெரிய சுமைகளையும் தூக்கிச் சுமந்து கொண்டு ஒரு தனி முதல் மணிவிம்ப உருவானது - திங்களூரி லிருந்து சிறிது தெற்கு முகமாக வந்து னேர் கிழக்கு முகமாக வரும் பெரும் பாதைச் சாலை வழியில் சுமார் னுன்கு பர்லாங்கு தூரத்திலிருக்கும் எங்கள் னுயக மவர்களின் வியாபார ஸ்தலமாகவும் குடிபதியாகவும் வசித்து வந்து கொண்டிருக்கும் காசுக்காரன் பாளையத்தில் தங்களுக்குச் சொந்தமான கட்டிடத்திற்கும் கீழ்ப்புறம் வடக்கு முகமாகச் செல்லும் வீதிக்கும் எதிராகச் சுமார் னூறு முழ தூரத்தில் காணும் மேற்படி பெரும் பாதைச் சாலைத் தென்பாகத்துக் கங்கிலே னிற்கும் – பெருத்து ஓங்கி வளர்ந்திரா னின்ற வேம்பு விருட்சத்தின் அடி னிழலில் பழுத்து னரைத்துப் பழுங்கிழ வடிவம் தாங்கிய ஒரு பெரியார் கிழக்கு முகமாகச் சென்றுகொண் டிருக்கும் – அச் - செல்லுகையை - ஞான வேட்கையின் காரணமாக - என்றும் பெரியோர்களைக் கண்டால் அதிக ஆவலுடனே தழுவுகின்ற குண சுபாவத்தையுடைய எங்கள் னுயகமவர்கள் - சாலைக்கும் வடக்கே இருந்து அப்போது தெற்கு முகமாகத் தங்கள் விட்டை னுடி வந்துகொண் டிருக்கையில் தூரத்

திலிருந்நே சாலேயின் வேம்பு விருட்சத்தடி னிழலிலே கிழக்கு முகமாகச் சென்று கொண்டிருக்கும் பெரியா ரவர்களே மாருது பார்த்தவர்களாகவே வந்து மேற்படி விருட்ச னிழலில் சாலே ஏறினர்கள் –

அவ்வாறு சாலே ஏறிய இளஞ் ஞெம்மலவர்கள் அன் னிழலின் னின்று கொண்டு கிழக்கு முகமாகச் செல்லும் அந்ந விரிவு சிகை பெரிய கிரண அரிய தலேப் பெரியா ரவர்களேத் தவன துவச கவனராய்க் கவனித் துப் பார்த்தார்கள் – அப்போது அது கவனத்திற்குத் தோன்றப் பெற்றதானது – அங்கே சென்றுகொண் டிருக்கும் – முன் வளேவு னடை – எண்ஙுணத் திழுப்புப் – பின் கவன வீச்சு னிறையறிவுக் குடிப் பெரியாரவர் கள் – தங்ஙளேக் கூப்பிட்டால் திரும்பிப் போகலாமென்ற எண்ணத்தை உள்ளத்துக்குள்ளே வைத்துக் கொண்டு மெள்ள னகருகின்றவர்கள் போலவே னினேந்நார்கள் –

அன்றியும் இரண்டாவது வைக்க இடமின்றிய மெய்ப்பொருள் சுமையும் – கைப்படம் மாரு மதிச்சுமை யும் இரு பெரும் பளுவும் – விரிதலே சுமப்பத் தருகித் தரு கிப் பக்கப் பார்வை னடையுடனே களேப்பேறி ஏறி அலுத்துத் தனியே போகின்றேனே – னீ – என் களேப் பினே ஆற்ற உனக்குமா இரக்கம துள்ளத்தில்லேயோ என்று பண் பேறுங்ஙுடி எண் ஙுணத்தானவர்கள் னினேப் பதாகத் தங்ஙள் இதயத்துக்குள்ளே வந்து சுருக்கென்று பாய்ந்நோடிற்று – மேலும் –

பின்னாலே வந்து சாலை ஏறிய தங்களைக் குறி வைத்துக் கவனித்து – நீ – என்னைக் கூப்பிடு – நான் தூரமாகப் போய் விடுவதற்குள்ளே கூப்பிடு என்று மதிவாடைவீசும் நிதிச்சாடை மா மணத்தார் நினைத் துக் கொண்டே செல்லுகின்றார்களென்று திட்டமான தோற்றம் பொட்டென நினைவினி லூறி ஓர்ந்தோடிற்று–

நினைவி லூறிய நினைவிது ஏதென
நினைவு கொண்டுபின் நிணைவினை யோருற
தனிகை நீள்மலை தன்னினை விசின
நினைவி தென்றுக நிவுகொண் டோடிற்றே

இவ்வாறாக நினைவானது ஊறி ஓர்ந்தோடிய இளஞ்ஞெம்மலவர்கள் சரேலென்று சென்று இடம்பாக மாக அருகே நெருங்கி அந்தக் காராருமேனி நேராரு மற்ற ஆரான நாட்டுப் பேரான பெம்மான் – மணி வாணி மன்னன் தனிகாசலண்ணர் என்று இதனடுத்து வரும் பருவ நேரத்தே உணர வரானின்ற பெரியார் அவர்களின் கண்ணொதிராகித், தங்களின் முன்னெடும் பழக்கம் போலவே தஸ்லீம் செய்து முகநோக்கி, அடியே னுடைய குடிசைக்கு வரவேணு மென்று உபச்சார ஆச ரிப்புடனே தங்களின் இரு கரங்களையும் நீட்டித் தாழ்த்தி ஏந்தி அழைத்தார்கள் – அதற்கு இணங்கிய அந்தப் பெரியாரவர்களும் அனேகம் நெடுநாள் பழகி இருந்துவரும் பழக்கத்தினரைப் போலவே – மறைந்து மெல்லெனத் தோன்றும் இளனகை பிறங்க குமாரரவர்க ளின் கூடவே விடுவந்து சேர்ந்நார்கள் – அங்ஙனம் கூட்டி

வந்த பெரியாரவர்களுக்கு உபசரிப்புடனே தங்களின் அருகிலே ஆசனமிட்டு இருக்க வைத்து அன்று காலைப் பலகாரம் செய்து கொண்டுவந்து வைக்கப் பெற்ற கேழ்வரகுத் தோசைக்குத் தேன் தோய்த்து உண்டு பசும் பால் அருந்தினர்கள் – அதன் பின் இருவருமாக எழுந்து தங்கள் னெல்மண்டி வீட்டுக்கு வந்து பெரியார் அவர்களுக்கு ஆசனம் விரித்து இருக்கும்படிச் செய்து விட்டுத் தாங்கள் பொட்டியடிக்கல்லாப் பலகையின் மீது வழக்கம் போலிருந்துகொண்டு இருவரும் யோக சேமத்தைப் பற்றியும் இல்லற தர்மத்தைப் பற்றியும் அரிது னேர்ந்நதைப் பற்றியும் பேசிக்கொண் டிருந்நார் கள் – அதன் பின் இளஞ் ஞெம்மலாகிய எங்கள் னுயக மவர்கள் தாங்கள் அனேக னுளாகக் கற்றுத் தேர்ச்சி யடைந்திருக்கும் வாசிப் பழக்கமென்னும் அடயோகத் திற்கு அனேகம் சன்னியாசிமார்களும் குருக்கள் மஸ் தான்ஙளும் – அனேகம் புலவ ராலீம்களும் இன்னும் னுன்தான் ஞானியென்று வந்நவர்களும் பிரம்மச்சாரி சாமியார் தவசிமார் என்று – வந்ந வந்ந பேர்களெல் லாம் பேசிப் பேசி இதுதான் சரியான சிவ ராஜயோக மென்று கூறிச் சிறப்பித்துப் பட்டங் னொடுத்துச் சென்றது போலவே இன்று இவர்களும் னமக்குச் சிறப் பித்துப் பட்டங் னொடுப்பார்களென்னும் மகிழ்ச்சியுடை யவர்களாய்த் தாங்கள் தேர்ச்சி பெற்றுக் கைவந்திருக் கும் வாசிப் பழக்க மென்னும் அடயோகத்தைப் பற்றி மகாப் பெரிய பாரதூரமாகக் கிளப்பி அனேக னூற்

கோள்கள் கொடுத்துத் தங்கள் அனுபவப் பழக்கத் திற்குச் செய்யுள்கள் மேற்கோள் எடுத்துக் கூறி னெடு னேரம் வரைக்கும் சரமாரியாகப் பேசிக்கொண்டு வந்து இவ்வுலக மக்கள் உய்வதற்கு வாசியை விட்டால் வேறு வழியே கிடையாது என்று கடைசியாகக் கொண்டுவந்து முடித்தார்கள் –

அதனை ஆச்சரியம் பிறங்க – ஊம்காரம் – ஒன்று னீட்டியும் ஒன்று குறுக்கியும் பலவாருகப் புதுக்கேள்வி ஆச்சரியமாக னெடுகக் கேட்டுக்கொண்டே வந்த பெரியாரவர்கள் கடைசியில் வந்து – இது சரி என்றும் சரி இல்லை என்றும் ஒன்றும் சொல்லாமலும் திரும்பிப் பாராமலும் மவுனமாகச் சும்மா இருந்துவிட் டார்கள் – அது கண்ட எங்கள் ஞயகமவர்கள் - ஞம் இதுவரை பேசி வந்துள்ள யோக சாதனைச் சூறை இவர்களுக்குப் புலப்படவில்லைபோ லிருக்கிறதென்று எண்ணியவர்களாய் முக னேக்கி என்ன – பெரிய வர்களே – சிவராஜ யோகம் சரிதானு என்னவென்று கேட்டார்கள் –

அதற்கு அப் பெரியாரவர்கள் உரைத்ததாவது – பதில் என்னவெனில் – ஆம் சரிதான் மூச்சை இழுத்து அடக்க முயலுவதானது னரக வாதிகளாகிய பாவியர் களுக்கேற்ற குறுக்கு வழிப் பிரயாணம் இது சரிதான் என்று சிறப்பித்துக் கூறும் திடக் குறி முகமாகச் சொல்லி முடித்து விட்டு-அதற்கு ஆதாரமாகப் புலத்திய மகா முனிவரவர்களினுடைய னூலில் -

காணுமூச் சடக்கி விழியது முருட்டிக்
கபாலமும் திறந்நவர் கோடி
கனத்தவாய் வதனல் குன்மனே யணுகிக்
கலங்கினே ரவரொரு கோடி
தோணுமெய் மறந்து சுழன்றுட லெழும்பிச்
சொக்கினே ரவரொரு கோடி
சூலைவாய் வணுகிச் சுவாலையு மெழும்பிச்
சுரமதா லிறந்நனர் கோடி
உள்ளேயுண் ணுக்கையண் ணளத்து ளேற்றி
யுள்வடங்கிமாண் டனர்களும் கோடி
உயரசா ணிளம் முழமது எழும்பி
ஒங்கியே ஒடுங்கினர் கோடி
பேணதி சாரப் பேதிவந் நணுகிப்
பிறவியு மிழந்நனர் கோடி
பெருமையாம் கற்ப சாதனை யறியாப்
பிராணனு மழிந்துமாண் டனரே

இனமறி யாமல் இருத்தியே வாய்வை
இறந்நவ ரவரொரு கோடி
இனியதம் பனஞ்ஞெய் தெழும்பியே கும்பித்
தேங்கினே ரவரொரு கோடி
கனமறி யாமல் காற்றினை யேற்றிக்
கருதியே இறந்நனர் கோடி
கண்டுவா சியினில் ஒன்றைவிட் டொன்று
கலங்கியே மடிந்நனர் கோடி

தினமொரு நாழி வாசிகொண் டிழுத்துச்
சிவபுர மேகினோர் கோடி
சிறந்திடும் கண்மூக் கெனுமதைப் போற்றிச்
சிறந்தவ ரவரொரு கோடி
தன்பெரு விரலால் அண்ணாக்கையுள் ளேற்றித்
தயங்கினோ ரவரொரு கோடி
தலமதில் மூழ்கிச் சாதனை யதீத
சாக்காடுவந் நெய்தினோர் கோடி.

இன்னும் இதன் அடிச் செய்யுளில்

பாருல கதிதம் தேடியும் குருவின்
பதமடை யாமலு மாண்டார்.

தெரிந்துஇப் பரீட்சை உத்தம ரனேகம்
தெளிந்தவ ரறிந்துமே செப்பச்
சீறிடும் வாசி யோகத்தின் பெருமை
திருத்தமா யுரைத்திட லாமே...

என்று இந்தப் பிரகாரமாக விளங்கி உணரும் படிக்கி மகாத் துலக்கத்துடனே எடுத்துக் கொடுத்துத் திடக் குறி னேக்காகப் பார்த்தார்கள் –

அப்போது எங்கள் நயக மவர்களுக்குத் தாங்கள் அனுஷ்டித்து வந்த அடயோகத்தினல் சரீரத்தில் ஏற்பட்டிருக்கும் குன்ம உதர வாதைக்கு ஒத்த வண்ணமாகத் தக்கபடி எடுத்துக்காட்டி னிரூபித்துவிட்டார்கள் –

அதனைக் கேட்ட நாயகமவர்கள் - மனத்தில் இடிவிழுந் நாற் போலே பெருங்கலக்க முற்றவர்களா யெண்ணிய தாவது -

அனேக காலந் தொடுத்து இன்றைள் வரைக்கும் வேத வேதாந்தங்களாலும் அதனைப் பாராயணஞ் செய்து சுற்றி யலையும் குருமார்களாலும் - யோக சித்த ரென்று வந்தவர்களாலும் பல் வகை மதஸ்தாபகம் பேசிவந்தவர்களாலும் ஈடேற்ற மென்று அதிது சொல்லித் திரியும் ஆலீம்களாலும் மஸ்தான் சாமியார் சன்னியாசி என்று வந்தவர்களாலும் மகா மேலான வழி இதுதான் என்று சிறப்பித்துக் கூறப் பெற்ற தாகிய நாம் கைக்கொண்ட சிவராஜ யோகத்தை இழிவு படுத்தித் தக்க ஆதாரங்களுடனே எடுத்து னிரூபித்துக் கூறவல்லார் இவர்கள் யாராயிருக்கலா மென்று சிறிது னேரம் திகைத்துச் சிந்தித்து எண்ணியதாவது -

இப் பெரியார் ஓர் அபுரூபமான மெய்ஞ் ஞானி யாகத்தான் இருக்க வேண்டும் - இல்லாவிட்டால் னமது யோகத்தை இழித்துரைக்கத் துணிந்திருக்க மாட்டா ரென்று யோசித்தவர்களாய் - இவர் இதற்கு மேம்பட்ட பிறிதோர் வழியைச் சன்மார்க்கமென்று ஸ்தாபிப்பாரேல் அது உண்மையில் முகப்பத்தாகக் கூடிய மெய்ஞ்ஞான மார்க்கமாகத்தான் இருக்க வேண்டும் என்று தீர்மானித்துக்கொண் டிருந்தார்கள் -

அங்ஙன மிருக்கையில் பெரியாரவர்கள் எங்கள் நாயக மவர்களைப் பார்த்து - உன்னுடைய ஜீவதேக

மாக னீ இருந்ந ரோஸ்மீதாக்குடைய காலத்தில் - அங்கே - னீ - வாங்கி வந்ந அமானித மென்னப் பெற்ற சீதனம் உன் னுள் அது எங்கே - அன்றியும் னீ சீதனக் கடன் வாங்கிய திருஸ்தலமென்னும் அந்ந னுடுதான் எங்கே என்று கேள்வியாகக் கேட்டார்கள் -

அங்கே இவ்வாறு கேட்ட கேள்வியின் விடை யானது அவசியம் யாவற்றிராளும் அறிய வேண்டு வனவாகிய கேள்விதான் என்று உணர்ந்நார்கள் எனினும் இதுவரையிலும் - எவ்விடத்தும் - யாவரும் - கேட்டுச் சொல்லி யறியாததும் - இன்னும் - எப்படிக் குள்ளவர்களினுடைய அதிது பிரசங்கத் தலத்தும் - புழங்கத் தாங்கள் பார்த்துக் கேட்டறியாததும் - அன்றியும் - எங்கும் பழக்க வழக்கங்களி லில்லாதது மாய்ப் புதிதாக இருந்நபடியினலே அதற்கு னயகமவர் கள்-மெய் வாய் கண் மூக்குச் செவி முன் பின் என்றும் - இன்னும் பலவாருக ஏதேதோ சொல்லியும் சரிவராமல்- பெரியாரவர்கள் இவைகளெல்லாம் - மிருகங்களுக்கும் உண்டாயிருப்பது உமக்குத் தெரிந்நதுதானே என்று- இலகுவாகச் சொல்லி எடுத்தெறிந்நு விட்டார்கள் -

அதன்பின் னயகமவர்கள் ஒன்றும் பதில் சொல்லத் தெரியாதவர்களாய்த் தயங்கித் - தாங்கள் முன் படித்திருந்ந பாராயணப் பாடங்களும் அதற்குத் தாங்கள் கொண்டிருந்ந வாய் விச்சு வேதாந்நங்களும் பிறர் னவெழ வொட்டாது சபாஷ் பட்டம் வரும் வரைக் கும் சரமாரியாகப் பேசுகின்ற னவும் எல்லோருக்கும்

புத்தி கூறிக்கொண்டிருக்கும் நூலறிவும் இதில் ஒன்றே னும் அங்ஙனம் மங்கின தங்கள் கவனத்திற்கு வந்து உதவிபுரியாமல் போய்விட்ட படியால் - தட்டுண்டு தடுமாறி விழித்துக்கொண் டிருந்நார்கள் -

இவ்வாருக அங்ஙனம் விழித்துக்கொண் டிருந்ந தானது இப்போது சன்னத பருவம் கடந்து யோக தனப் போதக ஏக மேய்ப்புப் பருவ காலந்நுவங்கி இங்கே ஞயக மவர்களின் ஆயிரக் கணக்காக விளங் ஙானிற்கும் சிஷ்ய குழாங்ங ளென்னும் அனந்நாதி தேவர்களாகிய - தேவத் திருநாட்டுக் குருகுல மக்களின் திருச்சபை முன்னிலேயின்-உலக முய்விக்கும் பேச்சாளி கள் ஞங்கள்தான் என்று வருபவர்களும் - மகாவாக் கிய னீதிப் பிரசங்ஙிக ளென்று வருபவர்களும் - இலக் கணத் தேர்ச்சி கலேக்ஞானர்களென்று வருபவர்களும்- கண்ட சுத்தி பாடும் திறத்தினரென்று வருபவர்களும்- எவ்விடத்தும் அறிவாளி என்று பரிசுபெற்றுவரும் தடை படா னீண்ட ஞ வல்லாரென்று வருபவர்களும் - இன்னும் மெஸ்மரிஸர்கள் மாந்நிரீகர்களென்று வருப வர்களும் - சோதிடம் வைத்தியரென்று வருபவர்களும்- வாத வித்தை யோகர்களென்று வருபவர்களும் இன்னும் எத்திறப் பண்டிதத்தும் தெரிந்நவரென்று கர்வத்தைக் கைக்கொண்டு இங்கே வந்துகொண் டிருக்கின்ற அன்னவர்களின் செவியினிடத்தே - சத்தி யச் சுத்த மெய்ன்னிலேத் திருவசனம் புகுந்ந மாத்திரத் தில் அவர்களின் தங்கள் தங்களின் உளக்கையி லிருந்ந - பொய்க் கல்வித் திறன் - பொய்ச் செயல்

அனைத்தும் புகையாகப் பறந்து விடுகின்றமையால் தங்கள் கையில் னிஜமாக ஒன்றுமே இல்லை யென்று அறிந்துகொண்டுவிடும் அறிஞர்களாகி அன்றியும் அவர்கள்தாம் இன்னாள்வரை அறிந்து அனுஷ்டித்த தனைத்தும் - பொய்யைப் பொய்யென ஒரும் மாட்சிமை யினராகித் தாங்கள் முன்னர்க் கைம் முதலாக வைத் திருந்த பொய்யைப் பறிகொடுத்து விட்டமையினாலே ஒன்றும் பேசமுடியாமல் தட்டுண்டு தடுமாறி இப்போது இங்ஙனம் விழித்துக்கொண் டிருப்பவர்களைப் போலவே அப்போது அங்கே பிரானவர்கள் முன்னிலையில் ஞயக மவர்கள் விழித்துக்கொண் டிருந்நார்கள் போலும் -

அங்ஙனம் ஒன்றுந் தோன்றாது விழித்துக்கொண் டிருந்த எங்கள் ஞயகமவர்களைப் பார்த்துப் பின்னும் கூறியதாவது -

உலகில் மெய்ஞ்ஞான மகத்துக்க ளென்னும் பார வான்க ளெல்லாம் - கைலாயம் வைகுந்நம் தெய்வலோகம் மிகராஜ் என்றும் கூறப்பெற்ற சைதன்ய அந்த அதி மகோன்னத னிலைக்கு - கவனக் குளிகை - அன்னம் - மயில் - வாசி யென்னும் சவாரி கொண்டு போயிவருவதாக உலகத்தில் சுருதிகளும் மக்களும் கூறிக்கொண் டிருப்ப தானது - அது - உண்மையாக னிஜமேதான் என்று மொழிந்நார்கள் -

இவ்வாறு புத்தெழில் பிறங்கும் பூந்நுறை னட்டின் - அந்நப் - புதுப் பழமொழி புகுந்நதும் செவி யில் - ஞயகமவர்களின் உள்ளத்தில் - மகா ஆச்சரியங் கொண்டு ஆனந்நப் பரவசராய்-உயிர்னீத்த உடலில்-

மீண்டும் உயிர்வந்து அடைந்தன போன்றும் - திசை தப்பி அலைவுற்றுத் தவித்த கப்பலானது கரையைக் கண்ணுற்றன போன்றும் - இருள் நிறைந்து தட்டுண்டு தடுமாறுகின்ற உலகத்திற்கு - ஓர் அருஞ்ஞாயிறன் உதயஞ்செய்தன போன்றும் பழங்கிழவடிவம் தாங்கி வந்து அங்கு எதிரில் உதயம் செய்திரா நின்ற அந்தப் பழம்பெரும் செம்மலை நோக்கி - இவர்கள் நமக்கென்று விதித்திருந்து வந்த குருபரனாகவே தான் இருக்கலாமா என்று பொட்டென ஓர்ந்ததும் - திடீரென அச்சமுற்றவர் களாய்த் தாங்கள் மேலே போட்டிருந்த உத்திரிக வல்ல வட்டத்தை எடுத்து அகற்றிவிட்டு - ஒயிலாகச் சாய்ந்து கொண்டிருந்த பொட்டியடிக் கல்லாப் பலகையை விட்டுக் கீழே இறங்கி நின்றுகொண்டு - சர்வ அண்ட ரண்ட சராசரங்களையும் விழுங்கித் தன்னுள் அடக்கிக் கொண்டு எதிரே சிந்தனையற்று உட்கார்ந்திருக்கும் பெரியாரென்னும் பிரம்ம பீடத்தை நோக்கி உவகை பொங்க ஆத்திரம் மட்டற ஓடிநிற்கத் ததும்பிப் பாடிய தாவது -

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தஆ ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்கு
செம்மையே ஆய சிவபத மளித்த
செல்வமே சிவபெரு மானே

என்றிருப்பதை -

செம்மையே ஆய சிவபத மளிப்பாய்
செல்வமே சிவபெரு மானே

இந்நப் பிரகாரமாகச் சுன்னத்துக் கல்யாண சடங்கு முடிந்து பள்ளிக்கூடம் போயிப் படித்து வந்துகொண் டிருக்கும் ஞானயிலே வயதும் ஒன்பதா யிற்று – அப்போது தங்கள் குடும்பத்தின்கண்ணே ஆவினங்களும் மறிகளும் பட்டி பெருகி விட்டதினலே அதனை மேய்ப்பதற்கு ஆள் கிட்டாத காலமா யிருந்நதினலேயும் – தங்கள் குமாரராகிய எங்களுக்கு இன்று விளங்கும் வரத பிராணையாவது – மேய்த்து வரும்படிச் செய்யலாமா என்று தாய் தந்நை இரு வருமாக ஆலோசித்துக்கொண் டிருக்கையில் குமார ரவர்கள் தங்களுக்குகந்ந னல்ல விளையாட்டுக் கிடைத்ததாக எண்ணியவர்களாய் 'ஞன் மேய்த்து வருகிறேன்' என்று கூறி விடைபெற்றுக் கோலெடுத் தெழுந்நார்கள் - அங்கே மேய்ப்பன் ஞனெனக் கோல்பிடித் தெழுந்நதானது - குமார ரவர்களினுடைய தங்கள் திரண்ட பருவமாகிய வரும் வளர் காலத்தில் – அவர்களே தலையுகமெனும் மெய்வழி ஆண்டினை யுண்டாக்கி அதில் இருபதாவது வருடங்களுக்கு மேலே யேறி வருவதற்கு இருக்கும் னிகரற்ற தெய்வீக ஏற்ற அச் சென்னுளிலே - அப்போது தங்களிடம் திரண்டிரா னிற்கும் –

ஆறறிவு உடலெடுத்து ஐயறிவு னுகர்ச்சியிலேயே கிடந்து உழண்டு ஆறுர்ச் செல்லுவதற்கு வழிதெரியாது அதற்கென்றே தூலமும் அதன் அகப்புறக் கருவிகளும் வைத்துப் படைத்திருக்கும் காரணத்தினலே வாயில் பினுத்திக் கொண்டும் அதிலும் ஞன் பெரிது னீ சிறிது

எனப் பாடிப் பாடிப் புகழ்ந்து பாத தாமரைகளில் வணங்கி வணங்கி இறைஞ்சி ஏங்கி வருந்தி வருந்திக் கண்களில் ஊற்றெழுந்து மாரெலாம் னனைய னின்று – எனக்குச் சன்மார்க்க வழியைக் கூட்டி னடப்பிக்க வேண்டுவது தாங்களே –

வேத்கலைக் கதிபதி மாதுல ராகிய மன்னு
மன்னே வென்றும்
தருமது ரைத்திரு வரதப ராபரன் னீயே
னீயென
செஞ்ஞொன் மறைமலைச் சஞ்ஜீவி னீயெனக் காகும்
ஆகென
இடரிடுங் நடைனுள் எனக்கருந் நுணை இறை இறைவா
அருளெனப்
புலபல விதமாகப் பரிதாபக் குரலிரைத்து – இறைவா எனை ஆட்கொள்ள வேண்டுமென்று ஸ்தோத்திரம் புரிந்து மன்ருடி னின்ருர்கள் –

இவ்வாருக மண்டாடி னின்ற அதனை உள்ளுற வறிந் நுணர்ந்த – மெய்ஞ்ஞானக் கனி பழுத்தொழுகு தேவதருவாகிய பிரானவர்கள் தம்மைச் சரணடைந்த பக்தரின் திரிகரணங்களும் அதி விரைவு தீவிர பக்கு வத்தின் ஆழ்ப்பின் னிலைப்பினைக் கண்ணுற்ற கன தவத்துக் கமலபதக் கதியுதவும் காருண்யப் பிரானவர்கள் எங்கள் ஞயகமவர்களைத் தங்களின் ஒப்பற்ற பெருங் குணந் தாங்கிய உள்ளம் பூரிக்க ஞானச் சீடராக ஏற்றுக்கொண்டுவிட்டார்கள் –

அங்ஙனம் ஏற்றுக் கொண்டுவிட்ட சீடரின் னேக்கத்தைப் பூரண மாக்குதல் பொருட்டாய் ஒரு னாள் சாயந்திர னேரத்தில் இருவருமாக வழி னடந்து திங்களூருக்கும் கிழக்கே – முன்பழங் காலத்தில் ஊராக இருந்து மாறி இப்போது னத்தத் திருமேடாக இருக்கும் அதின் மீதுள்ள பழந் நேரோரத்தின் அடியில் தெற்குப் பாகம் தென்முகமாக விரியாசனமிட் டிருந்துகொண்டு அதிதீவிர ஏக்கத்துடனே எதிரில் பேரின்ப ஆவல் பொங்க எதிர் னோக்கிக்கொண் டிருக்கும் தங்களின் சீடராகிய எங்கள் ஐயகமவர்களுக்கு அங்ஙனம் முன்னிலைக் குருபிரானாக விளங்கிக்கொண் டிருக்குகின்ற முகம்மது சாலீகென்னும் தவப் பெயர் தனிகை வள்ளலாகிய அந்நத் தயாள ரஞ்ஜித குண குஞ்ஜித பதாம் புயச் சிவபுரத் திருவுள னாட்டுச் செழும்புனலாசனக் குபேர னிறையறிவுக் குடி வரத திலக பிரானவர்கள் முதல் முதலாகப் பிரம்ம ரகசியம் என்னும் அறிதற்கரிதாகிய தங்களின் ஆதீன ஆதி பரம்பரைப் பூர்வீக புராதன காலந் நுவங்கி தலைமுறை தலைமுறைகளாக உள்ளஞ் ஞமந்து கடந்து கடந்து ஊற்றோடி வந்து இன்ன காலத்திலே தென்பாண்டி னாட்டினிடத்தே உதயம் செய்து முடிவுகால மாகிய இறுதியின் தீர்ப்பு னடாத்தி – தலையுகம் பிறப்பிக்க வர எழும்பினிற்கும் இன்ன திருமேனியருக்கேயென விதி வழி யெலாம் சங்ஙாரம் செய்து மதிவழியே கன கவனங் கொண்டு வீசிக் குறிவைத்து விடப்பெற்றபடிக்கே அந்த ஆதி

மூலப் பழம் பண்ணாரமணி உண்டைப் பெட்டகத்தைத் தாங்கிச் சுமந்து வழி வழியாக வந்த அன்னுளெழுத்தின் மன்னுவும் – அந்த அரிய பெரிய திரு உள்ளத்தே ஆய்ந் நாய்ந்து வந்து முன் கூரு கண்ட பண் கூரு ஏற்ற உட லெடுத்து வந்து னிற்கும் தலை – கரம் இதுவே தான் எனத் திட்டம் சமைந்து வேதங்களின் விதி வழி வழி வரும் தன்னகம் தேடி வரும் பாடேற்ற னன்னயன மன்னுவும் – அந்த அரிய பெரிய திருவுள்ளத்தே முனைக் கூரின் கனிவேறி னின்று - அங்கே பிரம்மோதய ரகசிய மூலப் பழம்பண் ஆரமணி உண்டைப் பெட்டகத்தைத் தங்களின் பெரிய தலை தாங்கி வழி வழி வந்ததை அங்கே வீரம் கூரேறி முனைவு வினைவு இளம் முழு வலு வேற்றத் தலைக்கேற்றுவான் வேண்டித் துணிந்து விட்டதின் பொருட்டாய் – அதற்காக வேண்டிச் சீடரிடத் தில் – மகா மந்திரப் பிரேரணை என்னும் தேவரகசியம் பேச வேண்டியது அவசியம் ஆதலினுலே – அத் – தேவ ரகசியமோ - இத் தூலங் நடந்து ஜீவ தேகத்திற்குன் பேசவேண்டியதிருக்கின்ற படியினுலே – தங்களின் சீட ராகிய எங்கள் னுயகமவர்களுக்கோ – ஜீவதேகம் தெரி யாது - தூலதேகத்தி லிருக்கின்றவர்க ளாதலினுலே-

தூல தேகத்திலிருந்து ஜீவ தேக மென்னும் ரூகா னியினுடைய பூமியாகிய வைனடு செல்லுவதற்குச்- செல்ல வொட்டாது குறுக்கிட்டுத் தடை செய்துகொண் டிருக்கும் வேடரை வெரட்டிக் காட்டைக் கலைத்துக்கடு வாயைவென்று தடங்நூடி னடக்கையில் அங்கு வந்து வந்து வழி மறித்துக்கொண் டிருக்குகின்ற முன்தொடர்

புப் பழக்க னேசத்தால் விளைவுற் றேறியிரானின்ற -
பாதக - போத பெரும் பூத வைம்பூத கணங்களை
எல்லாம் அந்நப் பெருங்குணப் பணைப்பேறி னிற்கும்
பிரானவர்கள் தங்கள் அஞ்ஞாக் கரத்தில்த் தரித்திரா
னின்ற கோடாயுதம்கொண்டு துணித்து எடுத் தப்
புறப்படுத்திவிட்டு அப்பூத கணங்கள் எழிலாகத்
தொன்றுதொட்டு வாசம் செய்து வாழ்ந்நுகொண்
டிருந்ந குகை வளம் மாளிகை யனைத்தும் தகர்த்
தெறிந்து விட்டு - மகனே னீ - இங்கு தேங்குவதற்கு
ஒன்றுமே இல்லையெனக் காட்டி னிரூபித்து விட்டு
அப்பால் வழிகூடி னடக்கையில் - எதிரே னெருங்கிய
தருக்கினம் வாதிலைக் கரங்களினலே - சூரியனுடைய
கிரணம் இங்கே தேவை இல்லையென னீ அப்பாலே
போவென்று ஒதுக்கியன போன்ற பேரிருள் சூழ்ந்ந
ஓர் - பெருமர வனக்காடு வந்நு தோன்றின - அங்கு
அவ் வனக் காட்டினுள் னீந்நிப் பிளந்நுகொண்டு
செல்லுகையில் இடையில் எதிராக அர்த்தமா சத்தி
யென்னும் அகோர கோர ரூப ஓர் எலும்பாபரணி
வந்நு வழிமறிக்க அந்நச் சதிமாயா சத்தியைக் கண்
ணுற்ற ஞயகமவர்கள் பயந்நு னடுங்கி ஒன்றுந்
தோன்ருது னின்ருர்கள் - அப்போது அங்கு தொடர்ந்
திரா னிற்கும் கடும் வழித்துணை னெடும் பிரானவர்கள்
தங்களின் அஞ்நு - அக்கரமென்னும் பேழையுள் த்ங்கி
ரயம் செய்து வைத்திருந்நதான கீற்றிளம்பிறை
போன்ற மாருத பதம்சிறி னிற்கும் கூர்மையினலே

மாயா சத்திகளின் உயிரினை மேய்ந்து பழகிப் பக்க வாட்டு ஓரங்களிலெல்லாம் சிவந்த இரத்தக் கரை படிந்திருக்கும் முன்வளைவு அரிவாளினாலே விசை கொண்டு வெட்டிச் சேதித்துப் படுகுழிக் கிடங்கு வெட்டி அதனை ஆழப் புதைத்துவிட்டு - அப் பெருங்காடு கடந்து அப்பால் நடந்து சென்றார்கள் -

இவ்வாறாக இருவரும் வழி நடந்து செல்லும் போது அங்குச் சிறிது சிறிது குன்றுகளும் கரடு மொரடாகிய பரட்டு முட்காடுகளும் தாண்டிச் செல்லுகையில் முன்னாலே அங்கோர் நெடும் பார தூரமாகிய ஓர் மலைப் பாம்பானது வந்து வழிமறித்துக் குறுக்கிட்டன - அங்ஙனம் குறுக்கிட்ட மலைப் பாம்பினை அடுத்து நெருங்கி - அந்தப் பாம்பணி யாபரணனை தடாம் புயத் தேன் பொழிற் றென்றிசை இன் கயிலாசமாம் - பூம்பதி யின்னரசான மடாலையர் தங்கள் - சிவந்நகரத் திற் றரித்திருந்த சிவசெங்கோ லென்னும் ஓரெழுத்து மாத்திரைக் கோலால்த் துணித்தெடுத் தெறிந்துவிட்டு அப்பால் வழிகூடி நெடுந்தூரம் நடக்கையில் குறுக்கே வந்து வந்து விழுகின்ற அனந்தானந்தம் கறுப்புத் திரைகளை எல்லாம் அறுத்துக்கொண்டு ஏறும்போது - ஆகாயத்தை யளாவிய புரையில்லாத கருங்கற் பாறை யான மூன்று நெடிய பருவதங்கள் - வந்து எதிரே எழும்பித் தோன்றின - அதனை வேதாந்தச் சஞ்சீவிச் செஞ்சடாமுடி மகுடராகிய பிரானவர்கள் தங்களின் பிரம்மோதய வயிரவனைக்கண் பிரங்கி கொண்டு முழக்கி உடைத்துப் பொடிபடத் துகள்படுத்திக்

கொண்டு அப்பால் செங்க னதி மயிர்ப்பாலம் இரு கரைச் சாரலும் முன்னேறித் தாண்டி ஊறில் எதிரிலா ஒரு தனிச் செங்கோல்கொடு ஓச்சும் இறுதித் திர்ப்பு ஸீதிமன்ற மென்னும் கரைகாணு மைதானமாகிய திறந்த வெளியுங் நடந்து செல்லுகின்ற - இவ்விதம் கடு னெடுந்தூர வழியை - முண்டாதாரமாகப் பேசும் ஞானி யர்களும் உண்டு -

ஏனெனில் அவர்கள் ஆசானின் பேருதவியைக் கொண்டு மேனிலைக்குத் தூக்கி ஏற்றிவிடப்பெற்றதைத் தவிர அவர்கள் இன்னெருவரை யேற்றி விடுவதற்கான பொறுப்பைப் பெருதவர்களாதலினுலே அன் - னுனுகிய வழியைக் கவனிக்கத் தேவையில்லாதவர்களா யிருந்து கொண்டு அன்னெடுந் தூரத்தை ஒரே வார்த்தையாகப் பேசுவார்கள் - இதனல் அவர்களுக்குக் குறை குறி ஒன்றுமில்லை என இங்ஙனம் அறியக் கிடக்கின்றது - இவ் விதமாகக் கடந்து சென்று வானலோகம் வைகுந்த லோகம் கைலாய லோகம் தெய்வ லோகம் பிரம்ம லோகம் என்று மக்களும் சுருதிகளும் கூறிக்கொண் டிருக்கும் அந்த மகா மகத்துவ வளஞ்சூரந் திலகுகின்ற தங்களுடைய பொன்னிலமென்னும் ருகானியினுடைய பூமியாகிய ஜிவமூல வளனுட்டின் மந்திராலய செம் மணி முன் முகப்புக் கபாடத் திருத் தடங்கதவுச் சேர்த்திருக்கும் கெட்டித்தாள் வட்டப் பூட்டைத் தங் களின் மாத்திரைக்கோ லென்னும் மூலமந்திரச் சாவி கொண்டு திறந்து உள்ளே சென்று வாஜிபுல் உஜூது என்னும் தலத்தை விளங்க விளக்கித் துலக்கி - எழு

- தேசியென்ற
அண்டர்ப தியேறி விண்டன்னாளே
இளம்தளிர் மேனியர் ஏசுபிரான்
- ஏசுபிரான்
எட்டானாள் ராஞானஸ் னனமென்றும்
கார்த்திமுல் அம்பியா னயகங்ஙள்
- னயகங்ஙள்
பார்த்தார்க ளேலைலத் துல்கதிர்ரா

இவ்வணம் மூலப்ப ழம்பருவம்
- ப ழம்பருவம்
ஏகவல் லபங்கை கொண்டெழுந்து
இதன்மேல்அ கிலம்வ ரும்பருவம்
- வ ரும்பருவம்
ஏறிக்கூ றிவரு மேவசனம்

மூலபண்டாரப் பருவம் நிறைவேறிற்று

அகிலவலம் வரும் பருவம்

அருள்த்தலே யுகத்து மறைவிதி யரசு சிரகிரி னாட்டின் பெருவளஞ் ஞூரந்நு துறவிய ருறையும் அறனெறியின்கண்ணே முன்பின்னற்ற முழு முதலாகிய மெய்யை மெய்யாகவே விழுங்கிவிட்ட னுயகமவர்களின் இருதயக் குன்ருனது அகிலாண்ட கோடி பிரம்மாண்ட அண்டரண்டங்ஙளும் னிகரில்லாத விசாலமாக விரியப் பெற்றவர்களாய் – அங்ஙனம் விரியப்பெற்ற அகண்டாகார வெளியிலே – அவ் விதியிலே மேல முச்சந்நியிலே அம் முச்சந்நி னடுக்கம்பத்தின் மேல் முனேயிலே விளேயா னின்ற அழியாத தத்சத் தென்னும் தாத்தாகிய வரம் பிலா. வலிமை தங்ஙிய னிலேயை – மெய்கண்ட சிவக் ஞான – சிரஞ்ஜீவிச் செங்ஙதிர்ப் பரப்பை - ஜலால் ஜமாலென்னும் இரு கடலும் மோதுதலினுலே ஓசையுடன் ஓங்ஙி எழானின்ற தெய்வீக உதயத்தை – அக முகத் தவர் வெற்றி ஏறுகின்ற ஆனந்நக் கூத்தை – அருட் ஜோதிப் பெருங் ஙிரணக் கதிரை – முப்புரி னூலும் முக வரை கீருத முதலாய முதலே – இப் பிறப்பிலுறும் இருஞ் ஞெல்வ இலஞ்ஞிய லக்ஷியத்தை– வணக்கத்திற்கு உறைவிடமாகிய மகோன்னதத்தை - கணிக்குதற் கரிய தனிகை யென்மணியை – பரம ரகசியப் பலன் னல விளேவை – வரம்பிலா தகண்ட வாருதியான தேவரகசிய மென்னும் தெளித்த தெள்ளமுதை - பொற்கிண்ண மது பானத்தை - போதையெலாம் திரண்ட காமதேனென்னும் கள்ளே - அக் கள்ளில் சஞ்ஜீவி யென்னும் கஞ்ஞாவுங் ஙலந்நு குடித்துவிட்ட னுயகமவர்கள் -

அப்போதையின் மகிழ்ச்சியினலே தாங்கள் அங் ஙனம் புகுந்துகொண்டிருக்கும் தெய்விக மறுபிறப்பின் விடடைந் நிருத்த லென்னும் குடியேற்றமான ஒன்றே கருமமெனப் பூண்டுவிட்ட ஞயகமவர்கள் – ஆதலினலே வேறே ஒண்ணும் எண்ணுகிலாதவர்களாய்த் தங்கள் தாய்தந்தையர் மனைவிமக்கள் சகோதரர் பந்துசுற் றம் பொன் மண் மனையும் விடுத்துத் தாங்கள் பாரம்ப ரையாய்க் குடியிருந்துவந்த பழைய காலத்து ஊரையும் விட்டுப் பிரிந்திட னினைந்நார்கள் – அங்ஙனம் பிரிய னினைந்துவிட்ட ஞயகமவர்களின் னினைவில் – விட்டுவிட் டோம் என்று வெகு தூரம்வரை தொடர்ந்து வந்து கொண்டிருந்த மகாப் பெலவந்தமான அத் தொடர்ச்சி எண்ணத்தை அகதியத் தென்னும் ஆணிப் பொன்னம் பல கூடஸ்த பிரம்மத்துள் லகித்துப் பதிப்பிக்கப்பெற்ற ஆசைப் பெருக்கினது வேகத்தினலே விளைந்த வெள்ளி யங் ஙிரணம் பாய்ந்து பிரகாசக் கதிரிலங்கும் கூர்மை தங்கிய மகாமந்ர சக்ராயுதத்தினலே அத்தொடர்ச்சி எண்ணத்தை விசைகொண்டுவீசித் துணித்துப் பிரித் தெடுத் தெறிந்துவிட்டு ஒருமுகத் துணிவாய் மனந் திரும்பிய ஞயகமவர்கள் குரு பிரானவர்களே கதியென மாயாத கடும்பிடிப் பற்ருகப் பற்றிக்கொண்டதாவது –

ஏற்கனவே வெளித் துணைத் தவுலத்தானது மெதப் புற்றிருந்தும் அது னீடு னில்லாத உயிர்த் துணையின் றிய வெளிமினுக்குப் பயில் அழிசெல்வமென்று திடமாக ஓர்ந்தும் னெடுங்காலமாக ஊரோடும்போது ஒக்க ஓடென் றுரைப்பனபோலே உண்போரைப் பார்த்திருந்

நாலும் உழைப்போரைப் பார்த்திருக்க ஒண்ணாதவர்களாய் இருந்தார்களெனினும் - சிரஞ்ஜீவி உயிர்த்துணை மெய்ப்பொருள் வேண்டி அலைந்தலைந்து தேடியும் கிட்டாதவர்களாய் ஞளும் முடிவில்லாத ஏக்கத்தினராய் கவலையின் மேடேறியவர்களாய்த் திரிகரணங்களும் அநியாய மரணத் திகில் பிடிப்பின் சிக்குண்டு மீளப் புகலிட மின்றித் திக்கற்றிருந்தவர்க ளானதிறைலே - அங்ஙனம் முடிவில்லாத மெய்ப்பொருளாகிய சிரஞ்ஜீவி உயிர்த்துணை மெய்ப்பொருள் கிட்டப்பெற்று அதன் சுவைக் கூரேற்ற ரகிதராகிவிட்ட ஞயகமவர்கள் - முன்பின் தோன்ருத அம்மகிழ்ச்சிப் பேரானந்த பிரவாகத்தினது உளப் பற்றுதலின் விடாப் பிடிப்பினுலே - தங்களின் வியாபாரத் தலமாகிய காசுக்காரம் பாளையத்தி லிருந்தபடியே கிளம்பி வெளியேறிய தாவது ... ...

...முன் னடப்பு எல்லாக் காலங்களிலும் யாதொரு ஜோலியாக வீட்டைவிட்டு வெளியே கிளம்பும்போது பத்தினியவர்களுக்குக் கற்பிக்க வேண்டியவைகளை யெல்லாம் கவனித்துக் கவனித்து அழுத்தமாகக் கற்பித்து - வண்டி மாடுகள் போஷிப்பு முதலியவைகளையும் கூறிவிட்டுப் பத்தினியரிடத்தில் பெட்டி பூட்டித் திறவுகோ லீந்து புத்தி சூதானங் கூறி - அடுத்த மனை வீட்டு அத்தக் காளென்பாளையும் கூப்பிட்டு - இங்கே வந்து அம்மாளுடன் இருங்களென்று துணைகூட்டிப் பின் செல்லும் போது - சிறிது தூரம்வரை செல்லுகையில் - சொல்ல வேண்டியவைகளில் ஏதாவது சொல்லாமல் மறந்துவிட்டு வந்திருக்கிருேமா என்று எண்ணியவர்களாகவே சென்று

சோலியை அதிவிரைவில் முடித்துக்கொண்டு எப்படியும் அன்று சாயங்காலமே வெளியில் தங்காமல் வீடு திரும்பி விடுவார்கள் ... ...

துறவு பூண்டு வெளிக்கிளம்ப ஒத்தை மனம் படைத்தவர்களாகி ஒருவன் வாய் கொப்பளிக்க எழுந்துவருவன போன்றும் – தெருவு விளையாடு குழந்தை தவறி விழுந்நதைக் கண்ட ஒருவன் அதை எடுப்பதற்கு எழுந்து ஓடி வருவனபோன்றும் – ஒருவரிடமும் கூறமுடியாதவர்களாய்ப் பெரிய பேரின்பம் பொங்கி வழிந்திரானின்ற வெள்ளப் பெருக்கின் இழுப்பினலே – அங்கே தம்மைச் சூழ்ந்து கலந்திருந்த ஆசா பாச னேச வாசனைக் கூட்டு உடற்றுணைச் சுவையாகிய இச்சைகளனைத்தும் பொருளாகிய சம்பாதனை அமலாண்மைக் கலப்புகள் யாவும் னலம்தரும் வழிக்குப் பெரும் எதிரிகளென னினைத்துக் கைவிட்டுப் புறப்பட னினைந்த னயகமவர்கள் – இனியும் இங்கே தாமதம் செய்குவோமேயானல் னமது பழைய காலத்து ஊராகிய மார்க்கம்பட்டிக்கும் தேவியர் ஊராகிய பள்ளப்பட்டிக்கும் தகவல் தெரிந்து எல்லாத் தாயி பிள்ளைகள் பந்துசுற்றம் உறவினர் யாவரும் வந்து னம்மை வளைத்துக் கொள்வதோடு பெருங் கூபரியாக இங்கே உள்ள னமக்கு அறிமுக உறவினருக்கும் கூறி அவர்களும் சேர்ந்து னம்மைத் தடுக்கும் உதவி பலம் அதிகம் விரிந்துவிடும் என்று கூரோங்கிய உள்ளத்தில் யோசனை னிச்சயித்தவர்களாய் ... ...

அன்று அதிகாலை னேரமே பழையது ஒன்றும் அருந்தாமலும் வீட்டைவிட்டு வெளியே கிளம்பினர்கள் –

அது சமயம் அங்கே வெளித் திண்ணையில் தாங்கள் பெற்ற ஒரு மகவாகிய பெண் திலகக் குழவி ஆயிசு அம்மாளை இளஞ் சூரிய வெயில் முகத்தில் அடித்துக் கண் கூச்சம் மாறுவதற்காக எண்ணெய் தடவிப் போட்டிருந்தது — அதனை நோக்கியதும் அருகே சென்று நெருங்கித் திண்ணைக் கங்கோரமாக அணைந்து நின்றபடியே இடது கரத்தை மெதுவாக நெஞ்சின்மீது வைத்து குமிந்து கூர்ந்து இளம்பாலின் முகம் பார்த்து- உன்னை விட்டு விட்டுப் போகிறேன் — இனி உன் கெதி என்னவோ - நீ ஏன் என் வயிற்றில் வந்து பிறந்தனை— என்ற காரமான இரக்கம் வந்துலாவப் பெருகிய கண்ணீரை மாற்றிக்கொண்டு — தேவியருக்குத் தோன்றாதபடி — காலமே வரச்சொன்னவனை இன்னும் வரக்காணோமே என்று கூறிக் கொண்டு- ஏதோ ஒரு ஜோலியாக ஒருவனைத் தேடிச் செல்லுபவர்களைப் போலவே தலை நிமிர்ந்து நின்றுகொண்டு— தங்கள் பத்தினியரவர்கள் சோர்ந்த முகமாகப் பார்த்துக்கொண்டிருக்கத் தங்கள் பிரானவர்களைச் சிந்தையில் நினைந்து அடியெடுத்து உருவிக்கொண்டு பரிசுத்த ஆவியின் ஜீவாதின அந்தரங்க மறைவு முகத்திலிருந்து பாதுகாப்பு ஆக்ஞையின்படி ஆட்சியுடனிருந்து வந்த ஆதியாகமங்களிலே கூறியிருக்கின்றதின் பிரகாரமே துறவுபூண்டு வெளிக் கிளம்பி விட்டார்கள் —

துறவு பூண்டுள மூந்துது டர்ந்தனுள்
குருநெ றித்தனி கைமணி கூடவே
உரைசீர் ஆகம வூழிவி திப்படி
நிறைசீர் னேரம்நி லத்தில்எ ழுந்ததே ... ...

புகர்சமய ஜகத சத்துவ சத்து கணுமிய காப்பேடு கடாவு வைப்பாக னூற்றீரேழு னீள பதிப்பும் சர்வ புவன லக்கண பூதாதி லக்கிய வீடடங்கு ஜீவ ஜீவேச உசும்பு உசுவாசந் நொடங்குத லென்னும் தவாதிப் பிரவாக்காதி கணுப் பிரகிருதாதிகளும் - எண்ணருங் கோடி மந்திராதிக்கூர் சயனுதிகளும் இசையாதிய காலாம்பத விசய துருவாதிய அங்கங்களும் துருவுலாவு மூகார விந்த பேத விந்து ஞதாதி இன்பனுச் சூடாகர சப்த சப்தாதிய சாயல்களும் ஒலியுலாவு கண கனித னித னிலவு அகர வித்துவச் சுழிதுமிகளும் அகம்புறத்து வாத சுவை சுகியாதி அமல திகாந்த புரத்துவாத சுவை சுகியாதி னிசத்துவ வித்துவாதிக னிரை னிலைப் புக ளனைத்தும் மதம் மதாதிகண் மறை விதி மதி வினைப்பண் - பயன் செயலாதிய விரிவு கிரந்நங்களும் வித்வேச சடம் சடாங்குகளும் குணையன்மிய செவி சேர்ப்புக் கொடுத்துதவு ஒளிருரை கான்றுடையாதி களும் - கலாமலி யேறு கவன லக்கணத் தொடர் கற் சுலாம் காயத்திரி ககன் வித்தை கமலைம்மணி கருவிராட் கதிசஞ்ஞீவி ஜீவ கற்பகத்தரு விருட்சவித்தானது எவ்வுல கங்களுக்கும் எட்டி ஏறி சுக வீதி னியமம் பிறங்கப் படரவென்று உள்ளடக்கிக்கொண்டு குழந்தை வடி வெடுத்து னின்ற அங்கே பெரிய முழுத் தோற்றத்தி லிருக்கும் விருட்சங்களானது - வித்தினி லிருந்து வளர்ந்த வளர்ச்சியானது எவ்வாறு ஒருசிறிதும் கண்ணுக்குப் புலப்படாது வளர்ந்து பெருத்திருக்கின்றனவோ - அது

போலவே அவ் வருள்வித்தானது – ஓதாமலே ஓது வதெல்லாம் ஓதி – கல்லாமலே கற்கவேண்டிய வெலாம் கற்று – அறிவு பரிசுத்த ஆவியானது – வலுக்கொண்டு விசும்பி எழுந்நு – தளிர்த்து ஓங்கிப் பெருக்கமாகப் பணர் வீசிச் – செழித்து வளர்ந்நு விரிந்நு – செங்காம் பரும்பு முளைகாட்டி – பூவலங்கார அழகு குமுறி – பிஞ் ஞேறிக் காய் குலுங்கும் கனஞ் ஞமந்நுவரும் இளஞ் ஞெம்மலாகிய – இவர்கள் – இப்போது எங்ஙளின் – எல்லா மத வேத சாதிகளின் – உட்பொருள் ஆதார உற்பவ உற்பனத் தாயகமாகிய – மூலபுருஷ ராஜ னுயக மாகவும் – மகாத் துலக்க விளக்கமாக ஏறினின்று – எங் ஙளனைவரிடத்தும் னெடுங்காலங்ஙளாகத் தொடர்ந்நு உறைந்நு வந்நுள்ள – ஜாதி மத சமய அனியாய வேற் றுமை வெம்மைக்கோரங்ஙளை அகற்றி – அப்புறப்படுத்தி விட்டு மாற்றிப் பரிசுத்த ஆவியின் மெய்ஞ்ஞானச் சுவை கமழும் பெருனெறி னறுங்ஙனி இனிமை உணவு தந்நு மகாவல்லப எதார்த்த சுத்த சமரச சமத்துவ மேம்பாட்டு மெய்வாழ்விலே – மனங்ஙூடிச் சேர்ந்நு ஒன்று திரண்டு மகிழ்ந்நு வாழ்ந்திருக்கும்படியாக – இப்போது இங்ஙே ஆக்கி ஆகியும் – ஆக்கிக் கொண்டு மிருக்கின்றவர்களா கியும் – இதற்காக வென்றே – அப்போது அங்ஙே தங்ங ளின் பிரானுடன் கூடவே தொடர்ந்நு மெய்வழியின் பிரம்மோதயப் பாசுபதக் கங்ஙண வரம் வாங்ங வரு கின்றவர்களாகிய – எங்ஙள் சங்ஙாத ஆர்வ மங்ஙாத கூர்மை மெய்வழிக்குல னுயகமவர்களைக் குறித்து வரும் தீர்க்கத் தரிசனங்ஙளாவன – ... ...

பொய்வழியை விட்டு என்னை விலக்கி உம்முடைய வேதத்தை எனக்கு அருள்செய்யு மென்றும் - மெய் வழியை நான் தெரிந்துகொண்டு உம்முடைய ஞாயங் ஙளை எமக்கு முன்பாக என்றும் - நீர் என் இரு தயத்தை விசாலமாக்கும்போது நான் உமது கற்பனை களின் வழியாக ஓடுவேன் என்றும் - உம்முடைய வழி களிலே என்னை நடப்பியும் - உம்முடைய மெய்யிலே எனக்குப் போதித்தருளும் என்றும் தாவீது நயகமவர் கள் தங்ஙள் வேதமாமறையில் கூறி யிருப்பதோடு -

ஏழு யுகபரக் கணக்குகளும் முன்னு பின்னு காலங் ஙளும் பேசி வருகின்ற அகிலத் திரட்டென்னும் சர்வாக மக் கிரந்தத்திலே -

மெய்யா யுமது விந்துவழிக் குலத்தில்
படையு மய்யா என்றும் -
மெய்வழியி லங்ஙே மிகப் பிறக்கப் போ
னீ என்றும் - ஓதிவருவதன்றியும்

மேலே கூறி வந்துள்ள மூவாயிர வருடங்ஙளுக்கும் முன்னே இருந்த தாவீது நயகமவர்களின் சத்திய வேத தீர்க்க தரிசனத் திடத்தே -

சாதிகளின் ராஜாவே என்றும் -
சாதிகளின் மேல் அரசாள்வார் என்றும் -
அவ்வாறு ஆளப்பெற்றவர்கள் ஒரு சந்நதி ஆகி
அவரைச் சேவிக்கும் என்றும் -
தலைமுறை தலைமுறையாக அது ஆண்டவர்.
சந்நதி என்னப்பெறும் என்றும்

னில்லாத னீர் சடைமேல் னிற்பது என்று தமிழ் வேதம் ஓதி வந்து கொண்டிருக்கும் சுத்தச் சத்தாகிய சத்திய வாக்கின் பிரகாரமே –

விளைவு திரண்மினுகிய தண்ணீர்களின் மேலே தாங்கள் அதிஜெயஆதிய சலஆசனமிட் டிருந்து கொண்டு தமது குலச் சந்நதிகளின்மீது பேரருள்க் குணத்தினை னிரம்பப் பாய்ச்சி அனைவருக்கும் ஜீவஆவித் தண்ணீர் இறைமாக இன்று இங்கே தந்து கொண்டிருக் கின்ற இந்நக் காலத்தினுக்காகவே அங்கே அந்நக் காலத்திலே சர்வத்தையும் விட்டுத் துறந் நெழுந்து – வின்ன மில்லாத னன்னய தேவ சன்னத வரம் வாங்க வருவதற் கென்று கிளம்பி வரும் – கருவலப் பேரருள் ஞயகமவர்களைக் குறித்து – தாவீது தீர்க்கத் தரிசிய ரவர்கள் தங்கள் சங்கீதத்தில் கூறியுள்ள தீர்க்க தரிசன மாவது –

கர்த்தர் திரளான தண்ணீர்களின் மேல் னிற்கிறூர் என்றும் –

கர்த்தருடைய சத்தம் தண்ணீர்களின் மேல் தொனிக்கிறது என்றும் –

இன்னும் யூதோ ராச்சியம் னேபுகாத்னேச்சார் அரசாங்கத்திலே – ஓர் அருஞ் ஞூரியனைப் போன்று பிரகாசித்துக் கொண்டிருந்நவரும் தாவீது ராஜாவின் கோத்திரத்திலே உதித்து வந்நவருமாகிய தானியேல் தீர்க்கதரிசியவர்களின் தீர்க்கத் தரிசனத்தில் –

சணல் வஸ்திரம் தரித்தவரும் ஆற்றின் தண்ணீர்களின்மேல் னிற்கிறவருமாகிய புருஷனை ஒருவன் னேக்கி - இந்த ஆச்சரிய மானவைகளின் முடிவு வர - எவ்வளவு காலம் செல்லுமென்று கேட்டார் - அப்போது சணல் வஸ்திரம் தரித்தவரும் ஆற்றின் தண்ணீர்களின் மேல் னிற்கிறவருமாகிய புருஷன் தம்முடைய வலது கரத்தையும் தம்முடைய இடது கரத்தையும் வானத்துக்கு னேராக எடுத்து என்றும் -

இன்னும் இளங்காளையர் ஏசு பெருமான் அவர்கள் கூறிவரும் தீர்க்க தரிசனத்தில்-

தாகமா இருக்கிறவனுக்கு னான் ஜீவத்
தண்ணீர் ஊற்றில் இலவசமாய்க் கொடுப்
பேன் என்றும் - தாகமா இருக்கிறவன்
வரக் கடவன் - விருப்பமுள்ளவன் ஜீவத்
தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக்
கடவன் என்றும் - ... ...

மான்மிய சரிதம்

சகலமான ஜாதி வேறுபாஷைக் காரர்களையும் தேடி வலிந்து தடுத்தாட்கொண்டு பராபரத்தோடுறவு உபகாரம் செய்து அவர்கள் அனைவரையும் ஒன்று கூட்டிச் சேர்த்து - சமரச மெனும் சிங்காசனத்தி லேற்றி இதய கோளங்கள் செழிக்க வைத்து - இன்று சுதந்தரித்துக் கொண்டுள்ள - செயல் னடாத்தி வந்துகொண் டிருக்கின்றதாகிய இதற்காகவே - அங்கே அது னிலையிலே - மெய்மாதவ வரங்கள் பெற்று வருவதற் கென்று எழுந்து

வருகின்றவர்களாகிய - தனிகைமணிக் குமார குபேர அனந்நர் குலத் தெய்வ ஞயகத்தை - செயல் அடை யாளக் குறி எடுத்துக் காட்டிக்காட்டி விளங்கத் திரு வேத மறை ஒலி எழுத்து ஓசை யோடி வருகுவ தானது -

எருசலேம் ராச்சியத்திலே தாவீது ராஜாவின் கோத்திரத்தின் சந்நதியில் தோன்றிய ஆமோத்சின் புதல்வராகிய சம்பூர்ண னூற்று முப்பது வயதினை யுடைய வாடாத மணிவாய்மை மாசிலாச் சாரராகிய ஏசையா தீர்க்கத் தரிசியரவர்களும் - ஆகாய் தீர்க்க தரிசியரவர்களும் - சபூர் என்கிற முதல் வேத கர்த்தாவா கிய சீமான் அவர்களும் தங்கள் தங்கள் தவோ வலி மையால் மிஞ்ஞி ஏறி வெளியாக்கிவரும் செஞ்ஞொன் மாரியானது -

ஞன் சகல ஜாதியாரையும் பாஷைக் காரரையும் கூட்டிச் சேர்க்கும் காலம் வருகு மென்றும் அவர்கள் வந்து என் மகிமையைக் காண்பார்க ளென்றும் சகல சாதிகளையும் அசையப் பண்ணுவேன் - சகல சாதிகளாலும் விரும்பப்பட்டவர் வருவார் என்றும்

(ஆகாய் 2 அதி - 7 வாக்)

னீரே சகல சாதிகளையும் சுதந்நரமாகக் கொண் டிருப்பவர் என்றும் -

(சங்கீதம் 82 - 8 வாக்)

மான்மிய சரிதம்

வேத சிகரங்களாகிய மூல மந்திரங்க ளெல்லாம் பிழையுண்டு மங்கிப்போயி - அலக்ஷியம் செய்யப்

பெற்று - சாதி மதங்களின் னீதி னெறி வரன்முறைக் கோடிகளெல்லாம் அழுக்குற்று உருக் குலைந்து மாறி வேறுபட்டு உள்ளமை பிரம்மவித்தை என்னும் மேம் பாட்டின் ஜீவ வாழ்வானது - அது இப்ப உலகத்தில் ஏது என்கின்றவரை மறைந்து அப்புறப்பட்டு னித்திய னிமலஞானப் பிரகாசப் பொருளாகிய பொக்கிஷமானது இதய இருட்டினுள்ளே புதையுண்டு போய்க் கிடப்பதை- அதை உடைத்துத் திறந்து வெளியே கிளப்பி எடுத்துக் கொடுக்க ணுதியற்று - மாரண மரண இருட்பிடிப்பில் சிக்குண்டு அடைபட்டுக் கிடக்கும் - மனுக் கோடிகளா கிய யாவற்றிராளேனும் சம்மனசுகளாக விரும்பும் இருப் பினரை விருப்பம் தந்து இழுத்து - ஜீவ சிவேச பிரம்ம வித்தையின் பிறவா னெறிப் பிரகாச வீடேறுந் நேடா கிய-எதார்த்த சுக வாழ்வு பற்றிச் சுத்த சமரச சமத்துவ வைப்பின் - கதி மோக்ஷத்தி லாக்கி - ஏற்றி வைப்பதற் காகவே வேண்டி -தேவ சன்னத முத்திராங்கப் பரிசுபத வரங்கள் வாங்கி வருவதற்கென்று எழுந்து ஒரு மனத் துணிவு காரங்கொடு தங்கள் எவ்வன இளவட்ட பருவ காலத்திலே இகத்தினது செல்வக் குடும்ப வாழ்வினை அடியோடு தூக்கி எறிந்துவிட்டுக் கிளம்பி வருகின்ற வர்களாகிய யுகவான் கர்த்தாதி கர்த்தரென வேதங்கள் கூவும் னீத போத ணுதராம் எங்கள் வான்பதி ணுயக மவர்களைக் குறித்து வேத கிரந்தங்களிலே கூறி வரும் தேவ வசனங்களாவன:

வெண்கலக் கதவுகளை உடைத்து இருப்புத் தாழ்ப் பாள்களை முறித்து அந்தகாரத்தி லிருக்கிற பொக்கிஷங்

ஙளையும் ஒளிப்பிடத்திலிருக்கிற புதையல்களையும் உனக்குக் கொடுப்பேன் என்றும் –

(ஏசயா 45 அதி - 4 வாக்)

அந்நகாரத்திலும் மரண இருளிலும் இருந்நவர்களை வெளிப்படப் பண்ணி அவர்கள் கட்டுகளை அறுத்தார் – கர்த்தர் வெண்ஙலக் கதவுகளை உடைத்து இருப்புத்தாழ்ப்பாள்களை முறித்தார் என்றும் –

(சங்கிதம் 107 - 14.15 வாக்)

மான்மிய சரிதம்

னிஜ வேத மங்ஙாப் பிசகாது இங்ஙே மகாப் பெருக்கமாகிய செயலேறி வந்து வெளியாகிக் கொண்டிருக்கும் இதுனுளானது மெய்வழித் தலையுக ஆண்டு னுற்பத்து ஆறு ஏழு எட்டாக னிகழானின்று விளங்கிக் கொண்டிருக்கும் இதனை உண்டாக்குவதற்காக வேண்டியே துறவு பூண்டெழுந்ந மெய்ம் மாதவ ஷெய்காகிய உய்மேதகு சிர்காரிய ரவர்களின் கைதவத்தின் கைங்ஙரியர்க ளெனும் எங்ஙளைப் பலபலவாம் ரஞ்ஜிப்புக ளடங்ஙிய – மெய்ஞ்ஞானப் பிரகாசத்தேன் கடலினுள் னிழுத்து ஆழ்த்த ஆழ்ந்து பேரானந்நத்தில் னுளும் தினைத்திரானின்ற எங்ஙளினுடைய – எல்லோருக்கும் போலவே முன்னே – பொல்லாத விதி எழுத்து எழுதியிருந்ந தலையோட்டினை மாற்றி – னற்பாக்கியம் திரண்ட தலையோடாக ஆக்கி – அதில் னல்விதி எழுத்து ஒன்று அழுத்தி எழுதி விட்டதின் பயன் பேருக எல்லா வேதங்ஙளையும் எம் மதங்ஙளையும் சம் மதங்ஙளாகச் செயல் கைகொண்டேறிக் கண்டெடுத்துக்கொண்டு – சிவேசத் துரை சிரஞ்ஜீவியர்க ளெனும்

வான் குன்றேறி னின்று - திட்ட வட்டமாகத் தம்மைத் தாமே கண்டுகூடித் திரண்டிரானின்ற அனந்நாதி தேவர் களாகிய ஞங்கள் பலாப் பழத்தினைச் சூழ்ந்து ஈக்களா னது கூடிக் கொய்யென்று மொய்த்துக்கொண்டிருப்பது போலே - எங்களனைவருக்கும் எழுத்தறிவித்து ஆக்கி விட்ட இறைவராகிய குலதெய்வ சாலைஆண்டவர்கள் சம்மத எம்மான் ரம்மிய வாய்மை வாக்கின் உத்திரவின் படியே கான்முளையாகிய ஆதிக்கு முன்ஆதியாக இருந் நெடுத் தெழுதிவருகின்ற இந்நத் தவாஆதீன மான் மியத்தில் -

மேலே கூறி வந்துள்ள ஞனையிலே வெளியாகிக் கொண்டிருக்கும் தீர்க்க தரிசனங்கள் - முன்னெடுங் காலமாகிய ஆதி காலத்தி லிருந்நே தீர்க்க. தரிசியர்க ளால் எதிர் பார்த்து னின்று எழுதி வைத்துள்ள தீர்க்க தெரிசனங்க ளாதலினலே - துறவு பூண்டு எழுந்நு வருகின்ற காலத்திலேயே இது தீர்க்க தரிசனங்கள் அங்ஙனம் அறிந்நுகொண்டு வரவேண்டியது அவசிய மெனக் கருதி - இனியும் அம் முழு மறை யாதிய -பார வான்ங ளென்னும் தெய்வீகச்செம்மல்கள் எதிர் னேக்கி எழுதி வைத்துள்ள தீர்க்க தெரிசனங்க ளனந்நம் எழுந்நு எழுத்தேறி வருவதற்கென் றிருக்கின்றன -

அகத்துறைச் செழிப்பேறி ஆத்மார்த்திக முழுச் சமரச மேடேறுந் நேடாகிய தமது கைபாகமான செய் பாக ஏழு பிரகாசச் சபைகளை உண்டாக்கி அதற்குத் தமது தவனெறி னீதிச் செல்வம் ஓங்குவதற்காக இரு கரங்களினலும் னெஞ்ஞின் கசட்டினை வாரியகற்றி விட்டு

ஆகாயத்தின் பரிசுத்தத்திலே சேர்த்தி அதன் குறியாக ஓங்க ஓங்கவே என்னும் ஒலிகொண்டு இரைத்து வானுயரத்திலுயர்த்திய இருகரங்களையும் கீழே தன்னி லைக்குச் சேர்த்து முகமன் கூட்டிக்கொள்வதுடனே மேலும் பயிலை னம்பி வாழும் உலகப் பலபலவாம் ஜாதி மக்களைப் பலதிறப் பலவர்ண எல்லாவிதப் பயில்களின் மூலமாக அணைத்துச் சர்வ மதங்களினுடைய வேதாகமக் கலை காவியச் செயல் சீர் பேழைகளினுள்ளே இருந்து ஞடோறும் னேரங்களுக்கு னேரம் குபீர் குபீரென்று தனித்தனியேயும் கும்பல் கும்பலாயும் எழுந்து வீறிக் கிளம்பி ஒவ்வொருவரிடத்து மிருந்து ஓசையுடனே வந்து விழுகும் தர்க்கக் கலாமலிக் கேள்விப் பெருக்குகள் அனைத் தினுக்கும் – சோராதுனின்று தனிக்குத் தனியாகவும் குவியலுக்குக் குவியலாகவும் கேள்விகளெல்லாம் பிரம் மித்து அஞ்சிக் கலங்கி மெள்ள னழுகும்படி எல்லாச் சந்தேக வினக்களும் மாசறக் கோளரி வாள் விடையா னது வாக்குகளுக் கெல்லாம் வலு வாக்கருளி மகிழ்வு காட்டி அதிஜெயச் சம்மதத் தேற்றி அணைத்துக் கூட்டித் தகுவனப்படி னின்று ஒட்டி இழுத்துப் பேரின்ப சமத்துவ மாசற்ற மறுபிறப்பு வாழ்வில் னீந்தும்படி இன்று ஆக்கி வைத்திரானின்ற இப்பெரிய காரிய பிரம்மவித்தை யென்னும் அருங்காரணச் செயலாகிய இதற்காகவே – அன்று எழுந்தருளி வருகின்றவர்களாகிய எங்கள் – கதி பாத்திர னிதியரை – அதினுட்ப னுண்ணிய னுணுகிய மதியரை – ஜனக் கூட்டங்களின் ஆரவாரம் போன்றும்

பெருக்கமாக ஓடிப்பாய்ந்து விழும் ஜல வீழ்ச்சியின் இரைச்சலைப்போன் கூவுங்குரல் பேசும் மேவுந்தொனி ஓசையரை - தீயெரிபோன் ஜாடையலங்கார விழியரை - கற்பாறை மலையின்மீது பனி யுகுத்து உறைந்தன போன் மெல்லிய பஞ்சினைப்போன்ற னிறத்தினையுடைய தலையின் முடி விளங்கும் சிகையரை - மெல்லிய மினுகிய திருமேனியரை - உடுக்கை சங்கு முத்ராலங்கத் தடங்கை யலங்காரரை - இன்னும் இவை போலனந்நம் அங்க அடையாளமும் செயற் செய்கை அடையாளங்களும் - அதி னுட்ப னுட்பமாக வினைவேறிப் பெருகி வரானின்ற - எங்கள் தலையலங்கார குலமாதவ னலனுதன ஜலஆச னரைக் குறிவைத்துக் காட்டிக் காட்டி முன் பழமைப் பாட்டுவேத கிரந்நங்கள் விரிந்து விளங்க வந்து னின்று இலங்குவதானது -

தீர்க்க தரிசனப் பகுதி

திவ்விய வாசகராகிய கோவாமணி புனை யோவானவர்களுக்கு வெளியாக்கியுள்ள சுவிசேஷ வேத வெளியிலே ஒண்ணுவது அதிகாரம் மூனுவது னலாவது வாக்கியம் பதினேராம் வாக்கியத்திலே ஓதி யிருக்கின்றதாவது -

இந்நத் திர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும் கேட்கிறவர்களும் இதில் எழுதி யிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள் - காலம் சமீபமாயிருக்கிறது -

யோவான் ஆசியாவிலுள்ள ஏழு சபைகளுக்கும் எழுதுகிறதாவது – இருக்கிறவரும் இருந்நவரும் வருகிற வருமானவராலும் அவருடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருக்கிற ஏழு ஆவிகளாலும் என்றும் –

ஞன் ஆல்பாவும் ஒமேகாவும் – முந்நினவரும் பிந்நினவருமா யிருக்கிறேன் – னீ காண்கிறதை ஒரு புஸ்தகத்தில் எழுதி ஆசியாவிலிருக்கிற ஏழு சபைகளுக்கும் அனுப்பு என்றும் –

கல்தேயானுட்டின் னேபுகாத்துனேச்சா ரென்னும் அரசனுடைய காலத்திலே அத்தேசத்தில் மகாரூப லாவண்யத் திருமேனியரென்று – இளம் பருவகாலத்திலேயே தேர்ந்நெடுக்கப்பெற்று அவ்வரசாங்கத்திலே வளர்ந்நு மதி மந்நிரித் தலைமை பூண்டு அரசு கிரீடம் போலே எழுபத்திரண்டு வருடங்கள் மெய்ஞ்ஞான தீர்க்க தரிசனங்கள் ஒதிவந்நுள்ள தானியேல் அவர்கள் ஞூணி வைத்துள்ள அதிகாரம்ப ன்னிரண்டு – ஏழாம் வாக்கியத்திலும் – சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவை கனி ஈசா வென்னும் தேவ கோமானவர்களுக்கு வெளியானதை யோவானவர்களின் மூலமாக – சத்திய வேதத்தின் வெளியிலே பத்தாம் அதிகாரம் ஐந்நாவது வாக்கியத்தும் – மேலும் இரண்டாவது வேத கர்த்தாவாகிய ஆசகலாத மூசானபி என்னும் மோசே தீர்க்க தரிசியரவர்கள் ஓதி வந்நுள்ள உபாகமம் முப்பத்திரண்டாம் அதிகாரம் ஞற்பதாம் வாக்கியத்தும் – மேற்கூறி வந்நுள்ள ஏசையா தீர்க்க தரிசிய ரவர்களின் தீர்க்க தரிசனம் ஞற்பத்து ஒன்பதாவது அதிகாரம் இருபத்திரண்

டாம் வாக்கியத்தும் -முன்னே கூறி வந்துள்ள இள மையிலேயே ஞானஸ்னனம் பெற்ற ஒவிய தாவீது னுய கமவர்களின் சங்கிதம் னூற்று முப்பத்து னுலு ஒன்னு வது இரண்டாவது வாக்கியத்திலும் மின்னி ஏறி வரும் தீர்க்க தரிசனங்களாவன -

அப்பொழுது சணல் வஸ்திரம் தரித்தவரும் ஆற் றின் தண்ணீர்களின்மேல் னிற்கிறவருமாகிய புருஷன் தம்முடைய வலது கரத்தையும் தம்முடைய இடது கரத் தையும் வானத்துக்கு னேராக ஏறெடுத்து ஒரு காலமும் காலங்களும் அரைக் காலமும் செல்லும் என்றும் -

னுன் கண்ட தூதர் தன் கையை வானத்திற்கு னேராக உயர்த்தினுர் -இனிக்காலம் செல்லாது என்றும் -

னுன் என் கரத்தை வானத்துக்கு னேராக உயர்த்தி னுன் னுனே அவர் என்றும் -

இதோ சாதிகளுக்கு னேராக என் கரத்தை உயர்த்தி ஜனங்களுக்கு னேராக என் கொடியை ஏற்று வேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறுர் என்றும் -

இதோ இராக் காலங்களில் கர்த்தருடைய ஆல யத்தில் னிற்கும் கர்த்தரின் ஊழியக்காரரே - னீங்களெல் லோரும் கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள் -

உங்கள் கைகளைப் பரிசுத்த ஸ்தலத்துக்கு னேராக எடுத்து - கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள் என்றும் -

இன்னும் மெய்ஞ்ஞான எழிலோங்கிய தேவ அருட் பிரசாதராகிய ஏசையா தீர்க்க தரிசியரவர்கள் தீர்க்க

தரிசனம் அஞ்ஞாவது அதிகாரம் இருபத்து ஆரும் வாக்கியத்தி னிடத்தும் – மேலே கூறி வந்நிருக்கும் சர் வாகமக் கிரந்நம் இரண்டாவது காண்டம் – கடைக் கலி கால னிலே கூறி வரும் அறுபத்து ஆரும் பக்கத்தி னிடத்தும் ஓதி வந்நிருக்கின்ற சத்திய திடத்திரு வசனங்களாவன:-

அவர் தூரத்திலுள்ள சாதியாருக்கு ஒரு கொடியை ஏற்றி அவர்களைப் பூமியின் கடையாந்நரங்களிலிருந்து பயில் காட்டி அழைப்பார் என்றும் –

கர்மத்தை ஈட்ழித்துக் காந்நக்கோல மருளி என்றும் –

பலவித கோலங்கள் – ளுளுக்கு ளாய் னடக்கும் அதிசயமாய் என்றும் –

இதன் மேலும் முன்னே செஞ்ஞொலின் சீரேறி வந்நிருக்கும் ஆணிமொழி தானியேல் என்னும் ஞான கோமானவர்கள் வெளியாக்கிய வேத சுருதியின் தீர்க்க தெரிசனத்தே பத்தாம் அதிகாரம் ஆருவது வாக்கியத்திலும் – ஏழாம் அதிகாரம் ஒன்பதாம் வாக்கியத்திலும் – மேலும் கல்தேயா ராச்சியத்தின்கண்ணே இதன் முன் சென்ற காலமாகிய இரண்டாயிரத்து இருபத்திரண்டாம் வருடத்தி லங்கே குருப்பிரசாத பரம்பரை வழியாக வந்து குருப்பிரசாதராக விளங்கிய ஏசேக்கியேல் தீர்க்கதெரிசியரவர்கள் தீர்க்க தரிசனம் ஹற்பத்து மூன்ரும் அதிகாரம் இரண்டாம் வாக்கியத்திலும் எழுதி வரானின்ற தேவ தரிசனப் பதிவுகளாவன:-

அவருடைய வார்த்தைகளின் சத்தம் ஜனக் கூட் டத்தின் ஆரவாரத்தைப் போலே இருந்தது என்றும் -

அவருடைய சிரசின் ரோமம் வெண்மையாகவும் பஞ்சைப்போலத் துப்புரவாகவும் இருந்தது என்றும் -

இதோ இஸ்ரவேலின் தேவனுடைய மகிமை கீழத் திசையிலிருந்து வந்தது - அவருடைய சத்தம் பெருவெள் ளத்தின் இரைச்சலைப்போல இருந்தது என்றும் -

இவ்வாருகவே இன்னும் அனந்நானந்நம் வேத கிரந்நக் கடலாழியினிடத்தே தீர்க்க தரிசனங்களான மறை முத்தென்னும் வெண்டரள னித்தில மணி முத்துக்கள் இப்போது இங்கே பெருகி னீண்டு விரிந்து கொண்டு வருகின்றமையினலும் - மேலும் அவை ஒருவா றேனும் வரம்பு கோடு கண்டு எழுதி முடிக்கலாமா எனத் துணிகினும் அதுவும் முடித்துக் கொண்டு மான்மிய சரி தத்திற்கு இப்போது திரும்பிவர முடியாததான னெடுந் நூரக் குவியல் குவியலாயிருக்கின்றதினலும் - அன்றியும் மேனளில் அங்கே துறவு பூண்டெழுந்து சுத்த ஞைதாந்த ஒத்தை மனம் படைத்துக் குடும்ப மெனும் காமலி தேகத் தடம் பாடணைத்தும் துண்டாடி விட்டுத் தனியே கிளம்பி வரும் எங்கள் ஞயகமவர்களின் வியாபார ஸ்தலமாகிய குடிபதியாம் வீட்டிலிருந்து அதிகாலையிலே பழந் நேரருகே வந்து கேட்டு இருக்க வைத்திருக்கும் - தங்கள் சீரேறுஞ் ஞெல்வப் பேருனனுட்டுக் காராருமேனிப் பிரானவர்களி டம் சுணங்காது விரைந்து போய்ச் சேர்ந்து - அதன் மேல் அகிலவலம் வரும் பருவம் மான்மியத்தில் வளர்ந் நேறி யேறி வர வேண்டியதாகிறது -

தேவாக்கள் முதலாகிய சான்றோர்க ளென்னும் அனந் நாதி தெய்வப் பெருங்குல மக்களெல்லோரும் எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்ற முழுக் காரிய அவசிய மாதலினலும் – அதனை விட்டு இங்கே தீர்க்க தரிசனப் பெருங் கடலினுள்ளே வாக்கு வழியிலே ஓடி ஓடிப் பாதா ளம் ஊடுருவிப் பாய்ந்து முதிர்விளைவு கொண்டு பேராழி மறைக் கடலாழியிலே பதிந்து படிந்து கிடக்கும் வெண் டரளத் தரிசன னித்தில முத்தினைக் கொழித்துக் கொண் டிருந்த மதி னகார இன்ஜீன் ஆகிய எழுது ஆணிமுனைக் கூர்மை ஓர்மையானது – அத்தீர்க்கத் தெரிசன மறைக் கடலாழியி னிடத்தே பின்னே அடுத்தடுத்து வந்து உமது தீர்ப்புத் தீர்க்கதரிசன னித்தில மணி முத்துக் கொழிக்க வருகுவேன் எனக்கூறி விடை பெற்றுக் கொண்டு - திரும்பி – தமது பிரயாண உதய அகில வலப் பருவ வழிபாதை தேடி – பிரானுடன் கூட னடந் நன சரிதம் தொடர்ந்நன எழுதுகோல் –

தொடர்ந்நுமே சென்ருர் பின்னே
தொன்பழ வினைகை விட்டே
அடர்ந்நுதன் ஆசான் ஒன்றே
அருட்கதி யெனவே மாண்டார்
படர்ந்நமுச் சகமு மாகிப்
படைப்பனைத் தினுந்நி ரண்டு
கடமெடுத் துவந்ந பண்டைக்
கலைமந்நிர கிரியோ டுற்ருர்

உற்றுஅவர் எழுந்ந காலம்
யுகத்தலை முதனு ளாகும்

இற்றைநம் பொருள்பேர் வாழ்வும்
இறந்தன இனிநான் வல்லேன்
உற்றவர் மனத்தே ஊணி
உரத்திளஞ் ஞெம்ம லோரும்
அற்றய னோடொன் றாகி
அருள்வழி தொடர்ந்த ரம்ம

இவ்வாறாக அருளரசு ஆலவாய் மதினா மன்னா வென்னும் சென்னெறி வீதிப் பெருவிளைவுச் சமுசாரியர்களாகிய தங்கள் முகமுகத்து ஆத்மகாம நாயகராகியும் அகமுகத்து இருதயக் கமல வாசராகியும் – அண்டரண்ட அகண்டாகாரங்களும் நிகரில்லாத வலுப்பமான சுத்தாவிக் குணக் குடியானவர்களின் வாழ்க்கைப் பிரவாகப் புதிய ஜீவனைத் தந்துவிட்டு – காலையிலே உதயமே நாழிகை நேரத்திலே சென்று உச்சித காலத்தே ஊரு உலாவிவரும் பழந்நேரருகே ஆசனமிட்டிருந்துகொண்டு தமது வானாட்டுக் குலமரபு உயிராவி தந்து ஈன்றெடுத்த மகன் வரும் வழியை மேற்கு முகமாக எதிர் நோக்கிக் கொண்டிருக்கும் அருட் தாயின் மீது தாங்கொணாப் பெருந் நாகங் கொண்டவர்களாய் எழுந்து விட்டினை விட்டுத் துறவியராகிப் பிரிந்து – குறுக்கு வழி பிடித்து வரும் குமாரரவர்கள் – தாம் படைத்த வாழ்வினை யனைத்தும் வினையென வெறுத்து எண்ணி யானெனது தனிகை மணித் திருவடிப் பிரானிடம் உடல் பொருள் ஆவியாகிய மூன்றையும் உமக்கே சொந்தமென வாக்குறுதி செய்து தத்தமாகத் தாரைவார்த்துவிட்ட சொற்கடனைக் கட்டுவதற்காகப் போகின்றேன் என எண்ணி வீறியோரெட்டி ஏறி நடப்பார்கள் –

மேலே கூறிய தாம் படைத்த வாழ்வுக ளனைத்தை யும் உருட்டி ஒரே பொதுவாக எண்ணி - எக்காலத்தும் இனி நான் உன்னிடம் வருகிறது இல்லையெனத் தேரடி எல்லையை னினைந்து தமது பிரானாகிய துன்பந்நொலைக்க வந்துனிற்கும் இன்ப விம்பத்தினை னினைவார்கள் - அங்கே தாம் உதறி விட்டு வரும்வினையானது பின் தொடர்ந்து வருகிறதோ என்னவோ வென எண்ணிப் பின் பார்த்துப் பார்த்து வேகமாக எட்டி விசிறி னடந்துவரும் தருணம் - அங்கே தேரருகே இருந்து மேற்கு முகமாகத் திரும்பி வழிபார்த்துக்கொண் டிருக்கும் - மனித குலதிலக முனிவர் குழு வரசு தனிகை னிதி பதும தமது மதி மா மணத்தாரவர்களின் இடது புஜப் புறமாக வழினேர் குறிவைத்து வந்நவர்கள் வளைந்து முகனேரு முன்பாக வந்துனின்று தங்கள் பிரானவர்களின் பெரிய திருவடி களிரண்டிலும் தமது முகஞ் ஞேர்ந் நணைந்நார்கள் -

இவை யாவும் தெரிந்துகொண்டிருக்கின்ற பிரான வர்கள் குனிந்த முக இளனகை யுடையவர்களாய் மகிழ் வுற்று அங்கே தாமதமின்றி எழுந்து திங்களூரருகே கீழ்ப்புறம் வடக்கு முகமாக வழி கூடி - அம்மன் கோவில் அக்கினிகுண்டத் தருகோரமாக வளைந்து சந்நையின் வடக்கே மேற்கு முகமாகத் திரும்பிவந்து சிறுவலூர் போகும் பெரும்பாதை வழி பிடித்து னடந்நார்கள் -

இவ்வாருகத் தொடர்ந்திரானிற்கும் குமாரரவர்களை ஞேக்கி - வீட்டில் ஞன் வந்நதன்பின் னீ வரும்போது னடந்ந வரலாறும் முன் காலங்களிலும் அதற்கு முன் காலங்களிலும் னடந்துவந்ந வர்லாறுகளும் கூறுமென

லேசான குரல் னீட்டிக் கேட்டார்கள் - அப்போது குமா ரரவர்களின் உள்ளத்தினுள்ளே அச்சமுலாவும் மனத்தி னராக ஆகி- எங்கே னம்மைக் கைவிட்டு விடுவார்களோ என்னவோ என்னும் பயம் மேலிட்டவர்களாய் – ஆதி யோடந்நமாக எடுத்துத் தங்ஙளுக்கு ஞாபகம் வந்துள்ள இளம்பழன பருவ காலத்திலிருந்து பள்ளிக்கூடம் னடந்ந வரலாறுகளும் ஆடுமாடு மேய்த்துவந்ந விதங் ஙளும் – விளையாடு பருவத்தில் ஏற்பட்ட விபத்துக்களும் அச்சரங்ஙள் உபதேசங்ஙள் வாங்ஙி அதனலுற்ற புண் பாடுகளும் ஒவ்வொன்ருக எடுத்துக் கூறிக்கொண்டுவரும் வழிபாதையிலே பிரானவர்கள் தாங்ஙளும் இடைஇடை யே கேட்டுப் பேசிக்கொண்டு வருவார்கள் –

இங்ஙனம் தொடர்ந்நிரானின்ற மெய்வழித்துணை மருந்நாகிய புதிய ஜீவனைத் தந்து விளங்ஙும் சர்வக்ஞ சாக்ஷாத்கார குருகுலத் திலகக் குலதெய்வமாகிய குரு பிரானவர்களின் கூற்றிணை யுதைத்த திருவடிக்கமலங் ங்ள் இரண்டினுக்கும் இணைந்நதொரு மெல்லிய ஆச னம் போலவும் - எழில் வனப்பரப்பில் செங்கொழுந் நுப் பசும்புல் மேய்ந்நறியா பாற்குடி காலத்தே தாயினம் பிரியா மானினங்ஙள் போலவும் - குருபிரா னவர்களின் கூடே உருவமும் னிழலும் போலும் னகமும் சதையும் போலும் தொடர்ந்நார்கள் – ... ...

இவ்வாருகத் தொடர்ந்து செல்லும் குமாரரவர்க ளுக்கு னம்பிக்கை யோக்கிதை னேசபாச அறிமுகமாக வும் தாய் பிள்ளைகளைப்போலே னேசபாசப் புழக்கமா கவும் உள்ள பெரிய வியாபாரிகளும் சிறிய வியாபாரி

களும் குடித்தனச் சமுசாரிகளும் - சுற்றிலும் னிறைந் திருக்கும் எல்லை யிடங்ஙளாகிய சிறுவலூர் கோபிசெட் டிப்பாளையம் பெருந்நுறை ஈங்ஙியூர் சென்னிமலை குன்னத்தூர் சேகூர் முதலாகிய னகரங்ஙளிலும்- இடை யில் ஆங்ஙாங்ஙு குவிந்நு செறிந்நிராளின்ற கிராமாந் நரங்ஙள் அனந்நமும் - தங்ஙித் தங்ஙி இருவரும் வழி பாதை தடங்ஙளில் வந்நுகொண்டிருக்கும் ஞளையில் - அந்ந விதி வழி பாதை தடங்ஙளில் எங்ஙும் - ஆங் ஙாங்ஙு கண்ணுறுகின்ற னேசபாச பழக்கமுள்ள ஜனங்ஙள் தனித்தனியாகவும் கூட்டங் நூட்டங்ஙளாக வும் திகைத்து னின்று பார்த்தார்கள் -

அவ்வாறு சந்நிக்கிறவர்களில் சிலர் சாமியாரைப் போலே போகிற இவர்களைக் குறுக்கிட்டுச் சொன்னல் பாவம் வந்நுவிடுமோ என்று எண்ணி கண்ணீர் சொட் டக் கைகட்டி ஒதுங்ஙி னிற்பாரும் - இவர் வியாபாரம் சொத்துச் சுகம் பெண்டு பிள்ளைகளை எல்லாம் விட்டு - என்ன இந்ந வேஷமாகப் புறப்பட்டு எங்ஙே போகிறுர் என்பாரும் - னேற்று ஞமெல்லோரும் பார்த்து இருக்க சந்நையில் னெல் மூட்டை மலைபோல்க் குவித்து அதன் மேலிருந்நு பணம் வாங்ஙிக்கொண் டிருந்நாரே - இவர் களின் கிளாஸ்காரரெல்லாம் ஏராளமாக னெல் அளந்நு எவ்வளவு மகிழ்ச்சியா யிருந்நாரே - அதற்குள் என்ன இப்படி ஆய்விட்டாரே என்று அங்ஙலிப்பாரும் - இம் மாதிரி மனைவி மக்கள் வீட்டை விட்டு இவர் போகலாமா என்று கூறுவாரும் - கவலையுடன் பார்த்து இவர் திரும்பி வரமாட்டாரா என்று எதிர் னின்று புலம்புவாரும் -

இவர் இப்படிப் போகிறவரல்லவே - இவரைக் கூட்டிக்கொண்டு போகிற பெரியவராயிருக்கின்ற இவர் தான் ஏதோ ஒரு மையைப் போட்டு மயக்கிய அம் மயக் கத்தினலே தொடர்ந்து போகிறதாகத் தெரிகிறது என்று கூறிவிட்டு - இந்நப் பெரியவர் பொல்லாத மாந் திரீகரா யிருக்கவேண்டும் என்று கூறுவாரும் - மையைப் போட்டு மயக்கினதென்ற சொல்லிணக் கேட்ட அறிவிலி யர்களாகிய ஆங்குள்ள சிலர் இதுதான் வாஸ்தவமாக இருக்கவேண்டும் - ஏனெனில் இவர் மகாப் பேச்சாளி யாகிய எதேச்சாதிகார பெரிய வியாபாரியாச்சே - இவ ரை ஓர் ஆட்டுக்குட்டியைப் போலவும் ஒரு அடிமை வேலை ஆள் போலவும் ஏதோ மையைப்போட்டுக் கூட் டிச் செல்லுகிறதல்லாமல் வேறே இல்லை என்று திட்டம் பண்ணிய சில மூகை மாமிசச்சவுடி மனிதர்கள் கூடி- இவ்வாறு அனியாயமாக ஒரு வியாபாரியையும் குடும் பத்தையும் கெடுத்து மோசம்பண்ணிக் கூட்டிக்கொண்டு போகின்ற இந்நப் பெரியாரை - னும் ஏன் போய்க் கேட் கக் கூடாது என்று எழும்பி எதிரேவந்து அருகே னெருங்கி சலாம் கூறிக்கொண்டு உட்கார்ந்நார்கள் - இவ்வாறு உட்கார்ந்நவர்களில் சிலர் குமாரரைப் பார்த் தார்கள் - சிலர் காரமான முகரைக்குறி தோண பிரான வர்களைப் பார்த்தார்கள் - இதைக் கண்ட குமாரரவர்கள் இவன்ங யாருக்கு என்ன னன்றி செய்தவனுங்க யாரே னும் ஏழைகள் சிக்கிக்கொண்டால் ரொம்ப விசனப்பட்ட வர்களைப் போலே இது னன்மை அது னன்மை என்று

கூறி அதிகச் செலவில் இழுத்துவிடச் செய்கிறவனுக தானே- அவரவருக்கும் பிழைக்க வழி தெரியும்- இவன்ங ளுக்கை னீட்டி னமக்கு னல்ல வழி கூற வந்நிட்டான்ங - ஏதேனும் இனம் தெரியாமல் வாய் திறக்கட்டும் பார்த் துக்கொள்வோம் என்று கடுகடுப்பான உணர்ச்சி தோண னேக்கிக்கொண் டிருக்கையில் - பிரானவர்கள் வந்து எதிரே இருக்கும் அனைவரையும் னேக்கி இவ் விரி புவனமாகிய மண்பரப்பி னிடத்தே ஓரறிவு முதல் எல் லாச் சராசரப் பொருள்களனைத்தையும் ஆய்ந்து ஆளும் அறிவினைப் பெற்று மனிதகோல மெடுத்து வளர்ந்து வருவது எதற்காக வென்னும் கேள்வியாகியப் பிரச்சி னையைக் கிளப்பிவிட்டு - அதற்குப் பதிலாகிய விடை யினைப் பகர்ந்து சிறிதுனேரம் பேரின்பத் திருவசனம் பேசிக் கொண்டுவந்து விட்டார்கள் -

அது கேட்ட கூட்டத்தினர் ஒருவர்பின் ஒருவராய்க் கிளம்பிச் சென்றார்கள் - சிலர் யோசித்துக்கொண்டு வந்துதான் பேசவேண்டும் என்று போனார்கள் - கடோசியாக சிலர் னமெல்லாம் கேட்பது சரியல்ல - ஆலீம்சா அவர்கள்தான் கேட்கவேண்டுமென்று கூறி னர்கள் - அது கேட்ட ஆலீம் னீங்கள் முதலிலே கேளுங் ங்கள் - அதன்பின் னன் உங்களுக்கு உதவியாகப் பின் னலே னின்று எடுத்துப் பேசுகிறேன் என்று கூறிவிட்டு அதன்பின் - னும் இவைகளை எல்லாம் அங்கே போய்ப் பேசி முடிவு யோசனை கட்டிக்கொண்டு பின்னே வந்து கேட்போம் வாருங்களென்று கூறி எழுந்து கிளம்பி விட்டார்கள் - இது அவினசி கீழ்ரத வீதியிலும் சேகூரு

மேற்கு முஸ்லீம்தெருவு சின்னப்பள்ளி வாயிலருகே குதி ரை லாயத்திலும் னடந்தன –

இவ்வாருகத் தங்களுக்கு அறிமுகமாயுள்ள எல்லே யிடங்களும் கிராமாந்நரங்களும் தாண்டிக் கடந்நு சென்று அப்பாலே தங்களுக்கு யாதொரு அறிமுகங்ங ளுமின்றிய னெடுந்நூரம் தடம்பிடித்துப் பலவாம் காடு மேடு பள்ளம் படுகைகளும் அனந்நம் பல ஊர் கிராமா ந்நரங்ஙளும் னெடுகத் தங்ஙித்தங்ஙி னடந்நுசென்று சின்னுளிலே கோயம்புத்தூர் வந்நுசேர்ந்நார்கள் –

இங்ஙனம் குதி கொண்டு தொடர்ந்நிரா னின்ற குமாரரவர்கள் தாங்ஙள் ஏற்கனவே பழமையாக இடை யில் சதா அணிந்நிருந்ந ரட்டை ரண்டு சுற்று னீள மான தங்ங அரைஞாணும் ஐந்நு விரலாழி மோதிரங்ங ளும் தங்ஙளின் உபதேசகாலத்தில் – விரலாழி ஐந்நிணே யும் கழற்றி ஆசான் முன்னிலேயில் தாங்ஙள் அதிசிறப் பாக இல்லாமல் தாழ்மையாக இருக்கவேண்டுமென்று னிணேவி லெண்ணிய படியே மேற்படி விரலாழியை அரைஞாணில்க் கோத்து அரை வேஷ்டியினுள்ளே விட் டுக்கட்டியிருந்நதாகிறது – னீங்காது தங்ஙளிடமே தங்ஙி விட்டபடியினுலே தங்ஙள் திலகபிரானவர்களின் னெடுந் நடம் கைங்ஙரியத்திற்கு மகா னல்ல வாய்ப்பாக வாய்த் துக்கொண்டதை எண்ணி எண்ணிச் சந்நோடமுற்ருர் கள் – அதுனேரம் காணிக்கை னீதி மாணிக்கப் பிரான வர்கள் தங்ஙள் சம்பூரணத்துறை அம்பலவாண அமல ரவர்கள் இது கைங்ஙரியத்திற்காக மதுரையில் பட்ட

சளத்திேனயும் ஒருவார்கள் - இவ்வாறெல்லாம் எண்ணி அவ்வப்போது தங்கள் தேவைக்குத் தக்கபடி விற்றுத் தங்கள் தேவ தர்ம கைங்கரியம் னெடுக னடத்திவந் நார்கள் -

இவ்வாருகச் சிறிது னாளே கோயம்புத்தூரிலிருந்து அதைவிட்டு னீங்கி மேல் திசையின் வழியாகத் தடம்பிடித்து னோக்கி னடந்து வருகையில் - பலபலவாம் னகரம் காடுகரடுகளும் குன்றுகுழி கெபி சமமேடுகளும் அதில் சுண்டை ஆதளை ணர் வேம்பு வேம்பு மலைவேம்பு ஆத்தி அத்தி னெச்சி இத்திகளும் கும்மணி கொடுப்பை கூள்காரை கீழ்வாகை பூலா அம்மணிக்கோரை அருகுசிர்விழுதி வெட்டி செந்நிட்டி வேர்விலா மிச்சை திட்டி பிரண்டை சேப்பன் னன்னரி செழுனீரோடை வண்டல்கள் ஓரக் கங்குகள் எங்கும் வேர் விழுதோடும் தாழை செந்தாழைக் குப்பல்களும் -

கொருக்கு முக்கோரை சம்பையும் னாணை சிரிக்கி சிறியானங்கை கரிசலான் துளசி தூதுவளை தொட்டாச் சிணுங்கி துத்தி முடக்கத்தான் வழுகலானும் - கோவை துவளை குறித்தலைப்பாவை சென்னையுருவியும் செலங்கை கட்கொடியும் - வெற்பாவை முள்ளி கற்பூரவல்லி னீலக் கொளுஞ்சி கீழானெல்லியும் னீட்டுடைப் பரந்த காட்டகத்திடத்தே ஆங்காங்கு தோட்டங்களியற்றி தனித் தனியே காலகாலங்களாக பெண்டிர் பிள்ளை குட்டிகளுடன் மாடாடு பட்டி பெருக்குடனே யிருந்து வாழ்ந்து வரும் கவுட சமுசாரியர்களின் தனித்தனி குடியிருப்பு குடிசைகளிலெங்கும் தங்கித்தங்கி னடந்து செல்லும்

காலத்தில் ஆங்காங்கு குடிசைகள்தோறும் வேட்டை ஆயுதங்களாகிய ஈட்டி துப்பாக்கி வில்லு வேல் வாங்கு சூளுக்கி அரிவாள் சுண்டு கவண்களும் பலபலவாம் ஆயுதங்களங்கே அலக்ஷியமாக சிறு பிள்ளைகள்முதல் இழுத்துக்கொண்டு திரிந்து தாறுமாருகச் சிதறி வெளியே கிடக்கும் தனிக்குடியிருப்பு வேளாண்மை கவுடர்கள் கண்டு – ஆங்காங்கு னேக்கிய ஒவ்வொருவரும் சுவாமி சுவாமி என்று கும்பிட்டழைத்துக்கொண்டு போய் – அக் காட்டுப் பக்கிசாரங்களினுடைய கீரிவீறுதொனியோசை ராகம்போன்று கீச்சு னிட்டிய பேச்சுக் குரலால் னிவினிவிப் பேசி – ஆண்களும் பெண்களும் காணுத ஓர் அதிசயப் பொருளைக் கண்டெடுத்தவர்களைப் போல பிள்ளை குட்டிக ளெல்லாம் குய்யென்று கூடி மொய்த்துக் கொண்டு புதுமையான முகத்தோடும் உபசார ஆசரிப்போடும் னல் விருந் நளிப்பார்கள் –

மேலும் அங்கேயே தங்கியிருக்கும் படியேயும் கெஞ்ஞிக் கீழ்ப்படிவார்கள் – பிரானவர்கள் அவர்களுக்கு ஆங்காங்கு மகிழ்வு பேசியும் னன்மாராயம் கூறி வழி கூடி னடந்நு சென்று அப்பாலே மலைகளும் கணவாய் கெபிகளும் எட்டமுடியாத தோற்றமாய் பெருவளம் சுரந்நிலங்கும் பொழில் வனப்பரப்பினிடத்தே – அங்கே ஓங்கிச் செழித்து வளர்ந்நு விரிந்நிரானின்ற னெருக்கமான வாதிலைக் கரங்களினுலே ஒருருளை எழுபரித்தேரோனின் கிரணக்கையினை காவினுள்ளே னீட்டி னிழலைக் கொள்ளை அடித்துவிடாமல் தடுத்துப் பாதுகாத்துக் கொண்டிருப்பனபோன் எங்கும் கம்மலான தோற்றம்

கொடுத்துக்கொண்டு சிலே ஓசை ஓடினிற்கும் விரிந்த னிழல் வனத்தினுள்ளே –

அங்கு எல்லாவிடத்தினும் கோ – கோ – கா – கூ– என்ற இரைச்சல் அசைவு ஓசையானது இடையருது விரிந்து விசிறிவிட்டுக்கொண்டிருக்கும் தருக்கினங்களா கிய – தணக்கு விருட்சம் தானிக்காய் கடுக்காய் மணக்கு செம்பகம் மாமரம் னெல்லி தேக்கு தேத்தாமரம் சிறு னவா அகிலும் கருங்காலி புரசு காட்டத்தி மூங்கில் சந்தனம் வாகை சரக்கொன்னே அசோகு வெந்தேக்கு மட்டி வேங்கையும் ஞன்கும் – ஆலு தோதகத்தி பா லத்தி புங்கு இருள் புளி இலந்தை னறுவிலி எட்டி மட்டிப் பால் ' விருட்சம் மருதமும் – கொடுக்காய் புன்னே ஏர் அழிஞ்ஞி பூவத்தி அரசு மலம்பூவரசு மதனகாமமரமும் பாதாம் விருட்சம் பெருனறி கிளுவை சந்தனவேலா சாம் பிராணி இலுப்பை பலா விளாவிருட்சம் பூராவக்கணத்தி பாதிரி தேங்கு பண்ணேயும் கமுகு வன்னி பேரீஞ்ஞி வில் வமும் குண்ணியும் விரியவிருட்சமும் கருவேல் மரமும் ஞரத்தை முந்திரி ஞட்டுக்களாப்பழம் கொய்யா மகிழம் கொடுப்பைவிருட்சம் - இன்னும் அனந்தம் எண்ண வொண்ணுத மண்ணலங்காவில் – பயம் குளிர் போர்வை பெரு மர வனத்தே – திசை தடம் மாறும் திரள்வனத் தங்கே கூவும் குயிலும் கூட்டம் புருவினம் மணிப்புரு தவிட்டு மாடப்புருவும் கானங்கோழி கவுதாரி காடை வானம்பாடி வல்லூறு ஆந்தை செம்பூத்து சேவல் செங் காலி னரை வாலோடி னீண்ட மணிச்சலான்சிட்டு முருக்

கன்சிட்டு முள்வேலிச்சிட்டு அடைக்கலன் தூக்கணன் அனேக சிட்டினங்கள் கொன்னவாக்குருவி கொண்டை வளந்நான் அழுகவண்ணாத்தி அன்றிலும் கரிச்சான் மயில்களும் கிளிவகை மரங்கொத்திக்குருவி ஐவர்ணச் சிட்டு ஆள்காட்டி மைன வளுங்கு தேவாங்கு வாட்பல் லுக்கீரி அணில் வரிஉடும்பு ஆமையும் பூனை குரங்கு புள் வேட்டை குழிமுயல் முயலும் கரடியும் பன்றி காட்டானை எருமை புள்ளிமான் கிள்ளை புலி னய் னரியும் மரை மாடு டனே மட்டிலாக் காட்டில் - எங்கனும் னிறைந்த இரைச் சலின் தொனியும் பொன்வண்டு விரியன்வண்டு கரு வண்டு கோ தும்பைவண்டு கொளுஞ்ஞியின்வண்டு செவ் வண்டுடனே சில்வண்டு இரைச்சல் பாப்பாரவண்டு பஞ்ஞவர்ணவண்டு மரகதவண்டு மாணிக்கவண்டு மொழுக்கவண்டுடனே மூவர்ணவண்டு எரியுருவண்டு கருங்கொடுக்கதண்டு மணிவண்டினமும் கனிவண்டு களும் செடிவன மெங்கும் சிலை ஓசை ஓடிக் கொப்பசைந் நாடும் கொழுவனப் பரப்பில் பூவிரி வாடை பெருவனக் கானில் தேனி வண்டினம் செப்பொணக் கும்பல் தேறலை உண்டு சிறகோசை விரிக்கும் னிறை வனங்காவில் னெடுந்தூர னடையி லங்கே -

இடையிடையே வழியில் குமாரரவர்கள் மரம் ஏறு வதில் மகா சாமர்த்தியமானவர்கள் ஆதலினலே ஓங் கிய மரங்களின் உச்சிக் கிளைகளிலிருக்கும் கனிகளைப் பறித்துவந்து பிரானவர்களுக்குத் தருவார்கள் - மேலும் அப் பிரயாண னட்களெல்லாம் அங்குள்ள காய் கிழங்கு பழம் முதலாகிய கெந்த மூலங்களே இடைஇடையாக

இருவருக்கும் பசியை விலக்கும் விசால மகிழ்ச்சிச் செல் வமாக இருந்து வந்தனன வனத்தே-

இவ்வாருகமாபெருங் குன்றுகளும் அடிவாரம் சரிவு ஏற்றம் இறக்கமும் காறை சுனை னதிகளும் னடந்து வருகின்ற னுளேயிலே அவ் வனப் பரப்பின் வழிப்பயண இராக் காலங்களில் இருவரும் தங்கி வரும் பயங்கரமான அகண்ட சோங்குடைய காட்டிலே - சாயங்காலமான சூரியன் குடதிசை குடியேறுந் நருணகாலத்தே-அங்கே குறுக்கு மறுக்குமாகச் சுற்றித் திரியும் ஏதாவது வேடர் களைச் சந்தித்தால் அவர்களுடன் கூடவே பின் சென்று குன்று சுனைச்சரிவு ஓரங்களில் கட்டியிருக்கும் அன்னவர் குடிசை வாரம் ஒட்டில் தங்குவார்கள் - அல்லது ஒருவ ரும் சந்திப்புப்படாத னுட்களில் ஆதவன் மேல்திசை போய்ச் சாய்ந்து செல்லும் வெளிச்ச னேரமே ஆய்ந்து பார்த்துத்தேடிச் சற்று செடிமரங்கள் அடர்த்தி இல்லாத தாயும் சற்று வெளியா யுள்ளதாயும் அல்லது பாறை மேடு உயர்ந்த குண்டுக் கல்லுகள் உள்ள இடமாயும் பார்த்து அங்கே தங்குவார்கள் - இவ்வாறு தங்கிவரும் இராக்காலங்க ளனைத்திலும் ஒருனுளேனும் ஒரணுனேர மேனும் முன்னுளி லேற்று என்னுளும் னீங்கா மன்னுளி மன்னுவாகிய பிரானவர்கள் தலைசாய்த்துப் படுத்ததைப் பார்த்தறியாத ஆச்சரியமுற்று - இந்த அன்பேறும் பெருந் நந்நைத் தம்பிரானவர்கள் அயராத கார்மானக் குறியை ஆய்ந்துவரும் குமாரரவர்கள் - மேலும் தங்கள் இளமையிலிருந்து வயது வளர்வேறி வந்துள்ள காலங் களில் ஒரு னுளேனும் ஒரு இரவேனும் இவ்வாறு பெரு

மரவனத்தில் புகுந்து பழகி யறியா தவர்க ளாதலினலே புதிய பயங்கர ஓரமான பழக்கத்தினைப் புழங்கிவருந் தருணமாகிய அந்த ஞனையிலே - தங்கள் வேதாவாகிய திலக பிரானவர்கள் வேதப்பதியின் தெய்வ ஆதீன பாரம்பரைக் கட்டுத் திறவுகோ லென்னும் தேவ வடிவு ரகசிய தீட்சைகளாகிய ஜீவஆவி அறிவானது எழும்பி மீறி ஏறிஏறிப் பூரிக்குகின்ற ஆத்மசந்நி சந்நப்பிரசாத னவரசப் பிரேரணை அருந்த அருந்நக் கொடுத்துக் கொண்டே யிருப்பார்கள் -

இதனைச் செவிசேர்ப்பு வாய்மடல் விரித்து அருந்தி வரும் குமாரரவர்களுக்குக் கேள்வியினைப் போலே உள் ளக் கிடக்கையின் சம்மதத்தினை வினவிவரும் பலவாம் சமயப் பிரேரணைகள் எழும்புகின்ற ஆங்காங்கு தங்கள் உள்ளம் கிளைத்து ஆய்ந்து விளங்கி உள்ளவற்றினைக் குமாரரவர்கள் விடையாகப் பகர்ந்துவருவார்கள் -

மேலும் தங்கள் சிறுபோது ஞட்களாகிய விளை யாட்டுக் குமார பருவ காலத்திலே முன் பின் அறியாமல் முரண்டாட்ட வேடிக்கை பந்நயத்துள் புகுந்து புகுந்து பலகாலம் அஞ்ஞாது விழுந்து வந்ந அதனையும் - வேங் கை வேட்டை ஞயினிடம் சிக்கி உயிர்விடு தருணம் எட் டிப் போய்வந்ந அதனையும் - இன்னும் பல இதில் எழுதி இல்லாது வாக்கியங்களில் கிடக்கும் வெள்ளியங்கிரிமலைச் சம்பவ அபாயங்களையும் எண்ணி எண்ணி அப்போது அங்கே அவை எதிலேனும் ஒன்றில் உயிர் போயிருந் நால் போனதுதானே - அவ்வாறு ஆகியிருந்நால் இப் போது இங்கே இவ் வரும்பெரிய தெய்வத் திருவடி னிழ

லேக் கிட்டும்படிக்கு எட்டி யிருக்குமா என்று னினைவெ ழுந்நோறும் - தங்கள் ஜீவனில் இது இறுமாகக் கிடைத்த தென மகிழ்ந்நோங்கி ஓங்கி மகா உன்னலாகத் தப் பித்தோம் தப்பித்தோம் என்று வீறி அங்ஙனம் உள்ள பயம் சிதறி ஓட வையாளிபோடும் -

மேலும் தங்ஙளுக்கு வந்து எட்டிக் கிட்டப் பெற்று ஆளாகினிற்கும் அருட்குடியேற்ற அமலாண்மை ஆதி யை னேருறனிற்கும் னினைவுருக் கொண்டலேத்தோய்ந்து னினைந்து னினைவுறுந்நோறும் - இதற்காகவென்றே னம்மைக் குறி வைத்து ஆதி தலேனுள் துவங்ஙி னமது அறியாத செயல்களினுல் ஆங்காங்கு வந்து பீடித்துள்ள ஆபத்துக்கள் ஒன்றும் அணுகாத வண்ணம் அங்கெ லாம் கூடவே னின்று னமக்குத் தோன்ருத வண்ணம் முன் இருந்து கார்த்து அதிபெலன் தந்நருளித் தொடர்ந் நிருக்கிறுர்களென்று னினைவு வருந்நோறும் - உடலாய கேசாதி பாதம் மயிர்க் கூச்சேறி ஜிம்மென்று சிலிர்க்கக் கெட்டியாகவும் திட்டமாகவும் எண்ணுவார்கள் -

இவ்வாறு குமாரரவர்களும் தெய்வத் தனித்தந் நையராகிய - வரும்வரும் முனிவர் வழிப் பெருந்நலேமை பனி மலே யரசுத் தனிகையருடனே ஞடோறு மங்ஙே குளிரைப் போர்வையெனக் கொண்டு னிகழ்ந்து வரும் தொலே தூரமான வனவாச வழியிலே அங்ஙே -

சுருண்டு சிவந்ந சிகையினே யுடைய மஞ்ஞி பரந்ந விரிதலேயும் வெய்யிலில் வெம்பிச்சுரித்த மேனியும் மிரு

கம் பறவை யினங்களைக் கொலைபுரிந்து பழகித்தேர்ந்து பழமைகொண்டு விளங்குகின்ற பலவித ஆயுதம்பற்றி னரம்பு விடைத்த கரங்களும் – அக்கினி தள்ளி விடும் அழுக்குப் படிந்த தொங்கு கோவணக் கட்டிடையும் – ஒட்டிப் படிந்த வயிறுடனே கருங் கம்பளம் சார்ந்துள்ள தோளும் – பசும் புலால் சுவைத்துச் சுட்டசுவை பழகி மணம் வீசுகின்ற வாடைத் தொனியுடைய வாயும் – கொலைத்தொழில் உத்தி அடைபடுத்துக் கிடக்கும் குரூர மான பார்வைக் கண்களையுடைய வேடர்கள் குடியிருப் பாகிய குடிசைகளும் கடந்து அப்பால்னடந்து செல்லும் பெருவனக் காட்டினுள்ளே –

ஆகாய மளாவி ஓங்கி வளர்ந்திரானின்ற மரக் கவடுகளிலும் விண்ணோடி உயர்ந்த பலசரிவு பருவதக் குன்றுகளிலும் எட்டி ஏற முடியாத பயங்கரமான உயர்ந்த ஓர ஒட்டுகளிலே யிருக்கும் இருல்க் கூண்டினை அக் காட்டி னிடத்தே ஓடிப் படர்ந்து கிடக்கும்கொடிகளி னைப் பிடுங்கி னீண்ட பெரிய வடமாக முறுக்கித் திரட்டி எடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டு அங்கிருந்து அவ் விண்ணளாவிய தூரத்தில் இருக்கின்றதேன் கூண்டுக்கு னேராகக் கைப்பிடி வலுவில் இறங்கி அந்தரமாகத் தொங்கிக்கொண்டு உன்னிஉன்னி ஊஞ்சல் ஆடிப் பாய்ந்து ஈட்டி கொண்டு குறிவைத்துக் குத்தித் தள்ளு வதற்கு எரி கொள்ளிச் சுழுந்து காட்டிக்காட்டிப் பேர்த் துத் தேன்கூண்டினைப் பத்தைபத்தையாகக் கீழே தள் ளுவார்கள் –

இவ்வாறு ஆகாய மார்க்கமாக வந்து விழுகும் மலை கெபி அடிவாரமாகிய கீழே அதன் னேர் குறிபார்த்

துத் தன்தரையில் அவர்களுடைய குடும்பங்களாகிய பிள்ளை குட்டிச் சேகரங்கள் கூடிக்கொண்டு கொளை தழை களை வெட்டிப் பிடுங்கிக்கொண்டுவந்து அகலமாகவும் மேடாகவும் மெதப்பாகவும் போட்டு மிதித்து அதன் மேலும் வாழை அல்லி தாமரை முதலான இலைகளினலே மொத்தமாகப் பரப்பி அங்கே விண்ணளாவிக் குத்தி விட்டு வரும் தேன் பத்தையினை அண்ணாந்து பார்த்த வண்ணமாக இருப்பார்கள் -

இவ்வாறு ஆகாயமார்க்கமாகவந்து விழுகும் தேன் பத்தையினை ஓடி ஓடிப்போய் எடுத்தெடுத்து வந்து அவசர அவசரமாகப் பாத்திரத்திலே பன்னடை போட்டுப் பிழிந்து குடம் குடமாகத்தேன் சேகரித்துத் திரட்டிவைத் திருக்கும் மலசர்கள் பாரம்பரையாக வாசஞ்செய் குடிசைகள் ஆங்காங்கு குவிந்து குவிந்து கிடக்கும் சேரிகளும் கடந்து சென்றார்கள் -

அப்பால் னீருற்பனங்களாகிய ஆம்பல் னெய்தல் குவளை அல்லி கொட்டி சைவலம் செந்நாமரை வெண்டாமரைகள் ஜில்க்கொடி செவ்வல்லி கணக்கில்லாது பரந்து பூத்து பலவர்ண அலங்கார அழகுசிந்த செறிந்து சிறந்திரானின்ற அழகிய குளிர்ந்த படுகைச் சுனைகளும் வாரி மடுவுகள் ஆறு தடாகங்களும்கடந்து படர்ந்து அடர்ந்த வனமா வனங்கடந்து சேரன் சீமையை வந்நடைந்நார்கள் -

இந்நப் பிரகாரமாக வந்நடைந்த அங்கே இருவருமாக தத்தமங்கலம் கண்ணனூர் வழியாக ... ...

பலபலவாம் கிராமாந்நரகங்களிலும் தங்கித்தங்கி வந்துகொண்டிருக்கிற காலத்தில் பிரானவர்களினுடைய தேவனாட்டின் இச்சை விளைவுறும் மெய் எழில் சத்தியத் திருமொழிகளிணைக் கேட்ட கேட்ட அனேகம் ஊர்களிற் சிலர் அகமிய ஆச்சரியங் கொண்டவர்களாய் அன்னவர்களின் பொறைகளுக்கு அழைத்தேகி ஆசையுடன் உபசரித்து வைத்துக்கொண்டு அக்கம் பக்கங்களிலுமுள்ளவர்களுக்கும் பிரஸ்தாபித்து அவர்களும் கூட்டங் கூட்டமாகத் தினந்தோறும் வந்து வந்து கேட்கும் செவிக் கூரேற்ற புது இனிமை உணவினாலே பேரின்ப ஆசை மகிழ்ச்சியுற்று பலபல ஊர்களிலும் பலவாம் காலத்திலும் அனேகம் சிலர் ஆங்காங்கு உபதேசமும் பெற்றூர்கள் -

இவ்வாறு பெற்றூர்களெனினும் பின் - னாளேறினீடித்து வரவரத் தங்கள் தங்களின் சவுகரியப் பாட்டு இஷ்டங்களுக்குப் பொருத்தமில்லை லென்று போனவர்களும் - இப்படி இருந்நால் தேவலை அப்படி இருந்நால் னல்லாயிருக்கும் என்று புத்தி கூறுகிறவர்களைப் போல தங்களையே ஏமாற்றிக் கொண்டு போனவர்களும் - இன்னும் இது தங்கள் விதியின் பயனாலே கிடைத்ததென ஒன்றுக்கொன்று பேசி மதிகெட்ட தனைட்டியர்களாகித் தூஷித்தது போலே தங்களையே தூஷித்துக்கொண்டு அவரவரும் தம்தம் ஜீவனுக்கு னலங்கே டுண்டாக்கிக் கொண்டு போய்விட்டார்கள் -

இவ்வாறு போய்விட்ட னன்றிகெட்ட பேய்களுக்கும் - எங்கள் ஞயகமவர்களுக்கும் - ஆலயம் விடுகள் கடைவீதிகளிலும் விவகார வாதங்ஙளும் - சச்சரவு சிறுசிறு கைகலந்த சண்டைகளும் உண்டாகி னடந்து வந்தன - இன்னும் அவர்களிற் சிலர் - ஞம் உபதேசமும் வாங்கிக்கொண்டு விட்டோம் - னம்முடைய அறிவுக் கூரினலே னாலும் விளங்குகிறது - மட்டமான அறிவுடையவர்களைப்போலே இனி னமக்கு ஆசான் தேவையில்லை- சிந்தித்து ஞமே பார்த்துப் பட்டினிகிடந்து பத்தியம் பிடித்தால் ஞானம் வந்துவிடும் என்று போனவர்களும்- மேலும் னமது பழக்க வழக்கங்ஙளில் காணுகின்ற அதிசயத்திற்குக்கூட சமத்துவமில்லாத ஞானம் என்று கூறி வீணக்கண் படைத்துப் போனவர்களும் உண்டு-

இன்னும் னம்முடைய சவுகரியங்ஙளுக்கு வேண்டுவனவாகிய பலதிறப்பட்ட வேலைகள் எல்லாவற்றையும் கெடுத்துக் கம்மிப்படுத்த இருக்கின்ற இது ஓர் முட்டுக்கட்டையான ஞானமென்று கைவிட்டவர்களும் உண்டு - அன்றியும் காசு பணம் சம்பாதிக்க முடியாத ஏழை ஞானமென்றும் - இன்னும் னம் இஷ்டம்போல் எதேச்சையாய் ஓர் பீடிகூட உபயோகிக்க முடியாத கட்டுமானமான இது ஓர் சிக்கு ஞானமென்றும்- இன்னும் னம் அவசரம்போல் வாங்கிக்கொண்டு போய்விட முடியாத இது ஒரு னீளமான ஞானமென்றும்- மகாச்சலிப்புச் சொல்லிக்கொண்டு போய்விட்டவர்களும் உண்டு - இன்னும்சிலர் உபதேசம்பெற்றீர்களே - என்னபெற்றீர்கள் என்று பிறர் கேட்கும்போது மூன்று உலகும் அண்ட

பிண்ட சராசரங்க ளனைத்தும் விடிவுறச் செய்த இதயப் பிரகாச மகா மந்திரப் பிரேரணையாகிய பெரிதைப் பெரிதெனக் கூறுமல் ஈனப் பேடிமனம் படைத்துப் போனவர்களும் இன்னும் தம்மை அவமானப் படுத்தி எல்லோரும் இடைஞ்சல் படுத்தி விடுவார்களே என்று அச்சங் கொண்டு – னான் அங்கு சும்மா பார்க்கவன்றே போயினேன் என – இவ்வாருகக் கூறி வஞ்சகக் கிடங்கிலே ஆழ்ந்தே விட்டவர்களும் உண்டு –

இவ்வாருக அனந்நம் ராட்சதர்களாகவும் ராட்சஸ்களாகவும் வந்நுபோயிக்கொண்டு னிகழ்ந்நுவருங் நாலத்திலே – ஒரு னுள் ஓர் ஆற்றங்கரையிலிருந்து கொண்டு தங்கள் தேவத் திருவள ஞடென்னும் திருக்கயிலாயக் குன்றேறி னிற்கும் பிராணுகிய செய்குல் முருசதுனு என்னும் தனிகை வள்ளலாகிய தங்கள் குருபெருமானுடன் அருகே எதிரிருந்நு பிரம்ம வித்தையாம் தேவ ரகசியச் செயலாகிய உயிரினிமை உணவுப் பாரமார்த்திகப் போதனு வசனங்கள் – இதயம் செழிக்க வரும் இன்ப வசனங்கள் – பூத்துக் குலுங்கும் பெருங்குடித் தம்பிரான் அவர்களுடைய தளிரேறு வாக்கினைக் கேட்டு வருகின்ற போது – அங்கே துவாபர யுகத்திலே யசோதை என்னும் பெண்ணிளம் சிங்கத்திற்கும் பற்குணனுகிய விஜய காண்டீபருக்கும் னீலமேக சாமளரூபராகிய திருனேத்திரப்பிரான் அவர்கள் விஸ்வரூபத்தினைக் காட்டியது போன் – அங்கே குமாரரவர்களுக்குக் காட்டிய தோற்றரவினுலே –அண்டாண்டங்களும் துலங்கத் தங்களுக்கு ஆதினுளியிலே – திங்களூரில் முதல் தீட்சை என்னும்

பிரம்மோதய விஸ்வரூப தெரிசனை செய்து வைத்ததா னது பார்பதி சமேதராய் ரிடபவாகனத்தில் வந்துதானே னடத்தி வைத்தார்கள் என்ற திட்டமான தோற்றம் அன்று அங்ஙனம் தெரியப் பெற்றார்கள் -

அங்ஙனம் தெரியப் பெற்று னிலைத்துக் கொண் டிரானின்ற - மகா ஆச்சரீகர அதிசய காரணங்க ளெல் லாங் ஙடந்த வலக்காரணத் திடம் கைகொண்டுவிட்ட படியினலே அந்த அதி உன்னத னிலையை - இக் கடல் சூழப் பெற்ற பெரிய பூமிப் பரப்பில் எப்பெரும் வல்ல முயற்சி கொண்டும் எத்திறப் பாட்டிலேனும் எட்டிப் பெறுதற்கரிய அந்த அதி துல்லபப் பெரிதைக் கண் டார்கள் -

அங்ஙனம் கண்ணுறச் செய்வித்துக்கொண் டெதி ரிருக்கும் காருண்ய விம்பமாகிய பிரானவர்களை னேக்கி-

தேவத் திருமலி வானப் பொதுனடத்
தரசே, அரசென
சேம னிதிக்கலை என்னுயி ருட்பழம்
பொருளே, பொருளென
சேவை திருக்கயி லாயப் பதிக்குடி
தலைவா, தலையென
தேக முடன்பொரு ளாவிஎ னக்கிலை
உனதே, உனதென

இவ்வாறு ஆனந்தப் பரவசராய் தோத்திரம் பண் ணிக் கொண்டிருக்கும் ஞயகமவர்கள் எண்ணியதாவது- இப்போது னமது கையில் லகிக்கப்பெற்று னீங்காது னிலைத்துக் கொண்டுவிட்ட பெருக்காதிக்க ஊதிய -

ரிடபவாகன இவ் வருங்காரணக் காட்சியினை இதுனள் வரைக்கும் னமது புண்ணாகிய கண்ணுக்கும் மனத்திற் கும் தோன்றப்பெருது மறைத்துக் கொண்டிருந்த மாசா னது இதுனள் விலகித் திட்டமாகத் துலங்கிக் கொண்டு எதிரில் னிற்க வாய்த்ததே என்ற ஆனந்தத்தால் - கண்களில் பொங்கிப் பொங்கிவரும் செழும் புனல் ஊற் றின் புளகாங்கித பாஸ்பத்தினல் உடல் உதறி மயிர்க் கூச்செறியும் அடையாளங்க ளெல்லாம் அதிலிருந்து எல்லை வரம்புகோடு கடந்து னின்றவர்களாகினர்கள் -

இவ்வண்ணமாகத் தங்களின் புராதனப் பழம் பெரும் செம்மலாகிய பிரானுடன் விழி இமைச் சேர்க் கையினராய் அனேகம் பல னகரங்களும் சென்று ஆங் காங்குச் சிறிதுசிறிது காலங்கள் தங்கித்தங்கி ஒருங்கே பலவருடங்கள் கடந்து வருங்காலத்திலே - பூனச்சி மலை வழியாகத் தடம் பிடித்துச் சோழதேசத்தை னடித் திசை னேக்கி இருவருமாக வழிகூடி னடந்து வருகின்றனளை யிலே - அங்கு கலைமானினங்கள் உறங்கும் மிருகம் பறவை இனங்கள் னெடுங்கால வாழ்வின் இருண்ட பெருங்காடுகளும் - அம் மிருகங்கள் வாசஞ் னெய்யும் குகைகள் புதர் கெபிகள் சூழ்ந்து பனிபோல் தோன்றிய சிகரத்தினையுடைய ஆகாயத்தை அளாவி னிற்கும் மலை களும் குன்றுகளும் கடந்து வருகின்ற கடும் னெடும் - பிரயாணத்தில் பிரானவர்களின் னிழலின் உருவம் போலே தொடர்ந்து வரும் தங்கள் குமாரரவர்களுக்குத் தாங்கள் முன் சென்ற னெடுங்காலத்து அங்கே - வாசம் செய்திருந்து வந்த கடுந்தூர வழிப்பாதைகளும் - அவ்

வழிப் பயண காலத்தே அப்ப னடந்த அதிசம்பவங் ஙளும்- அவ் வனத்தின் பெருமையும் குகை வளங்ஙளின் எழிலும் - அங்ஙே தங்ஙளின் உணவினது போக்கும் - அவ்வனத்திலே பலபலவாயுள்ள மிருகங்ஙளுக்கிடையில் தாங்ஙள் இருந்நு வசித்துவந்ந உபாய தந்திர சம்பி ரதாயத் திடங்ஙளும் - இன்னும் அவ் வனத்தி னிடத்தே னடத்தி வந்நுள்ள அற்புத அதிசயங்ஙளும் – விசாலமாக மெல்லிய னடையாய் - இடை இடையே பேசிக்கொண்டு வழி னடந்நு வருவார்கள் – இவ்வாருகக் குமாரரவர்களும் தனிகைமணிப் பிரானும் னடந்நு வரும் பாதையிலே – அங்ஙே கணவாய் மார்க்கமாக விசிறி வீசி அடித்து வரும் செம்புழுதியானது செம்மேகம் போன்று எழுந்நெ திராக்க் குறுக்கிட்டிருக்கும் பலவாம் திட்டோரங்ங ளெங் ஙும் படிந்நு - பனைமரம் முதலிய உயர்ந்ந தருக்கினங் ஙளை மேவி முழுகானிற்கும் அளக்கலாகாத பிரம்மாண் டமான மணல் மிதப்புகள் ஏகக் குவியலான ஏரிகளைப் போலே மேடு போட்டு அதற்கும் முன்பாக உள்ள அகண்ட மைதானங்ங ளெங்ஙும் வாரிவிட்டு விசிறிக்கிடக் கும் ஏக மணல் மெதப்பு விரிபரப்பாகிய அதில் - ஆங் ஙாங்ஙு னீர்களின் னிலைப்பு - துண்டு துண்டாக இள னீலக் கண்ணாடியில் காட்டுவதுபோல் சுத்தமாக மண லைக் காட்டிக்கொண்டு குளிர்ந்நு தெளிந்ந முத்தினைப் போல் ஜலந் நிரண்டு கிடப்பதும் - அதின் பக்கங்ஙளி லெல்லாம் குத்துக்குத்தானதாக வெட்டித் தளிர்த்த மரங்ஙள் குமுறிக் குடையடித்துக்கொண்டு குவிந்நு

குவிந்து சிறுசிறு மேடையினைப் போன்று வெளிவிட்டு ஆவரை நெச்சி விழி முதலிய செடி மரக் குடைகளுக் கிடையில் வெண்பட்டில் விரிப்பு விரித்ததுபோ லிருக் கும் மணல் பரப்பெங்கும் தங்கித்தங்கித் தாமதமாக ஊர்ந்து னடந்து கடந்து சென்றூர்கள் –

அப்பாலே பசும் புல் தேடிய விலங்கினங்களும் காட்டகத்து இனங்களும் மெலிவுடன் ஊர்ந்து திரியும் அகண்ட மைதானங்களும் அதில் வேனல் பறக்கும் அலைகளும் மலையடிச் சார்பு அடிவாரங்களும் அங்கே மலசர்கள் வாசஞ்ஞெய்யும் குடிசைகள் குவிந்துள்ள முல்லை னிலங்களும் கடந்து சிவமலை தாண்டி – எதிரே கண் பார்வைக்குப் புகைபோற் ருேன்றும் அனேகம் பெரிய பெரிய மைதானம் வனந்நரங்களும் கடந்து சென் னிமலை வந்து சேர்ந்நார்கள் – அங்கே சின்னுளிருந்து கிளம்பிக் கீழ்த் திசையாக ஞேக்கி அரசலூர் மலைப்பா கமாக வரும் ஞனையிலே அப்போது ஙயகமவர்களுக்கு முதல்த் தீட்சை பெற்றதி லிருந்து பனிரெண்டாண் டுகள் ஆகிற் ருதலினுலே ஙயகமவர்களுக்குப் பிடரிக் கண் திறந்து காரண தேகத்தின் தீட்சை பெற்று னிரந்நரப் பத்தியம் கைக்கொண்டு முடிவில்லா ஆகாய வீதி விளையாட்டு யோக குணுதீதராய் விசும்பின் முக டேறி எழுந்து பாயும் ஓர் அதிசய பச்சியைப் போன்ற காரணக் காட்சியினராய்ச் சுத்தசித்த மாபெருஞ் ஞெய லினையுடைய ஜோதி சொரூபத் திருமேனியைக் கைப்பற் றிக் கொண்டவர்களாகிய பின்னரே - பிரானவர்களின் திருமேனியைக் கரங்ஞொண்டு தொடுவதற்கு முழு யோக்

கியமும் பெற்றுக்கொண்டுவிட்ட ஞயகமவர்கள் – தங்ங ளின் பெருங்குடிச் சமுசாரியரவர்களின் குலமரபுக்குணங் குடிக் குணக்குன்றென்னும் கதிகருணைக் காருண்யக் காமீலாகிய குருபிரானவர்களின் கூடவே வடதிசை நோக்கி எழுமாத்தூரு வெளக்கேத்தி வழியாக – கஞ் ஞமலை காடையாம்பட்டி தாரமங்கலம் சென்ற அதிலி ருந்து – தங்கள் மடாலயச் சடாமுடித் திடாபரணராகிய குருதிலக மவர்களின் – எல்லாம் அறிந்த வல்லாள உள் ளத்திலே உதிக்கின்ற எண்ணத்தினை – ஞவி லெடுத்து வாய்கொண்டு கூறுவதற்கு முன்னரே ஞவுகொண் டுரைத்ததற்கு இலக்காக னின்று செவியுற்றுக் கேட்ட வர்களைப்போலே அறிகின்ற அறிவானது முன் னின்று துலங்கும் சாந்தி மனத்தினை யுடையவர்க ளாகி ஞர்கள் –

இன்னும் இவ்வாறு அனந்நம் னாமங்கள்கொண்டு இம் மண்ணுலகிற்கு னெறினீதி புகுத்துவதற்கு வந்ந வந்ந பாரவான்களெல்லாம் எடுத்து ஓதி எதிர்பார்த்திருக்கும் கலிக்கோளறுப்புத் தீர்ப்பதிபா என் மகனே - உன்னுடைய தனித்த னெஞ்சுறுதி ஒருமனத் துணிவு காரத்தினாலே - ஏழாம் பிரளையமான கலியுகக் கடைசியாகிய இப்பெரிய முழுப் பிரளையத்தை - னீ னின்று இறுதி னீதி னடுத்தீர்ப்புச் செயல் னடத்துவதற்காக எமது மூலமாய் உருவாகி எழும்பிவந்நு உதயஞ் ஜெய்கின்ற னிண்ணயமான கால அடையாளமாவது -

ஒருவர் இந்ந உலகத்தினிடத்தே ஓர் பெண்ணரசு பெரிய ராச்சியபாரம் அரசாண்டுவரும் அறுபதாம்

ஆண்டுகாலம் முடிவான சமயமென்றும்- மற்ருருவர் கலியுகம் பிறந்த முதலாம் ஆண்டு சித்திரை மாதம் வெள்ளிக்கிழமை னவமி திதி துவங்கி கலியுகம் என்று பெயர் சூட்டப்பெற்று ஆரம்பித்த பரீட்சித்து அரசனு டைய சிம்மாசனம் ஏறுகின்ற காலத்திலிருந்து இதுவரை யிலும் அரசு செலுத்தனம் செய்துவந்துள்ள அரசாங் ஙங்ஙளின் பெயர்கள் தனித்தனி எடுத்துக் கூறி- இன்ன இன்னவர்கள் ஆட்சி காலம் இவ்வளவு இவ்வளவென்று கணக்குக் கொடுத்துக்கொண்டுவந்து- வெள்ளை விக்டோ ரியாப் பெண்ணெனப் பெயர்கூறி- அப்பெண் அகண்ட ராச்சியபார அரசாளுகை வருடம் அறுபது என்று அது கால ஞூயிலே திடதீர்க்க தெரிசனம் கண்டெடுத்துக் கூறி - அதன்பின் அன்னவருடைய அரசாளுகையின் வயது அறுபதும் முடிவாகியதன்மேல் கலியுகத்தின் பவச்செருக்கேறி பிரளயனீதி னியமனத் தீர்ப்பு னடத்து வான்வேண்டி- னீ—எழுந்நருளி வரவேணுமெனத் தேவத் திருக்கோஷ்டியரின் தீர்க்க தெரிசனைத் தீர்ப்பு ஒருமுக மாக னின்று தீர்மானித்த - முடிவு தீர்மான கோட்டின் படியே ளானது இதோவெனக் காட்டிக்கொண்டுவந்து னின்று கூவி அழைக்கின்றபடியினலே-இன்றேனீ எழுந் நருளி உமது கடமையை முடிவு செய்ய வேண்டியதா யிருக்கின்றதப்பா - ஏகபரா என்மகனே -

இதனன்றியும்னீ சென்று அங்கு தங்கும் பழிபாவ மலிவு கலியூரிலங்ஙே உன்னிடம் வந்து - தேவப்பிறப் பென்னும் மறுஜெனனப் பிறவி பிறப்பதற்கென்று ஜீவ பூமியின்கண்ணே பதிவேட்டின்படியே அங்ஙே வரம்

பெற்றிருந்த முன்னாதிகாலத்தொடர் ஜீவதேகத்தினோர்க ளெல்லாம் இப்பரத கண்டத்திலே ஆங்காங்கு வந்து பல வாம் சாதி மதங்களிலே ஆக்ஞையின்படியே மனுக் கோலமெடுத்துவந்து உம்மீது நோக்கமாய் இன்னும் வைகுண்டம் வரக்காணோமே என்று ஏக்கமுற்று – கால் தலை யறியாது கவலையில் கட்டுண்டு – னாளும் கதிவேறு காணாது கலக்கம் பெரிதாய் ஆய்ந்தாய்ந்து னூற்கள் அணுவும் தோணாது – கயவர் கைபட்டுக் கசங்கி– னசுங்கி– புனர் ஜெனனப் பிறவிப் பக்குவ வயதேறி அலைகிறாரப்பா – ஐயா புறப்படு – அவர்கள் அலையும் ஆங்காங்கு னீ போய் எடுத்து மெய்யி லேற்றுங்காலம் விடிந்நாகிவிட்டபடியினாலே – மேலும் அவர்களினுடைய பாதர்வானது என்னேரமும் உன்னையே எதிர்னோக்கிக் கூவிக்கொண்டு உமது வரவு வழி – எதிர் அழைப்பு வருந்நி இருந்து ஏங்கிக்கொண் டிருக்கிற படியினாலே – னீ – தாமதம் செய்ய னேரமில்லை – ஏ – என் ஆதி மத்தி யாந்த ரகித உதயமதிக் கண்ணே –

இதன்மேலும் அகரத்துறை வித்வேஜட அக்காணி முனை அகம்புறத்துவாத அன் னெடுங்காலந் நுவங்கி வந்நுவந்நுள்ள அந்நந்ந யுகங்கள்தோறும் னீ இப்பூமி பாரந்நீர்க்க வரும்போதெல்லாம் கூடவேவந்நு – தொடர் பிடியாகத் திருமணஞ்ஞெய்து னிகழ்ந்நுவரும் கன்னியர வர்கள் – இப்போதும் னீ ஏழாம் பிரளையத்து வந்நுனிற் கும் காலத்திலேயும் அவர்களும் வந்நுபிறந்நு – பனிமா மதிக் கன்னிஎன்னும் னாமம் புனைந்நுவந்நு – உனக்குப் பாரியாராக வருவார்களென்று இரண்டாயிர வருடங்க

ளுக்கும் அப்பாலேயுள்ள செம்பா கெழிலோங்கிய தம்பி ரான் அம்பலவாணத் தம்பதனிலேக் கிழவரவர்களின், கலங்ஙானிலே னலங்ஙோடேற்ற பலன்பேருந் நிருவலங் ஙாடுறங்ஙும் செப்பருந்நவத்து அப்பரவர்களும் - அந் நம்பிறங்ஙிக் கந்நம்தவழ் தவச் சுந்நரரவர்களும் – தம்ப தங்ஙண்டு இம்பந் நிரண்ட சம்பந்நரவர்களும்- ஆணிப் பொன்னுட்டு அருந்நவச்செம்மலாகிய சிணிக்காதனெறி மாணிக்கவாசக வல்லாளகண்ட மன்னு வவர்களுமாகிய னல்வரும் - சரிகண்டு ஊணியிரானின்ற விதிவழிவரும் தீர்க்க தெரிசனைக் கிரந்நத்திலே பனிமாமதிக் கன்னி திருமணம் செய்யப் பிறந்நு வருவார்களென்றும் – இன் னும் னீ-பிரயாணமாக னிற்கும் ஊழிப்பிரளைய அமளி வேதனை னேரத்தில் னீதி னடுத்தீர்ப்பான உமது செய லாதிக்கத்தினைக் குறித்து னல்லிருளில் னட்டம் பயின் றுடும் னுதனுகிய – னீ - வருவாயென்றும் னெறி கூறி னிகழ்த்தியுள்ள படியேயும் – மேலும் மகனே – னீயும் னனும் இதனடுத்துக் கடந்நு முன் சென்ருகிவிட்ட முன் னெரு பிறப்பில் சேரனுடைய ஆள்கை விளங்ஙானின்ற தெட்சண பூமியின் தென்கோடிக் கடலருகே அங்ஙே சாகான் என்னும் பெரியவரம்பெற்று மகத்துவக்கிளே ஓங்ஙிய னும் பிறந்நு உதயம் செய்திருந்ந சாணரின் குலத்தே - அன்னலாம் பதம் பெற்று வாழ்ந்நிருந்ந மேலாங்ஙுடியை னடோறும் பார்த்துவந்ந னம்பூதிரியர் பொருமைகொண்டு னெஞ்னெரிவுற்று - சாணன் குலத்தே சாமியேதென்றும் – னீசன் குலத்தே னரணர் வந்நு

பிறப்பரோ என்றும் – ஈழுவன் குலத்தே எம்பிரான் அங்ஙே எப்படிப் பிறப்பரென்றும் – மரமேறிகுலத்தே மாயாவதாரன் வரவே மாட்டார் ஒருபோதும் என்றும் – மேலும் னம்முடைய பெரியஜாதியில் பிறப்பதைவிட்டு அங்ஙேயா போய் அவதரிப்பார் சாமி – பொய்யாகக் கூடி புலே பேசுகிருர்களென்று-இழிவுகள் அனந்நம் ஈன மாய்ப்பேசி ஞணயம்கெட்ட னமதுகுலமென்ருன் – ஈங்நு கள் கூறி எட்டி னில் லென்ருன் – இடைஞ்ஞலும் இடுக் கணும் ஏகமா விளேத்துப்– பொறுக்க முடியாத புண்பாடி யற்றிப் போடிவாடியென்று பெண்களேப் பேசுவான்– அதனுலே னம்மகுலக்குடிப் பெண்ணுர்களெல்லாம்–வசை மொழி கேட்டிலா மடமாதரெல்லாம்– கோ – கோ – என்று கொல்லே னின்றழுதார் – தெருவுகளிலே கூடித் தேங்ஙினின் றழுதார் – இவ்வாறு செய்த இடறுகளினுலே – ஞளுக்கு ஞளாய் னமது குலமெல்லாம்–செல்வங் நுறைந்து சீண மடைந்து வருவதைக்கண்டு-வாடி யெல்லோரும் ஞட்ட முற்றங்ஙே-ஞரணு என்று–குடியில்ப் பிறந்ந குலதெய்வ மென்று-னம்மையே னம்பி விம்மினின் றழுதார் – அப் போது அம்மனேர் அலறுதல் கேட்டு-னம்முடைய சாதி யின் னட்டந்நவிர்த்து – திம்மையை யொழித்துத் தீர்த் துமே கட்ட என்றெண்ணி ஞமும் அன்று எழுந்நு – அவன் மீது சாடி ஞம்பட்டபாடு ஞடு புலம்பின – அவ னுண்மை ஆட்சி அனேத்தையும் அன்று பலியிட்டு-னவ் வாப்புக் கையில் ஞட்டைக் கொடுத்தோம் – சாணுர் குலத்தின் னம் சாதியரெல்லாம்–பார்த்தோடி வந்நு னம்

பங்காளி எல்லாம்-ஆன னம் சாதி ஆண் பெண் அனை வரும்-தொட்டிலைக் கட்டித் தூக்கிச் சுமந்து -பாடெலாம் பட்டுப் பதிவந்து சேர்ந்த-சான்றோர்களான னும் சாணுர் குலத்தில் - னம்மை னுடாச் சில னுவீழனை புன்மதி கொண்டு பொய்யெதிர்ப்பேசிக் - கூடிக்கூடி கூட்டந்தி ரண்டு னம்பூதிரியரை னுடியே ஓடி -மும்மலக் கெருவத்தா லவன் மூடி-னம்மைச் செயிக்கத் தன்னறிவில்ச்சாய்ந்து போயினு னங்கே -னுய்ப்போலக் குணைத்து னுடானுகை னம்மை எதிரி வந்து னுடினுனென்று னம்பூதிரியரெல் லாம்குலத்தைத் தாழ்த்திச் சதிக்குள்ப்படுத்தக் கூடியெல் லாரும் வாருங்கள் வாரும் சான்றோர்களென்று-வஞ்னுக மாக வாயை விரித்து னுங்கள் உங்களுக்கு னுட்டுப் பட்டம் னுட்டுவோ மென்று-சாகான்வரத்துச் சான்றோர் களான சாணுர் னுமம் ஈனமாய்க் கூறி எடுத்துவிட்டுத் தெய்வங்களையும்தெய்வப் பதி னுமங்களையும் ஒவ்வொரு வருக்கும் வைத்து வைத்து - அதற்குக் கடை மகுடப்பட் டம் தருகிறோம் என்று கூறி வைத்தவைத்த தெய்வங் களை - னுடார் என்று காப்புகள் கட்டி ஆப்புகள் வைத் தார்கள் - இவ்வாருக இவர்கள் னம்மை னுடாது போய் விட்ட அப்பாவத்தினுலே ஆலயத்திலும் இவர்கள் னுடார் களாக ஆகி ஆயிவிட்ட அந்த னுளையிலே னிகழ்ந்து வந்த வரன்முறைகளும்-அதற்குமுன் னடந்த யுகங்கள் மூன்றினுடையதுடனே இக்கலியுக னீதி ஊழிப் பிரளை யத்தை னடத்தவரும் னேர்னெறிக் கூர்முறைச் செய லோனை முன்னரே அறியவைப்பான் வேண்டியும் -இதன்

மேல் ஆண்டவ ரென்னும் ளுமைத்தின் மீது ஏறி விளங் நுவதற்கு இப்போது பிரயாணக் கோலம் பூண்டாகி எம்மெதிரே இருக்கும் – னீ – அன்னுளிலங்கே அருளிச் செய்தபோது அங்கே உமக்குச் சான்ருேராக இருந்த அனைவரையும் பார்த்துக் கடைசி ஊழிப்பிரளைய னீதித் தீர்ப்பில் சான்ரு ரனைவருக்கும் சாவாவரம் வழங்க னிற்கின்றபடியினல் அதற்காக னீங்கள் போய்ப் பிறக் கப்போங்கள் - என்றபடியே வந்து பிறந்திருக்கும் பிள் ளைகளைக் கூட்டவந்துள்ள கலாமலிச் சரிதம் கூறிவரும் கலியுகத்திரட்டென்னும் சர்வாகமக் கிரந்தமாகிய சாணர் குலனுயக வேதமென விளங்கும் இதனை அவர்கள் இன்றும் அச்சனெறி விரதமாக இருந்து ஓதி னேன்பு கொண்டாடும் அவ்விதி மறைவழி வரிவடிவு ஓடிவருகின் றதாவது–

கேளும் யுகக்கோடி முடிவும் ஜகத் கோடி வாழ்வும் தகும் னீதிக்கோல் கைதாங்கி வந்து னிற்கின்ற மகனே

புத்திரன னீயெனக்குப்
பெரியதெய் வஉயிரில்
பிறந்து புவிமீதில்
பின்னல்ச்சென் றன்னுளில்
சிறந்த முகூர்த்தமதில்
சேர்த்தேன் உனையெடுத்து
உன்றனக்கு ஜீவபதி
உபதேசங் களுரைத்து
என் துயரம் மாற்றஇக
சோதனைக்க னுப்புகிறேன்

உன்துயரம் மாற்றி
யுகத்துயர மும்மாற்றி
என்துயரம் மாற்றி
ஈசர்துய ரம்மாற்றிக்
கலியை யறுத்துக்
கனபயங்க ளும்மறுத்து
னலிவில்லாத் தர்மபதி
ராச்சியமொன் றுண்டாக்கித்

தங்கத் திருமுடியும்
செங்கோலும் னைருளி
எத்திசை யும்மெய்க்க
ஏற்றமனு அன்போர்கள்
எட்டுத்தி சைபோற்ற
ஏற்றகுடை ஒன்றுதந்து
வீரசான் றோர்சூழ
வீரக்கொ டினிறுத்திச்

சீமைஜம் பத்தாறுன்
சொல்லொன்றுக் குள்ளாக்கிச்
செப்பொத்த மாணுக்கர்
சேவிக்க உன்றனக்குத்
தருவேனன் உன்னுடைய
தாயார்மீ தாணையதாய்
என்றய்யா னுதன்
எடுத்து மகற்குரைத்து

ஊனக் கிரகமது
    ஒன்பது பேர்களேயும்
அழித்து உன்னுக்குள்
    அருள்கொண் டிருக்குதுகாண்
முன்னூலின் சாஸ்திரங்கள்
    முறையெல்லாம் தப்பவைத்துப்
பின்னூற்பிர மாணமொன்றே
    போதிப்பொ ருவனிய்யாய்

இந்நப்படி யாயிங்கே
    னிச்சித்தி ருப்பதினல்
அந்நப்படி யுள்ளதெல்லாம்
    ஆகும்அந்நத் தேதியிலே
அதற்கு முன்னேனும்
    அமைப்பதெல் லாமமைத்துக்
கதுக்கெனவே பார்ப்போம்
    கலியைய ழிப்பதற்குக்

கலியனுட வலிமை
    காணுவா யென்மகனே
மேலாகா யத்தினிலே
    மிகப்பறந்து தான்திரிவான்
கலியன்பி றந்நபின்பு
    கட்டான வேதமொன்று
சலிவாகி யேவேதம்
    தான்விளங்ஙா வண்ணமுந்நான்

இளகாமற் கற்போல்
    இருந்நதுகாண் வேதமது
குழைவான வேதாவும்
    குறியாய் அதையறிந்நு
பல்லுயிர்கள் வாழும்
    பாரிலொரு பங்காய்னீ
மலையாய் வளர்ந்நுனீ
    வைகுந்நர் வருகையிலே

அலைபோலே னீஇளக்கி
    அவனிதனிற் பாய்ச்சவென்று
சபித்தார்காண் வேதா
    குவித்தலிபு லாம்மீமை
கலியூரி லுள்ளெவர்க்கும்
    கட்டாய மாய்மனதில்
மெய்பேச வேணுமென்று
    மேவி யிருந்நாலும்

பொய்பேச வேபுத்தி
    பொலியும் பொடுபொடென
எல்லாம் கலியைனீ
    ஈடழிக்க வேணுமையா
இல்லையே யானல்
    எங்களுக்கு இங்கேதான்
சென்றறி டங்களெல்லாம்
    சிறைபோ லிருக்குதையா

என்றுதான் தேவர்களும்
ஈசர்முதல் சொல்லிவிட்டு

வயதுமு திர்ந்நகலி
மாளவைக்க வேணுமையா

ஓர்மேனிச் சாதியாய்னீ
ஒக்க வரவழைத்து

னல்லோரைத் தானெழுப்பி
ஞலுவர முங்னொடுத்து

வானம்இ டிந்நிடவும்
மலைகள்பொடி யாகிடுனள்

கானகத்தில் உன்னுடு
கட்டிஇ ருந்நிடுவாய்

னித்திரா தேவியவள்
னித்தமந்நப் பூமியிலே

மத்திபமாய்க் கார்க்க
வையென்றூர் ஈஸ்பரரும்

தோசி மறலியையும்
சொல்லி விலக்கிடென்றூர்

அணுப்போலே மறவாதே
யான்வைத்த சட்டமதில்

மனுப்போலென் றிராதே
மனதெண்ண மாயிருனீ

பதறிஇரு என்மகனே
பம்மிஇரு கண்மணியே

பொறுதி மகனே
பெரியோரா யாகுவது
உறுதியுள்ள என்மகனே
உலகமதை யாளுவது
மகனேனுன் எத்தனையோ
மகாப்பெலங்கள் கற்றவர்யான்
யுகமீ திதுசொல்லத்
தொலையுமோ உத்தமனே

எவ்வெவ் யுகங்களுக்கும்
இப்படியே தர்மமில்லை
செவ்வுமகா விட்ணுவுதான்
என்றுசொல்லார் தேசமதில்
இப்போது என்மகனே
இக்கலியன் மாய்மாலம்
வங்கான அரண்மனையார்
வாருரே கலியழிக்கச்

செப்ப எளிதல்லவே
செயிக்கஏலா தாராலும்
இப்போவுன் னேடுரைத்த
இயல்விஞ்ஞைக் ககப்படுங்காண்
அப்பனே பம்மலிலே
அகப்படுமே இக்கலியும்

தந்ந வரங்கள் தவரூது
தருணம் சடையும் தரைமீது
என்றன் மீது மறவாதே
என்னுட் டருளும் இறையோனே
அந்நன் மீது மறவாதே
ஆயன் எனவே அறிவில்வைத்துச்
சிந்தை மகிழ்ந்து முறைநடந்தால்
சிவனும் உனக்குள் வசமாமே

தாயா ரோடே சிவமாது
சரசு பதியே பொன்மாது
னேயா மாதர் மடமாது
னிணில மறிய வந்துனது
பூசா பலன்கள் சொல்லிமிக
புலம்பித் திரிவார் துயர்திர
மாயா திருக்கும் மகனேயுன்
மனமே மகிழ்ந்து மகிழ்ந்திருவே

சொல்ல எளிதோ என்மகனே
சொல்லா தனேகந் நோன்றுமினி
வெல்ல எளிதோ என்மகனே
மேலோ ரார ராராலும்
கொல்ல எளிதோ உனைமகனே
கோரவங் கிரியன்கை யானும்
வெல்ல எளிதோ உனைமகனே
மேலாங் கண்ணே மிகவளராய்

இந்நப் படியே ஞரணரும்
இயம்ப மகவு ஏதுரைக்கும்
கந்த னுருவே என்தகப்பா
கடிதா யுனது படினடக்க
எந்நப் படியோ னுன்தமியேன்
ஏதோ அறியப் போறேனெனச்
சிந்நை மகிழ்ந்நு தகப்பனுட
திருத்தாள் பிடித்துச் செப்பலுற்றுர்

தன்னம் பெரிய
தாஷ்டீக வைகுந்நரும்
என்னசொல்வீர் என்றனக்கு
என்தகப்பா னீரெனவே

வணங்கிப் பதம்பூண்டு
மாதாவை யுந்தொழுது
இணங்கி இவர்கேட்க
ஏதுசொல்வார் ஞரணரும்

ஞரணு வைகுந்நா
னன்மகனே யெனனீ
வாரணமே னீவணங்கி
மகனேகை சோராதே

னீகை குவித்தால்
எனக்குமிகத் தாங்கரிது
தானீதன் ஆன
சர்வபரா என்மகனே

ஒருவருமே தாங்கரிது
உன்கை குவித்தாக்கால்
குருதெய்வம் நீயே
கோவே குலக்கொழுந்தே
பொன்னு மகனேனீ
பூராய மாய்க்கேளு
ஜாதி பதினெட்டும்
தலையாட்டிப் பேய்களையும்

வாரி மலைகளிலும்
வன்னியிலும் தள்ளிவிடு
வரத்தை மிகவேண்டி
வைத்துக்கொள் என்மகனே
செல்வம் பொருந்நிச்
சிறந்நுஇரு கண்மணியே
கொல்லென்ற பேச்சுக்
கூறுதே என்மகனே

ஒவ்வொன்றைப் பார்த்து
ஊனைவ் வொருசாபம்
செவ்வென்ற பேச்சுச்
செப்பிஇரு என்மகனே
விரைத்தமுள்ள வைகுந்நா
விற்பனவா னீகேளு
னீபோய் இருக்கின்ற
இடங்களிலே என்மகனே

னல்லோராய்ப் பெண்களை
ஞடிஎண்ணக் கூடாது
வல்லோராய் உன்னனந்நன்
வம்மிசத்தில் வந்திருந்நால்
அப்பெண்க ளுக்கெல்லாம்
அழகுகொடு என்மகனே
சட்டம்மற வாதேயப்பா
சாஸ்த்திரத்துக் குற்றவனே

பெண்பாவம் பாராதே
பேணியிரு என்மகனே
கண்பாரு கண்மணியே
கன்னி கணவர்கட்கு
இன்னமொரு சூத்திரம்
இயம்புகிறேன் கேள்மகனே
சாதிசாதி தோறும்
சக்கிலி பறைச்சிவரை

ஆதிச்சாதி முதலாய்
ஆராதனை காட்டுவிப்பேன்
காட்டுவிக்கும் சொரூபமதைக்
கண்டுஇரு என்மகனே
னீயொருவன் எனக்கு
னிலையென்று காணுமுன்னே
தாயில்லாப் பிள்ளையைப்போல்
தட்டழிந்தேன் என்மகனே

மகனே யுனைக்கண்டு
　　மனச்சடவெ லாந்நீர்ந்நேன்
தனியேபோய் வாவெனத்
　　தானனுப்பி வைப்பேனே
உன்கூட வேனுனும்
　　ஓடி வருவேனப்பா
சீமையது கண்காணச்
　　செல்லோங்ஙாண் உன்கூட

வாய்மைஒளிர் என்மகனே
　　வருவேன்உன் கண்ஙாண
மகனேனீ னடக்கவை
　　குந்நம்வை குந்நமென்
யுகமீரே ழுங்ஙாண
　　உரைத்துவிடு யாமமது
தாட்டிமையால் உன்வாக்கால்
　　தானுரைத்த யாமமெலாம்

னடத்திவைக்க னுன்வாறேன்
　　னைரணு உன்பிறகே
கண்ணரி லுருக்கானும்
　　கைக்குளொரு கிள்ளைவரும்
பகைவர் மடிவார்கள்
　　பைங்கிள்ளை அங்ஙாகும்
பகவான் சுழற்றும்
　　பாருலக மும்பழுக்கும்

தகையாதே முன்னடனீ
சந்நமுனி தன்கூட

அஞ்ஞூக் கொண்டு
ஆச்சாரம் செய்தோர்க்கு

வஞ்ஞக மில்லாத
வாழ்வுகொடு என்மகனே

ஊக்கம் உனதுடைய
உள்ளம் னினைத்தபடி

மிக்கவே னீனடத்தி
விரும்பிஇரு என்மகனே

எண்ணிறந்த கோடி
இயல்பாவம் செய்தோர்க்கு

னண்ணிய மோக்ஷம்
னவிலவென்ருல் உன்மனந்நான்

முக்கோடி தருமம்
உவந்நளித்த அன்போரைத்

தக்கோடி னரகமதில்த்
தள்ளஎன்ருல் உன்மனந்நான்

உனக்கேற்க னின்றவர்க்கு
உதவிகொடு என்மகனே

எனக்கேற்க னிற்பவரை
ரக்ஷிப்ப துன்மனந்நான்

சிவனும்னீ ஞதனும்னீ
திருமாலும் னீமகனே

தவமும்நீ வேதனும்நீ
சங்குமுதல் எங்கும்நீயே
மதங்களெல் லாம்நடத்த
வாக்குனக்கு என்மகனே
விதங்க ளறியாமல்
வீணுவார் வம்பரெல்லாம்
னில்லு னிணைவில்னீ
சரித்திரத்திற் கோர்மகனே

கேள்விகேளாப் பேர்களுக்குக்
கேடுவரும் தப்பாது
தந்நை ஞனுனக்குத்
தரளமணி உத்தரியம்
தந்நை துணியதிலே
காட்டாதே மறைத்துக்கொள்ளு
அப்போது ஆதியுடன்
அம்மகவு ஏதுரைக்கும்

கலியுகத்தை முடைத்துக்
கட்டான தர்மபதி
வலியுகத்தைக் காண்பதெப்போ
மாதாபி தாவேளன்ன
அப்போது ஆதியங்கே
அறைகிறேன் கேள்மகனே
அங்கங்கே ஞட்டிவைத்த
ஆணிவேர் அத்தனையும்

ஒக்க ஒருகுடைக்குள்
உன்கையில் வேருதந்நு

வடக்கு வெளிவாசல்
மலைமீது ஒருபுதுமை

உண்டாகும் என்மகனே
உனக்குவரும் னற்காலம்

தண்டா யுதத்தோடே
சத்தமொன்று தான்பிறக்கும்

மேலக்கால் மண்டபமும்
மேல்மூடி தான்கழறும்

காலத்தால் னீகாணும்
கண்ணுமணி உன்காலம்

தெட்சண மூலையிலே
தென்பாற் கடல்னேராய்

மெச்சுபதி மூலமன்று
விளக்கெரியக் கண்டிடுனீ

காலம் இதுமகனே
கன்னிதிருத் தென்றிசையில்

கோபுரமும் மண்டபமும்
கொடிமரமும் வீதிகளும்

தாபரமாய் விளங்கித்
தலங்கள் மிகத்துலங்கிக்

கண்டதுவே உன்காலம்
கானகம் குடிபோவாய்

அடக்கு ஒடுக்கௌல்லாம்
அன்றுனக்கு ஞன்தருவேன்
காலம் இதுமகனே
கண்மணியே கேட்டிருனீ
தூலம் உரைக்காதே
துலங்குனுள் ஆகுமட்டும்
மலேயின் அடிவாரம்
வளரும் ஒருவிருட்சம்

அலேயதிலும் பெரிதாய்
அதுதழையும் கண்டிடுனீ
சிலேயதுவாய்த் தோன்றிச்
சிவதோத் திரமாக
னிலேயொன்ருய் ஆகி
னீயிருப்பாய் உன்காலம்
தங்கனவ ரத்தினங்கள்
சமுத்திரத்தி லேகாணும்

யாஊையொரு கன்றீனும்
அதனுல் உலகமெலாம்
தானுக வேவாழும்
தலேவனும்னீ அல்லாது
ஞரியர்கள் கூட்டம்
ஞட்டில்கோ டேறிவரும்
ஒருகுடைக்குள் ஆளவரும்
உன்காலம் என்மகனே

சாதிசாதி களெங்கும்
சண்டைஎழும் அன்னளில்
னேருவுக்குக் காலம்
னிகழ்ந்திருக்கும் பார்மீதில்
சாதியொரு னிரப்பாய்னீ
தான்செய்வாய் என்மகனே
கோடுபல வாதுகளும்
கோள்னீசப் பாவிகட்குக்

கேடு வருங்காலம்
கிருஷ்ணஉன் னற்காலம்
வாரிமூன்று கோதி
வளைந்திருக்கும் ஓர்தீவை
சோதி ஒருனிரப்பாய்த்
தொடர்ந்நாள்வா யுன்காலம்
வான மதுவெள்ளி
மாறிவெறு வானமதாய்
வெண்முகில் அற்றுப்போய்
வெறுவான மாய்த்தோன்றும்
னல்லமக னேயுனக்கு
னற்காலம் என்மகனே
சொல்லத் தொலையாது
குலமகனே உன்கணக்கு
ஒக்க அடக்கிவைத்து
உறைந்திருக்கு துன்னிடத்தில்

னீக்க னிலேக்கவெலாம்
னினேத்தபடி அங்காகும்
வந்நார் அறிவார்கள்
வாராதார் னீருவார்
தன்னுலே சாதியெலாம்
சண்டையிட்டுக் கொண்டழிவார்
இதன்மேல்மக னேயுனக்கு
ஏகவியா ழம்வருது

பூலோகம் உள்ளளவும்
பொய்யருகி மெய்வாழ
சிந்நைதெளி என்மகனே
சென்னுள துன்காலம்
பொன்னுலே பூணூலும்
தங்கனிறச் சாலுவையும்
னுன்தந்நு வைப்பேனப்பா
னுரணு என்மகனே

கையிலாச் சுதுமகனே
கலினீச னேயறுக்க
மெய்வாய்த்தது னம்முடைய
மேன்மைக் குலத்தோர்க்கு
அன்பான சீமையது
அரசாள னுளாச்சு
தன்பாலே வந்நடையச்
சரியாச்சு தென்மகனே

மலங்காதே போஇருனீ
வாழுகின்ற னற்பதியில்
கலங்காதே போஇருனீ
கண்ணே திருமகனே.

இவ்வாருக வருங்கால விளேவேறு தீர்க்கதெரிசனே யின் னெறிமுறைப் பிரவாக வளம் விளங்கும் ஜீவ சிம்மாசனமேறு அருளமுதப் பாலிப்பினுலே தங்கள் குமாரராகிய எங்கள் ஞயகமவர்களுக்கு முன்பிருந்த தாபமுகமானது மாறி - தங்களின் அகத்தினிடத்தே விளேந்திரானின்ற சாங்கிசச் சந்திரோதய எழில் வனப்பானது விசிறிப் பரிந்து வெளிக் கிளம்பி உதயம் செய்தன -

அங்ஙனம் எதிரில் விளங்கானிற்கும் காருண்ய விம்பமாகிய பிரானவர்களின் சீர்பாதக்கமலம் சிரஞ்ஞேர்த்துத் தொழுதெழுந்து விடையருளி வாங்கப்பெற்ற ஞயகமவர்கள் அங்ஙனம் வாசஞ்ஜெய்து தவமுடித் தெழுந்திருந்த குகையினிடத்துத் தவத்தினருக்கென்று சூரியனுடைய வெய்ய கிரணக் கரங்களுக்கு எட்டப்படாத ஜலஞ்ஞுரந்த சுனேயொன்று மறைத்து வைத்திருக்கும் தவ ஆசனுலயத்தே-

தெய்வத் தந்நையரவர்களினுடைய தூலத்தை விட்டு அகன்றிருப்பதானது - எழிலாகிய தோகை உதிர்ந்த மயிலினம் போலும் -பாற்குடி மாருத பச்சிளங் கன்ருனது முலேக்காம்பின் ருசி பிரிந்தன போலும் - அக்

குகையினை விட்டுக் கிளம்பிவந்து வெளியேறிய னுயகம வர்களின் இதையமானது உதய திசையை னேக்கி னின்றது – அப்போது சூரியனனவன் தமது ஆயிரங்கி ரணக் கரங்களினலே வையமும் வானும் னிறைந்த இரு ளனைத்தையும் எடுத்தெடுத்து உண்டுவிட்டுப் பிரகாசம் கொப்பளிக்கத் தம்முடைய ஒளி எரியும் கிரணக் கரத்தி னலே ஆகாயமுகடெலாந் நடவிக் கீழ்த்திசைக் குணக் கடலினுடைய வயிற்றினைப் பீறிக்கொண்டெழும்பி உத யம் செய்தான் –

இவ்வாறு அங்ஙனம் குகையினுள் னின்ற –

சம்பூரண ஞான சம்பன்ன சம்பந்நர்
சாலோக சாமீப சாரூப சாயுச்சியச்
சித்திரச் சிகர சிவபதச் சிலாகையைச்
சீரூரைச் சீதனச் சீதளச் சீரடி
சுந்நர சுத்தச் சுலோகச் சுருதியைச்
சூதரு சூக்குமச் சூலெனும் சூபியைச்
செங்கதிர்ச் சிவபத செம்மல்ச் செருக்கைச்
சேதமில் சேரிச் சேகரச் சேவனை
சைவ சைதன்ய சைவரூர்ச் சையதைச்
சொர்க்கச் சொலிப்பின் சொந்நச் சொரூபியைச்
சோடசச் சோதிடச் சோபனச் சோங்கைச்
சௌமிய சவுந்நர சௌபதச் சவுக்கெனும்
இச்சகம் உய்விப்பான் வேண்டி வந்த –

எங்கள் அனந்நர்குலப் பிறப்புரிமைத் திருப் பாட்ட னராகிய பனிமலையரசு தனிகைவள்ளல்ப் பிரானவர்கள்

எங்கள்மீது வைத்திருந்த அன்பெனும் கருணையெலாந் திரட்டி ஓருருவாகப் பிடித்து எங்களுக்கு ஞான பிதாவாகத் தங்களின் தவக்குமாரரைத் தந்தருளியதன்றியும் இந்தத் தெய்வீகச் சபையின் வேதவேதாந்தக் கடலில் வாய்மடுத்துப் புத்துயிர்பெற்று விணருக்கு எட்டாத ஜீவேச னித்திய வாழ்க்கையில் அடியார்களாகப் புகுத்தாட்டும்படிக்கு அனுப்பிவைத்தனர் போன்றும் எங்களைத் தலைமுறை தலைமுறைகளாகப் பிடித் தலைத்துக் கொண்டுவரும் அறிவறியாத் தரித்திரியம் அடியோடே வேரறுப்பான் வேண்டியே பெருநிதித் திரவியம் ஒன்பது வகை ரத்னநிதிகளும் அடக்கப்பெற்றுள்ள பெரிய பெட்டகம் ஒன்று அனுப்பி வைத்தனர் போன்றும் -

இவ்வண்ணம் அனுப்பி விட்டிரானின்ற முழுமுனிப் பழம் பாட்டனாராகிய திலகபிரானவர்களின் குமாரராகிய எங்கள் குலதெய்வமாக வர எழும்பி னிற்கும் நாயகமவர்களுக்கு இருப்பிடந்தந்து தவத்தினைத் தாங்கினின்ற வலிமையும்- அங்கு வருபவர்களுக்கென்று வைத்திருக்கும் அழகிய சுனையும் - பெரும் பெரும் கற்களைக் கொண்டு இணைக்கப்பெற்று உயர்ந்து சூழ்ந்திருக்கும் எவ்வன மதிலும் - அதில் வெண்சுதை தீட்டப்பெற்று விளங்கா னிற்கும் திருப்பரங்குன்றாகிய ஆசனாலயத்தினை விடுத்து ஆக்ஞையின்படியே தங்களை ஏற்றப்பெற்றுள்ள ஜீவ சிம்மாசன பருவத்திலேறி விளங்கி வருகின்ற பெருங் கருணை னெறினீதி அருள்மாரி வருமாறே -

(சன்னதம் பெறு பருவம் னிறைவேறியது)

ஜீவசிம்மாசனப் பருவம்

வருவ துதேவ தேவர்கோன் மற்றெல்லாம்
ஒருவ ராயுகத் தீர்ப்புக்கென் றேதினோர்
அருள்வி ரிக்கத்தென் னாட்டிலெ ழுந்தனள்
வருவ ஜீவசிம் மாசனப் பருவமே

இவ்வாறாகிய ஆதிசபேசிய அர்ரகசியக் கார்மானப்பாட்டு முதற்காலத் துவக்க வேளையிலே வேதாவினால் கடைக் கலியுகத்தின் னீதி னடுத்தீர்ப்புத் தீர்வைக்குத் தென்பூமியில் உடலெடுத்து வைப்பேற்றுவிக்கும் பெரும் பாரப் பொறுப்பாகிய அரும்பாரச் செயலை - தாமொருவரே னெடுனாளும் சுமந்துவந்த அதனை - மாற்றிவைத்து ஆக்கிவிட்டுப் பளுப்பாரம் மாறிய மகிழ்ச்சித் தலையராய் வெற்றிவினைவு வேரூன்றி அங்கே இருக்கின்ற னெடுங் காலச் செம்மலாகிய எங்கள் கோட்டங்கள் னீக்கி வாட்டந் நவிர்க்கவந்த எங்களுடைய பாட்டனாரவர்களிடம் விடைபெற்றுத் தங்கள் தவப்புலியை வாலுருவி விட்டன போன் விடுபெற்றுவரும் சிவந்த புதுமேனித் தளிர் வனப்புப் பரகதி தேகத்துறை யுணர்ச்சி மதிமாமணத்து இளஞ்செம்மலாகிய எங்கள் னாயகமவர்கள் திருப்பரங் குன்றினைவிட்டு மேற்குப் பாகமாக அடிவாரங் கடந்து சதுர் யுகங்களும் கண்ட பழைய காலத்துப் பதியாகிய மதுரைமா னகரம் செல்லும் பெரும் பாதையின் வழியே கூடி கண்பார்வைக்கு மறைகின்ற னெடுந்தூரம் வருகின்ற பரியந்தமும் தாங்கள் தவவாசம் செய்திருந்து

வந்த ஆசனலயக் கல்வத்தினையும் அதனிடத்தே தங்க ளுடைய தந்தை தெய்வ விம்பமாகிய தனிகைமணி யைத் தனியே விட்டுவிட்டு வருவதையும் எண்ணித் திரும்பித் திரும்பிப் பார்த்த வண்ணமாக வந்து - பார் வைக்கு எட்டப்படாது மறைந்து காணப்பட ஆரம்பித் ததும் தங்களுடைய உடலில் உள்ள சதையை வலுக் கொண்டு பிய்த்தெடுத்துக்கொண்டு வேங்கைகள் அடர்ந்த காட்டில் தனியே போவென்று விரட்டி விட்ட வர்களைப் போலே – ஞம் எங்கே எவ்விடம் எந்தச் சீமை யிலே எவ்வூருக்குப் போய்ப்புகுவது என்றறியாது யா தொரு வைப்பு னிலைப்புமின்றித் தங்களுக்கான னேச அறிமுகம் ஏதும் இல்லாத தனித்த அனாதியாய் – மேலும் யாரெவரென்று கேட்க ஞதியற்ற அவாந்தரையாய்ச் சென்றுகொண்டிருக்கும் பெரும்பாதையில் – எதிரே சேக ரஞ் ஞேகரங்களாகக் கூடி மகிழ்ந்து பேசிப் பாடியாடிக் கொண்டு செல்லும் கூட்டங்களின் இடையே னுழைந்து விலகிக்கொண்டுவரும் குருமார்களரசு எங்கள் ஞான செம்மேரு ஞயகமவர்கள் – ஆழிய கடலிலோடும் கப்ப லானது கவிழ்ந்துவிட அதிலே ஒருவர்மட்டும் உயிர்தப்பி அகண்ட அபாயம் னிறைந்த அவ்ஆழிய கடலிலே திசை பாதை கரை கப்பலொன்றும் தட்டுப்படாமல் தப்ப இடமுமின்றி வேறொருவர் துணையில்லாமல் அங்கே தனியே னீந்திக் கொண்டிருக்கின்றவர்கள் போன்று வழி னடந்துவரும் எங்கள் ஞயகமவர்கள்-ஜீவசிம்மாசன தவச் செழிப்பேற்றத்தின் கனமானது விறி இழுத்துக்

கொண்டுவரும் தங்கள் வலுக்கொண்ட கிரணேதயக் கூர்மலித் திடக்கார்ப்பு ஓர்மை ஊனுதலினுலே பேருறுதி வரம் பெற்றிரானின்ற சன்னதத் திருக்கங்கணக் காப்பாகிய தங்கள் மெய்யை - எங்கே எவ்வெல்லே எவ்வூரிலே எச்சாதி எக்குலத்தே இதற்கென்று பிறந்து தலை நிமிர்ந்து இதயம் பொலிவேற்றம் ஏறிவர இருக்கும் மனுக்கோலம் கண்டெடுத்து உழவு வினைவேற்றுத லென்னும் அறஞ்செயல் விரிப்பை னடத்துவது எங்கெங்கே எப்படியாக னடக்க இருக்கின்றனவோ என்று இடையருது உளம்னிறைந்து கிளர்ந்து ஆய்ந்து வரும் பேரிளம் தனிச்சிந்தைநயினிடத்தே எண்ணி எண்ணி-அங்கே பார்த்த முகங்களெல்லாம் வேற்றுமுகமாகக் காணுவதைக் கண்டு தாங்கள் பிரானவர்களைச் சந்திக்கும் முன்பு இருந்து வாழ்ந்த தங்கள் ஜெனன பூமியில் அறிமுகமானவர்களை னினைவுறும்போது - அங்கெலாம் அழிஅவாவின் முதிர்வினைவால் பவச்செழிப்பினை உகந்து னும் அதற்கே அடிமைகளென்று புகுந்து திரிந்துகொண்டிருக்கின்ற அவர்கள் - னும் இப்போது புகுந்துகொண்டிருக்கின்ற சுத்தாவிக்குண னீண்டசிகைச் சடாமகுட கோலத்தை - அவர்கள் முன்னே பார்த்த கண்ணைக்கொண்டு இப்போது னேக்கில் - னும் அவர்களோடு பேசுகின்ற சிறிது னேரமட்டே சூழ்ந்து கூடிக்கொண்டு வேடிக்கை பார்க்கின்றவர்களைப்போல் உகப்பார்களே யல்லாது கவனித்து னிலைத்துனின்று னற்பயனடைய னீடு னில்லார்கள் - மேலும் எல்லாம்

இழந்துபோய்விட்ட ஏழையெனக் கருதி ஏளனம் பண்ணத்துணியும் கலியன் கலிச்சி னினைவரிடம் இந்ந - தவச் செழிப்பேற்ற புராதன மெய்யை எவ்வாறு செலுத்தினும் உள்ளத்துப் புகுத்த ஏருதென னினைந்நு-தாம் பிறந்ந ஊரைச் சிந்நையினின்றும் ஒதுக்கிவிட்டு னடந்நு மதுரைமானகரம் வந்நு சேர்ந்நார்கள் -

விருத்தம்

அத்த னும்ஆன்ம கோடிக்க னுகூலன்
உத்த மயுகம் ஒன்றுஉண் டாக்கவே
ஒத்தை யாய்மது ராபுரி யுற்றங்கண்
சுத்த மெய்வழி ஆரம்பச் செஞ்ஞொலே

இவ்வாருக ஆலவாய் னகரமென்னும் மதுரையம் பதி வந்நு அங்ஙே சிறிதுனாள் தங்ஙிய னுயகமவர்கள் - கோவில் ஆலயங்ஙளிலும் கடைவீதி ரோடு பாதை சத்திரம் மடங்ஙளிலும் ஜனக்கூட்டங்ஙள் எங்ஙும் னிறைந்நு வழிந்நுகொண் டிருப்பதையும் – அதில் படித்தவர்கள் என்று எழும்பி மக்கள் கேட்கும்படியாய் அதிகமான பிரசங்ஙங்ஙள் விரித்துப் புத்திகூறிக்கொண் டிருப்பதையும்- அதனை விருப்பமாகக் கூட்டங்ஙள் கேட்டு அவர்கள் னிஜமாகவே சிவா சிவா யென்றுபோடும் அன்பின் குறியாகிய சத்தங்ஙளையும் - பள்ளிவாசல் ஹதீஸ் தலங்ஙளில் மெய்யாக சுபஹானல்லாவென்று கிளம்பும் உகப்புடைய தொனியையும் - இன்னும் பல பலவாருகக் கேட்பதுடனே வேறு பற்பல கூட்டங்ஙளிடையே ஆரவாரித்துக்கொண்டு கையைப் படபடவென்று தட்டு

கின்ற ஓசையையும் - பல பல இடங்களிலும் பார்த்துக் கேட்ட எங்கள் ஞயகமவர்கள் எண்ணியதாவது -

அதாவது தங்களுடைய மறுஜெனனப் புனர் ஜன்மப் பிறவியினுக்குக் காரணமாகிய தலைனுளினுக்கு ஆதி தலைனாகிய காசுக்காரம்பாளையத்தி லங்கே பிரா ணவர்களைச் சந்தித்து ஆரம்பச் சம்பாஷணை னடந்த முதற்கூறு வாய்மை கேட்ட அந்நனுளையிலே - முன்னர் னெடுக னூலறிவுகொண்டு பேசி அறியாமலே அபிப்பி ராயங்கள் மூடமொரட்டுத்தனமாக விரிக்கும் பேயாண்டி யர்களுடைய - செயலுக்கு எக்காலமும் வராத இருளுரை களைக் கேட்டுக்கேட்டு - வேறே புகலிடமின்றி அதனையே மெய்ம்மை ஞானமெனக்கருதிப் பற்றிக்கொண்டு உறுதி பூண்டிருந்த தாங்கள் — வித்தியாதத்துவம் - அது உன் னுள் எங்கே — என்னும் கேள்வி ரூபமான செயலறிவுரை யானது முதலில் தோன்றி எழும்பி செவியில் புகுந்த மாத்திரத்திலேயே இது மெய்யான செயல்பழுத்து உல வும் னிஜவழிபாட்டின் அறிவுத்தீர்ப்புவாய்மை யெனச் சிந்தையில் பாய்ந்து இனியில்லா ஊனுதல் வலுவுற்ற வர்களாய் உயிர்னீத்த உடலிற்கு உயிர்வந்து புகுந்தது போன்று எண்ணி - இதோ னிஜமான ஜீவபாட்டை இருக்கிற வாய்மை துலங்குவதுடனே ஞானவாழ்வுக் குடைய தூலமலை விம்ப மிருக்கிறதென்று அதுனேரமே பற்றிக்கூடினேமே - அது போலவே இங்கே இவர்க ளெல்லோரும் பிள்ளையில்லாதவர் பீச்சிலையை முகந்தாப் போலென்னும் சுலோகத்தைப் போன்றிருக்கின்றுர்கள் - ஆதலால் இவர்கள் னம்முடைய கையில் மெய்யாக

மெய்யாகவே விளங்கும் கைபாணச் செயலாகிய- தீர்ப்பு
னிஜஞான வாக்கியத்தைக் கேட்டமாத்திரத்திலேயே கூட்
டங்கூட்டங்களாக வந்நுசாய்ந்து னமது ஜீவேச வாழ்
வாகிய சிரஞ்ஜீவி மெய்யைப் பெறப்போகிறுர்கள் என்ற
பேராசை யுற்றவர்களாய் எண்ணி எண்ணி உருப்
போட்டுக்கொண்டு முதல் முதலாக மேலக்கோபுரத்தின்
உள்ப்புறம் மேலாடிவீதியின் தென்பாக மகிழமரத்தடி
னிழலினிடத்தே அங்ஙே கூடியிருந்நவர்களை னோக்கி -

இவ்வுலக மண்பரப்பிலே எண்ணில்கோடிகோடி
களாகிய ஜீவராசிகளுக்கெல்லாம் இல்லாத மனுசதள
கோலமெடுத்துவந்நு னிறைந்நிருக்கும் ஜீவான்ம கோடி
களுக்குமட்டும் அறுசுவையும் அதன் உணர்ச்சிவிருப்
பமும் தூலவித்தினிலே கலவிப்படைத்து-பரமான்மாவும்
ஜீவான்மாவும் உகப்பு னடப்பினுக்கு உள்ளூற உற்ப
வித் தெழும்படிச் செய்வித்து- அதனில் அதிவிருப்பம் ஒவ்
வொருவருக்கும் உண்டுபண்ணிவைத்து - அவ்விருப்பம்
னிறைவேறுதற்பொருட்டாய்ப் பார்வையில் சிந்நித்துக்
கையில் கிடைக்கும்படிக்கு வெளித்தோற்றமாக விரிக்கப்
பெற்றுள்ள அண்டத்திலும் மகாப் பெருக்கமாக னுணுகி
னுணுகி அனந்நம் பலசுவை உற்பத்திக் கோடிகள்
னிறைத்து அதற்குத் தகுந்ந பாடின்றி எளிதில் பெறச்
செய்து வைத்திருப்பதானது எதற்காகவென்ற வினுப்
பிரச்னையை விபரம் பிறங்க விளக்கப்படுத்தி எடுத்
துக் கிளப்பிவிட்டுக்கொண்டு - அதற்கு அத்துடனே
இச்சை ஏறிவருவதற்காக - அறுசுவை போய் அடங்கு
கின்ற மறைவிடத்தைக் கண்டவர்களெல்லாம் மாருத

புகழுடம்பு பெற்ற மாதவச் சிவராஜர்கள் என்று அவர்கள் எல்லோரும் ஆம் என்று சம்மதிக்கும்படி வேத வேதாந்த சாட்சி நிரூபணையுடனே பேசி ஆசை உண்டாகும்படித் தூண்டிவிட்டுக்கொண்டு – மேலே கூறிய அதற்கு விடையாக ஒவ்வொரு சுவையாகத் தனித் தனியே பிரித்து இன்னின்ன சுவைக்கு இன்னின்ன அறிவுகளென்று பொருத்தங்காட்டிப் பேசி–இவ்வண்ணமாக மனிதனுடைய தூலத்திலே ஒவ்வொன்றும் இருந்து ஆட்சிபுரிய பஞ்சபூதங்கள் வர்ணத்துடனே தம் சொற்படிக்கு உட்படுத்தி அமல் நடத்திக்கொண்டு வருகிற அதியற்புத விதங்களும் - இதனைத்தான் ஒவ்வொரு மனிதனனவனும் தன் தூலத்தினுள்ளே இவை ஒவ்வொன்றும் இருக்கும் இருப்பிடம் கண்டு - இப் பிரம்ம வித்தையினை அறிந்து கூறுவதற்கு ஒரு தேவகுரு மூர்த்தமில்லாது காணமுடியாததா யிருக்கிறதென்று சம்மதிக்கும்படிச் சாட்சி சமாதானத்துடனே திடங்கூறி விட்டு - மேலும் மரணகாலத்தினுடைய அச்சப்பாட்டைத் தூண்டிவிட்டு – அம் மேலாம் பதத்தை அடையச்செய்து அவ் வறுசுவையின் கூட்டுறவு சந்நிப்பின் எல்லையிலே செவிச்சுவை உணவுபோய்ச் சேகரமாகிக்கலந்து மரண அச்சம் கிளம்பிஅடைய நினைவு பேதக பராக்கற்ற ஓர்மையினாலே – ஈசனென்னும் ஆசானின் அன்புபிறங்கப் பாத்திரவானாகி ஜீவன் முத்திதசை அடைகிற யோக்கிய ராகிறார்களென்றும்– அதிலும் இன்ன இன்ன சத்துக்கள் அதிகம் குறைவு உள்ள நிலங்களில் உணவு

சுவைகளின் பேத போஷிப்பினுலே இன்னின்ன மாதிரியான குணங்கள் பேதப்பெற் றெழுந்து அறிவு இன்ன இன்னபடி முன்னுண்டாகுவது பின்னும் பின்னே உண்டாகுவது முன்னும் இவ்வாறு உண்டாகுவதினுலே ஞானத்திற்குப் பதிலாக எளிதில் குபாடத்தைப் பெற ஏறிவரும் விபரங்ஙளும் - மேலும் உலகத்தினிடத்தே ஆலயம் தெய்வம் ஆசனம் மந்திரங்ஙளென்று வகுத்து விளங்ஙவைத்திருக்கும் சிர்ஞெறியானது-அளவுகுறியின் படியே மனிதனுடைய உள்அரங்ஙம் அறிந்து- அனுபவ விளக்க காலத்திலே மெய்யாகப் பிரசன்னந்நரும் தேவ ஆலயமாக அமைக்கப்பெற் றிருக்கிறதென்று ஞமே சந்நேகமற னிரூபிப்போம் என்று னிங்ஙள் னிஊேத்துக்கொண்டாலும் அதற்கும் ஞன் சம்மதிப்பேனென்று மிக்குறப் பொருத்தம் உதாரத்துடனே எடுத்துக்காட்டி - அதற்கு மனிதனுனவன் எப்படியும் மதிவழிப்பாதை பற்றி மோட்ச சாம்ராஜ்ய முத்திவிடாளுவதற்கு ஓர் ஆசான் என்னும் தேவமெய்ப்பர னின்றி வேறே யாவற்றிராளும் எக்காலம் எம்முயற்சி மெய்ப்பாட்டினுலேனும் கண்டு விளங்ஙமுடியாது என்றும் – இவ்வாறு விளங்ஙமுடியாததாகிய முக்கோண அறுகோணச் சக்கரங்ஙளென்றும் ஞப்பத்துமுக்கோண எண்கோணச் சக்கரங்ஙளென்றும் எடுத்து வைக்கப்பெற்றிருக்கிற தஊேத்தையும் எப்படியும் மனிதனுனவன் ஒரு மெய்ப்பரஊேத் தேடி அவர்களிடம் அண்டி ஒழுக்கம் னிறைந்த பேரன்பு வழிபாட்டில் னின்று பெற்று விழிப்புலக வாழ்வை

அடைந்தே ஆகவேண்டு மென்றும் - அதை ஒருவன் வெறும் ஏட்டுப் படிப்பினைக்கொண்டு தாமே ஆய்ந்து கெளைத்து வெளித்தோற்றமான வெளிரங்கமாகச் செய்யும் செயலைக்கொண்டு விடடைந்நிடலாம் என எண்ணிப் படும்பாட்டினரெல்லாம் சிறுபிள்ளைகள் தெருவீதியிலே விளையாட்டுக்கு வீடுகட்டும் அதிலேயே குடியிருந்து வாழலாமென்று ஒருவன் னினைவன போலும் என்றும் - வாங்கிவந்து வீட்டில் வைத்திருக்கும் பொம்மையைக் குடும்பவாழ்வினுக்கு விவாகம் பண்ணிக்கொள்ளலா மென்று னினைவன போன்றுமா யிருக்குமென்றும் உவமானத்துடனே சாங்கோப சங்கமாகப் பேசிக் கொண்டுவந்து கடோசியாக ஓர் மெய்யான அருட்குருபிரானைப் பெருதவர்க ளெல்லாமே அவன் வாணுள் பரியந்நமும் னன்மையென்று ஆவியாவி னுணுகி னுணுகிச் செய்துவந்ந தவமுதலாகிய தானதர்மங்களனைத்தும் னிச்சயமான பாவகரச்செயலே ஆகுமெனக் கூறி னம் அனைவரையும் கடவுள் அப்படிக்கு விட்டிடாமல் இருளற்ற வாய்மைதுலங்கும் ஓர் மெய்க்குருபரனிடத்தே ஒப்புவித்து னம்மை ஆள்வாராக என்று கூறி முடித்து விட்டு அங்குள்ள அனைவரையும் கூர்ந்து பார்த்தார்கள் -

இவ்வாருக அங்கே வந்துகூடிக் கேட்டுக்கொண்டிருந்ந பள்ளிக்கூடத்து வாத்திமார்களும் வைதீகர்களும் தமிழ்ச்சங்க வித்துவான்களும் சில பிரசங்கிகளும் சில வணிகர்களும் குருக்கள்மார்களும் சில யோகசாதனைக்

காரரும் மற்றும் எங்கள் ஞயகமவர்கள் தனியே கிளம்பி வந்து முதல்முதலாக ஆரம்பகாலப் பிரசங்கம் செய்யும் மகிழவிருட்ச னிழலிலே வந்நுகூடிக் கேட்டுக்கொண் டிருந்ந அனைவரும் –

புதுமை பூத்தவர்களைப் போலத் தலையை ஆட்டிக் கொண்டிருந்து னெடுனேரம்வரை இருந்நுவிட்டுச் சிலர் பேசாமல் எழுந்து போனவர்களும் – சிலர் இன்று னல்ல காலச்சேபம் என்று கூறிப்போனவர்களும் – புண்ணியவசனம் இன்று காதில் கேட்டோம் என்று பேசிக்கொண்டுபோன கோல்ஊன்று வயோதிகர்களும் இவர் னல்லாப் பேசுகிறுர் அய்யா சாட்டை அடித்ததுப் போல் என்று கூறிக்கொண்டு போனவர்களும் – இவ்வாறே பலரும் பலவாருகப் பேசிக்கொண்டு எழுந்து போய்விட்டார்களே தவிர ஒருவருக்காவது உணர்ச்சியில்ப்பட்டு இது தங்களுக்கு வேண்டுமென்று னினை வேறி னின்று கேட்காததோடின்றி அவர்கள் முகத்திலே அடையாளங்கூட தோன்ருததுகண்ட ஞயகமவர்கள் ஏமாற்றமுற்றவர்களாய் வியப்புற்ருர்களெனினும் – தங்கள் சோராதசித்தத்தினுலே அங்கே ஆஜிமார்த் தெருப் பள்ளியிலும் வலைவீசித்தெப்பக்குளம் முதலான பற்பல இடங்களிலும் பேசிப் பிரசங்கித்துச் சிறிது ளிருந்து பார்த்துவிட்டுச் செவிடர்கள் காதிலே சங்கோசை னுழைய வைப்பது போலிருக்கிறதென எண்ணியவர்களாய் –

இவை பெரிய பட்டணமாய் ஆடம்பர உல்லாச னடக்கையும் னகரீக வெளிமினுக்குப்பாடும் அதிகமாக

மலிவு விளைவுற்றிருப்பதினலே ஒன்றை ஒன்று பற்றிச் சதா பழக்கவழக்கம் அதிலே ஆழ்ந்துகிடக்கும் இவர்கள் ஆனதினலே னிசமான ஞானவாழ்வில் லட்சிய உணர் வற்றிருக்கிருர்கள் – ஆகையால் இதைவிட்டு அப்பாலே இருக்கும் ஊர்களுக்குச் சென்ருல் அங்கெல்லாம் இவ் வாடம்பர வாழ்வற்றவர்களாய் இருப்பார்கள் – அவர்க ளெல்லாம் கேட்டபடியே அடைவதற்கு ஆசையுறுவார்க ளென ஆலோசித்த சிந்தையராய் அம்மதுரையம்பதியில் சிறிதுனளே தங்கிவிட்டு அன்னகர்விட்டு னீங்கி மதிய னேரமாக எழுந்து அன்றிராவிலே ஞவினிப்பட்டியிலே வந்து தங்கி –

மறுனட் காலே னேரமேகிளம்பித் தனியே ஒருவ ராய் வழினடந்து கலேபிரிந்த மான்போலே எங்கெங்கே சென்று என்னென்ன காணப்போகிருேமோ என்னும் ஆய்மதி இளஞ்சிந்தையராய் மேலூர் செல்லும் பெரும் பாதை பிடித்துவந்து கீழூருங்கடந்து சிவகெங்கை னட்டின் வால்மீக புராதன ரிஷியவர்களின் சமாதித்தல மாகிய சால்மல் என்னும் குளத்தின் அடையாளம் பாரதபூமிபுகழ் னரதமகாமுனிவ ரவர்களினுடைய கல்க் கிப் புராணம் எடுத்துக்கூறிவரும் சீதளிப்பொய்கை வளனடென்னும் திருப்புத்தூர் வந்து சேர்ந்நார்கள் –

வந்நதோர் அந்நக் காலம்
மறைமுதல் னிசக்க விஞ்ஞை
சொந்நம தாக்கிச் சுத்த
சமரசந் நனிலே யேற்றும்

மந்திரச் சிந்தை வாக்கான்
மனுக்களை வாரிச் சேர்க்கச்
செந்தமிழ் வலைகை கொண்டு
திருப்புத்தூர் வந்த ரம்ம

வந்தெங்கள் தேவ ராஜ
மனுமகன் வடிவு தாங்கி
மந்திரச் சிவ சிம்மா
சனமதில் வயங்கும் னந்தி
எந்திர மலைபோல் னின்று
எங்களைத் தேடி னுளும்
சிந்துமா னெடுங்கூந் நண்ணல்
திருப்புத்தூர் வந்த ரம்ம

ஆரம்பப் பிரச்சாரப் படலம்

வாங்கு றும்பெரும் பாரவ ரங்கொடு
னீங்கு ருன்பெரு னீதினி லத்திலே
பாங்கு றயுகம் மாற்றிப்ப திக்கவே
ஓங்குறு மாரம் பப்பிரச் சாரமே

பன்ன காலங்கள் பார்த்தபெ ரியதாய்
மன்னு கோலவ டிவுவ யங்கவே
வின்ன வெங்கலி மாற்றிவி டிவுற
சென்னெ றியாரம் பப்பிரச் சாரமே

இவ்வாருகப் பழம்புராதன முன்ளுதிகாலந் நுவங்கி வேதாவின் ஊழிவிதி விதித்திருந்நுவரும் எழுதாத மறையின் அழியாத மவுன ரகராக ஓங்கார வரிவாடைவீசும் குறிகோடுபடியே – மனுக்கோடி சதளங்களின் வாழ்வினுக்கான னெறினீதி மறையின் னிறைதீர்க்க தரிசனம் கூறிவரானின்ற தடம்பாடு பற்றி ஜீவாவி விதிக் கோடோடி வரும் மதிபாதை வழியே கூராருமற்ற னேரான னுட்டுப் பேரான பெம்மான் அருட்பேருமாரு திருப்பேரு ளுதரவர்கள் திருப்புத்தூர் வந்து சேர்ந்து எங்களெல்லோரையும் அழைத்து மறுபிறவி ஜெனனத்தில் ஜெனிப்பிக்க வேண்டி—

கரண்டைக் கால்வரை னீண்டோடி வளர்ந்து விரிந்து சிந்திக்கிடக்கும் தலேச்சிகைக் கூந்நலாபரணமும் – முழுமானித் தனத்து அதிமுகக் கூச்சமுற்றுறும் உணர்ச்சியினேயுடைய இளம் பசுமஞ்ஞள் பொடிற்றிருமேனியும்- குறிவைத்து ஆவிப்பாய்ந்து பிடித்துப் பற்றி விழுங்குகின்ற இமையுருது னிற்கும் பேரிரக்கம்கொண்டு கனத்த பெரியதகைப் பார்வையும் மாயாத ரட்சகத் தன்மை ஓயாதுபூத்து விளங்கும் ஒத்தைமனத்துச் சுத்தம் ஓங்கிய—

எங்கள் மங்கா தவத்தங்க மாமலே
சிங்க மொத்ததி டத்தமெய்ச் சிந்நையர்
வெங்க லத்தையொத் தவிரு தாளினர்
திங்கள் மாமுகச் செல்வனன் ஞயகம்–

அவர்கள் அங்கேயே ஓர் பக்ஷகாலம் வரையிலும் அவ்வூர் வாசிகளுக்கிடையே மெய்ஞ்ஞான அருட்பிழம் பின் சுவையுணவு ஊந்நுபார்த்து அது அவர்கள் செவி யில் உடனேபோய் ஏருததது கண்டு இப்போது காலம் னெருங்கிவிட்டபடியால் கலினிலே ஆடம்பரம் அறவே இல்லாதிருக்கும் பட்டிக் குக்கிராமங்களுக்குச் சென்று அங்கு இப்போது அவசரமாய்த் தாமதிக்காமல் கேட்ட மாத்திரத்திலே சேர்ந்துகொள்ளும் ஒரு சிறுகூட்டமான பத்துப் பிள்ளைகளாவது கூட்டிக்கொண்டு இங்கேனுள் ளைடவில் னேசப்பழக்கம் அதிகப்படுத்திப் பந்நத்துவ் மான பிரீதி யுண்டுபண்ணி அதன்பால்ச் சேர்ப்போ மென எண்ணியவர்களாய் அதிலிருந்து சுக்காம்பட்டி கருங்குளம் கோட்டுத்துறைப்பட்டி திருக்கோஷ்டியூர் முதலாகிய சுற்றுப்புறங்களிலேயுள்ள கிராமாந்தரங்க ளான ஒவ்வொரு ஊருகளுக்காய்ச் சென்று - ஆங்காங் குள்ள சாவடி ஊர் முச்சந்நிகளிலும் ஜனங்கள் வந்து தங்குகின்ற விருச்சனிழல்களிலும் பிரியமாய்க் கூப்பிடும் தெருவுக்கோடிகள் திண்ணை னடசாலை பட்டகசாலை களிலும் ஆங்கு வந்துவந்து கூடியவர்களின் முன்னிலேயி லிருந்து அவரவர்களினுடைய சாதிமத ஆச்சார சம் பிரதாயங்களுக்கு ஏற்றபடியெல்லாம் னற்கருமவழிபாடு எளிதில்ப்படும்படியாக எடுத்து - அவர்களுக்கு அதிசயம் பிறங்க வினுவிடையாக எல்லோருமே மெய்ஞ்ஞானத்தை அடைந்து விடுகிறது மிக எளிமையானது என்று பேசிக் கொண்டுவந்துவிட்டு - ஆனல் இதற்கு எதார்த்த

வைராக்கியம் ஒன்று வேண்டுவதென்றும் இதற்குப் படிப்பே இல்லாதவர்களும் அருகதையர்களே என்றும் விளங்கும்படிக் கூறிக்கொண்டுவந்து முடிப்பார்கள்—

இவ்வாருக அதன் அதிஉன்னதப் பதவிப்பலன் உறுதிப்பாடுகள் பலபலவிதங்களாகப் பலபல இடங்களிலும் பிரசங்கித்துக்கொண்டு எங்கே ஒருவர் சேர மாட்டார்களா என்று ஆய்ந்து கவனித்துவரும் அந்நஞளையிலே - தாங்கள் அறைதையாகத் தங்கியிருக்கும் திருப்புத்தூரிலே காலேமாலே னேரங்களைத்தவிர பகற் காலங்கள் பூராவும் கிராமாந்நரங்களுக்கே போயிக் கொண்டு அங்கு கவனமாகஇருந்து எங்கேயாவது ஒரு பிள்ளையாவது சேராதா என்று பார்த்துத் தன் னீதி னிணேவே தனக்குத் துணையாகனின்று காலம்கழித்திரா னின்ற அவர்கள்- அந்நக் குக்கிராமத்திலும் தங்காமல் சாயங்காலமே திரும்பிப்போய்த் திருப்புத்தூரிலே விளங்கும் ஆலயமாகிய ஞயன்மார்களின் மடத்திலே எப்பொழுதும் சத்விஷயங்கள் பேசிக்கொண்டிருக்கின்றவர்கள் கூட்டமுற்றிருப்பது வழக்கமாக இருந்துவருகின்றபடியினலே அங்கேபோய்த் தங்கிஇருந்துவரும் அந்நஞளையிலே -

மேற்கூறிய மடத்திலும் - கோவிலின் முகப்பு முச் சந்நியிலும்- கருப்பகோயில் விடுதியிலும் - சிதளிக் கீழ்ப் படித்துறைக் கரையிலும் - மேலப்படித்துறைப் பள்ளி வாயலிலும்—மதரசாவிலும்- கடைவீதி தெருவுகளின் மூலை முகப்புகளிலும்- புலவர்பள்ளிக்கூடம் - பேட்டை - சந்துகள் - திண்ணைக்கோடிகளிலும்- பிரியமாய் அழைக்கின்ற

வர்களின் வீட்டு முத்தவெளி னடசாலே வட்டங்கச்சேரி கள் முதலாகிய அனேகம்பல இடங்கள் எங்கும்- தாங் ஙள் ஏறினிற்கும் ஜீவசிம்மாசனப் பேராண்மைப் பிரம் மோதயப் பெருக்கென்னும் அரிய செவ்விய லோகோப கார னிறைனீதி வான்செல்வ அருள்வருஷிப்பாகிய மெய் வழியின் பாரமார்த்திகத் திருவசனப் பிரசங்கம் எங்கும் ஒய்வு ஒழிவின்றி சலியாதுனின்று சாங்கோபசங்கமாக முழக்கிக்கொண்டு தனியேனின்ற எங்கள் னுயகமவர் கள் - எங்ஙனே எங்கே இன்னும் வரக்காணுமே என் னும் கருணை விழியராய் எழுந்து இனிய பெருங்குர லோசையானது கூவிக்கொண்டிருந்த னெறியுற்ற செயல்ச்சீரின் இருளற்ற திருவாக்கின் னிறையுற்ற பிர சங்கமாவது:-

திருப்புத்தூர்
கோட்டைச் சுவர் அருகில் னின்று செய்த
பிரசங்கம்

ஏ கலியுகத்தில் னின்றுகொண்டிருக்கும் பிறவி யரே - அக் கலியவாவினன் னேசபாசப் பழக்கத்தால் என்னை யாரோ எவரோ என்று னுணினுப்போலே கூசிக் கொண்டிருக்கும் துணைவரே - எம்மை உம்முடைய அண்ணன் தம்பி மனைவி மக்களில் ஒருவராக எண்ணு வீர் சோதரரே - இனிய பிறவியரே - னுமெல்லாம் முன்னே இருந்து வந்த வழி வரலாறு னுன் கூறிவரு வதை னீ ஆர்வ சித்தமாகக் கேள் - னும் ஜீவதேககவைப் பெனும் ரோஸ்மீதாக்குடைய காலமாகிய மயூர கவன துவச மவுன ரகப் பிரகாச பிரம்மஸ்தக்கூட கமல

சயனுதி உலா உமாமாமணைத் தாடலங்கார னடன யுகாந்த வைப்புனிதிப் பதிப்பாடிக் கோளத்திலங்கே மவுன னிச்சலாதி சலாசன மன்திராவக வித்வக்கனி னிசவச்சிர சிரவர்த்தன ஜீவாவிச்சட ஈசலனு இருந்த அதுபோது – ஓர் னிதமலம்பல சலன விரக வெறி விகார விரைபாவு சூனைக் குயப் புடமிடு முடவரிருவரால் வழிவழிவரும் ஓரழி கருவறையி லடைத்து மனுசதள வடிவெடுத்து – இரவு பகலென்று சந்திர சூரியாள் ஓடிக் கொண்டிருக்கும் இப்பெரிய மண்ணுருலகிலே என்னைப் போலவே வந்து பிறந்து னிறைந்திருக்கும் எனது உட லொத்த பிறவியரே – இங்கே உம்முடைய செவித் துளையை என்னுடைய சத்திய னிலைசாயா னிதி னெறித் தொனிக்கு னேர்திறந்து வைத்துக்கொண்டிருக் கும் எனது தேகத் துணைத்தோழரே – மேலும் உனக்கு வயது தந்தின் பிரயோசனமாகிய பேரருள்ப் புராத னம்ஆகிய என் மெய்யிசை இச்சை உன்னுக்குள் வைத்துப் படைக்கப்பெற் றிருக்கின்ற சகோதரனே – அப்படி இல்லாவிட்டால் னுன் பேசி வருகின்ற வீதி மூலைமுடுக்கு முச்சந்தி னடசாலை திண்ணைக்கோடிகளி லெங்கும் னின்று கேட்க வந்திருக்கமாட்டாயே – ஆன தினுலேதான் னீ கேள் என் சொல்லை – அழியாத ஜீவே சத்தகை வாழ்வின் மெய்ஞ்ஞானியாக உன்னை ஆக் கவே வந்திருக்கின்றேன் – இதற்காக னீ என் சொற் படி புரளாதவனுகை ஆகிவிட்டால் னுன் இதை மெய்யாக மெய்யாகவே மெய்யாக்கிவிடுவேன் –

இதாகிறது அப்பா - உன் வயது வாணுளிலே வைத்து - ஞன் ஒருபெருனிஜனிதி லாபகர வசந்நகாலம் கொண்டுவந் நிருக்கின்றேன் - வேணுமென்ருல் வா - இல்லாவிட்டால் போ என்றுதானே சொல்லுவேன் பிற வியரே - ஆனல் - ஒரே ஒரு காரியம் மகா முக்கியமா னதா யிருக்கிறது - சாயங்காலம் ஆச்சுது என்றுபோய் விடாதபடி கொஞ்ஞனேரம் னில்லுங்கள் - இது வெகு முக்கியம் - கவனித்துக் கேள் - அதாவது - னீ என்ன தெரியுமா - இம் மண்ணுலகினிலே னீ சிரஞ்ஜீவிப் பட்டம் பெறுவதற்கான கைம்முதல் ஆஸ்திவரம் பெற்று வந்நவன் - இங்கு வந்நதன்பின் எவனெவன் பேச் சையோ கேட்டு அற்பப்பட்டம் பெற அவஸ்தைப்பட் டலேகின்ருய் - இது சத்தியம் - உனக்கே தெரியும் - அன்றியும் - னீ கணக்கற்ற கிரணேதய உலகம் புகுந்து அதற்கு அதிபதியாக னின்று ஆள வந்நவன் - அதை விட்டுவிட்டு - இங்கே சழக்கக் கலியன் பழக்கத் தில் புழங்கி விளக்கற்ற சஞ்ஞலம் னிறைந்ந இருள் உலகம் புகுந்நாளப் போகின்ருய் - உஜார் - இதல்லாம லும் னீ தேவ சிரேஷ்டனுவதற்கு வந்நவன் - அதைத் தள்ளி வைத்து விட்டு - மேலும் அது னம்மாலே முடியுமா என்னும் வார்த்தை விளம்பிக்கொண்டு - அறிந்ந யோக்கியரைப்போல்த் திரியும் அறியாக் குருக் கள்மார்களே உகந்து பின்பற்றி அலேகின்ருய் - னீ னித்தியனுவதற்கு வந்நவன் - இங்கே னீ அனித்திய னகப் போவதற்கே இடைக்கட்டிக்கொண் டிருக்கின்

ருய் - ஜாக்கிரதை - இதை எடுத்து உனக்குக் கூறுவதற்கு ஆளே இல்லாத ஊரிலிருக்கிருய் - மேலும் னீ சர்வ கலைனிதி ஐஸ்வரியனுகுவதற்கு அதற்கான உதவிப் பொருளெல்லாம் குறைவின்றிப் பெற்று - தூலத்துக்கு ஜீவனளித்த முன் காலமான அப்போது மார்தட்டிச் சாட்சிவைத்து ஹைச்சுதுபார் என்று வந்நவன் - அதை மறந்நுவிட்டு இங்கே மெய்யைக் கொடுத்துப் பொய்யைப் பெறுகிறவனுய் - அப்பொருளைச் சர்வ கவலைத் தரித்திர அலகைத் தேகத்தைப் பெறுகுவதற்குச் செலவு செய்துகொண் டலைகிருய் - இது மெய் - னீ எமன்பதி கடந்நு வீரக் குன்றேறி விளங்க வந்நவன் - தூங்கக் குழிக்குள்ளே பேடித் தனத்தைப் பாதுகாக்கின்றவனுக இருக்கின்ருய் - உலகப் பெரிய பிறவியரே - அதுதான் வாயரட்டையும் பயங்கொளிச் சேட்டையும் எங்கும் மலிவா மலிந்நு கிடக்கிற பெருந்நிரளான கூட்டத்துக்குள்ளும் புகுந்நுகொண் டிருக்கிறே மென்பது மறந்நுவிடக் கூடாது என்று னீங்களே இந்நப் பிரசங்கம்செய்து ஞன் கேட்டால் எனக்கு எப்படி யிருக்குமோ - அப்படியே உங்களுக்கும் இருப்பதற்குத் தடையிராது என்று எண்ணிக்கொண் டிருப்பதோடு - னீங்கள் வந்து மசண்டை னேரமாயிற்றே போய் வருவோமா அல்லது இன்னம் கொஞ்சும் ஏதாவது முக்கியமானவைகள் பேச னேரம் தருவார்களா - செவிக்கதவைச் சாத்திப்போடுவார்களா என்று னினைக்கின்றேன் பிறவியரே -

அப்போது அங்கிருந்நவர்களில் ஒருவராகிய தையற்கடை காதிர்பாச்சா ராவுத்தர் என்பார் எங்கள் ஆண்டவர்களை நோக்கி - பாவா - போய்விட்டு ராச் சாப்பாட்டுக்கு மேலே - னம்ம கடைக்கே வந்திருங்கோ என்றதும் - சரி என்று சென்றுவிட்டார்கள்-

திருப்புத்தூர்
அறுபத்துமூவர் மடத்து முகப்பில்
காலை இளநேரத்தில் பேசிய பிரசங்கம்

ஏ பழங்காலத்து னெடும் பெரிய உலகீரே - என்னைப்போலவே மனிதகோல மெடுத்துவந்து னிறைந்நிருக்கும் எமது உடலுக்கு ஒத்த பிறவியரே - ஆனல் னீங்கள் எல்லீரும் னவக்கிரகக்கோளினை அதட்டி ஆள முடியாது அக் கோள்களாற் பீடிக்கப்பெற்று னையுண்டு-தப்பிக்க ஒரு சரியான வகைகூட இன்றி மாட்டி மீளமுடியாது கிடக்கும் னேசரே - அதற்காக அறியாத பல அம்மவனே கூடி ஐயறிவுகொண்டு ஆலோசனை பண்ணிச் செய்வதாகிய அது - உன் கையில்ச் சிக்கி அகப்பட்டுக்கொண்டு உன்னையே எதிர்னோக்கிக் கிடக்கும் ஏட்டுக் கூட்டுக் குருவைப் பிடித்து ஏதேதோ செய்து ஏதுங் கிட்டாது ஏமாந்து போயிக்கொண்டும் ஏமாந்து போகவும் கிடக்கும் எனக்கு முன்னனுளிலும் பின்னுலுமாகப் பிறந்து வந்து இங்கே கூடிஇருக்கும் என் தோழரே - உங்கள் இந்த ஆபத்துச் சஞ்சலப் பீடிப்பினையும் அதற்காக வேண்டி னீங்கள் னம்பிப்

பிடியுண்டு திரியும் அலங்கோலப் பாட்டினையும் விலக்கி க்ஷேமத்தைத் தரும் விபரத்தை எடுத்துச் சொல்லுவ தற்குக்கூட ஞதியற்ற தூரமான அந்நப்புறத்துச் செய லூரில் ஸ்தாபரமாகக் குடியிருந்து கொண்டிருக்கின்ற என் தூலப் பிறப்பரே – இதனுலே னீங்கள் அடையப் போக இருக்கும் அதினெடும் அமளியாகிய இருட்பதி புகும் பரிதாபகரத்தினை ஞன் னெடுகத் தெரிந்து ஓர்ந்து உங்களைத்தேடி வலியவந்து சொல்லிவிட்டேன் – இதனுலே னீங்கள் என்னை வலியவந்நவள் கிழவி மாட்டே னென்றவள் குமரி என்கிற சுலோகத்தினைப் போலே எண்ணிவிடாமல் எல்லோரும் தெரிந்நவராகிக் கொள்ளுங்கள் –

மேலும் ஞன் வாயினல்ச் சொன்ன இத்துடன் விட்டுவிட்டுப் போய்விடாமல் தொடர்ந்நோ ரணைவரை யும் எடுத்து அறியாமையின்னின்று விடுவித்து விலக்கி அச்சமற்ற ஆனந்நப் பெருவாழ்விலே என்னைப்போல் வாழவேணுமென்று ஆக்க எண்ணங்கொண்டு வந்து னிற்கும் எம்மை - னீங்கள் யாதொரு உதவி துணை யற்ற அனுதையானவரென்று ஓர்ந்து எளக்காரமா எண்ணிக் கட்டாயப் படுத்தி – பரிசிலனை செய்து – தோல்விபண்ண னினைத்தாலும் அதற்கும் ஞன் தனி யேன் எனினும் பின்னிடையாமல் னிற்பேன் பிறவி யரே – னீங்கள் எவ்வளவு பேரென்ருலும் - எப்பாரச் சுவடிகள் கற்றுக்கொண்டுவந்து குவித்துப் பேசிப் போராடினுலும் - மெய்ம்மை னீதிப் பெருவழியில் கடோசி யில் ஞன்தான் ஜெயிப்பேன் பிறவியரே – அவ்வாறு

ஜெயங்கொண்டதற்கும் அந்நப்புறத்தே னீங்களும் கூடவே தொடர்ந்து வந்து பார்த்தால் - அது உங்கள் ஜெயமாக னிற்கும் பிறவியரே –

மேலும் சத்திய சுத்த னீதி எதார்த்த அழியாப் பொருளானது மனுக்கோடி சதளங்களுக்கென்று விதிக் கப்பெற் றிருக்கும் மாருத கைபலித ஜீவான்ம வாழ் வினை அறிந்து அடைய னியமனிக்காது - அதற்காகத் தந்நுள்ள இச்சை பக்தி ஆசை அன்பினையும் அச்சம் பயம் ஆய்தலையும் பொய்ப்பவக்குடித்திமிர் வளர் வாழ் வினுக்கே செலவிட்டுக்கொண்டு - அன் னீதி வாழ்வி னுக்கு ஒரு சிறுனேர அற்பத்தனச் சொற்சாயமட்டும் பூசிக்கொண்டு – அழி அவாவிலேயே ஓடி இறைவனிடம் பெற்ற வித்தியாதத்துவ அமானிதக் கடன் பொதி சுமந்த அனியாயக்காரக் கலியனுய் – அனந்நங்கோடி காலமெலாம் அழி னரகத்திலே அயராது அலறித் தங்கித் தரித்திருப்பதற்குப் பிரயாணக் கோலம்பூண் டெழுந்து செல்லும் அமளி அவஸ்த்தை மிகுத்த மரண முதல்வாசற்படியைக் குறித்து – அது ஒரு சிறிய னேரத்து மரணம்– அது ஓர் குறுகிய அற்ப காலத்து அவஸ்த்தை தானேயென்று னினைக்கும் ஏ அதன் னீனம் னிலை தெரி யாது திரிந்நலையும் என்னினம் போல்த் தோன்றி னிற்கின்ற பிறவியனே –

அப்படியே அற்பனேரத்து மரணமென்று னீங் கள் கருதியிருப்பதானதுதான் சரியா னிசமா என்று ஒருவன் கவனித்து ஊன்றிப் பாராது போடுபோக்காக னின்று மேலாகப் பார்த்தாலும் அவை விளங்காத

தனம் புடைத்த அலங்கோல பொய்யா யிருக்கிறது - எப்படியெனில் னீவிரெல்லீரும் மரணம் என்று கூறும் வாய்மொழியாய் ஒருவன் தவறினைப்போலே மெய்கூறி விட்டானேயானல் - அதனை னீங்கள் காதில்க் கேட்ட மாத்திரமே பிரியப் படாததோ டன்றியும் சும்மாகூட இருக்க முடியாதவர்களாய் மனம் சகியாது இதயத்திலே பயந்து இருள் மண்டி அங்ஙனமே இதென்ன அபசகுன அசுப வார்த்தை என்று கூறி னடுங்குறும் பேடியனுய் - ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு சுப மான காரிய னேரத்தில் சுபமான வார்த்தை கூடப் பேசத் தெரியாதவனே யென்று அன்னுனை வெறுத்து வெரட்டுவதோடன்றி - அவன் சொற்ற மரணமெனும் வார்த்தையைப் பலகாலும் னினைந்து னினைந்து - அசரீரி வாக்கென்று கூறுகிருர்களே அதுபோல் எங்கே னிசமாய்ப் பலித்திடப் போகிறதோ என்னவோவென்று உளங்கலங்கி உலம்பிக்கொண்டு னினைவில்த் திருகித் திருகித் தடுமாறிப் பயந்து- அப் பயம் வெளிக்குத் தெரியாது மறைக்க அது வேறே சமாளித்துக்கொண் டிருக்கும் பெரிய பெலம் கனங்கொண்ட வையத்தினேரே - இதைவைத்தாவது பார்க்கில் மரணம் என்னப்பெற்ற அமளி அவஸ்த்தையாகியது ஒரு சிறு அற்பனேரத் துன்பம் அல்லவே அல்லவென்று தண்டாயுத இடியைப் போல்த் தெரிந்நவராகிக் கொள்வீர்கள் பிறவியரே -

மேலும் - உலகத்துக்குப் பரோபகார னன்மை செய்கிறேனென்ற வேலை வெட்டி செயல்கள் பூர்த்தியாகாத அரைகுறையாக இருக்கிறது - அதை முடிவுக்

குக் கொண்டுவருகிறதானது மகா அவசியமான பரோப காரக் கைங்கிரியம் என்று னீர் முழக்கிக்கொண்டு அல்லோல்மாக அலறி விரித்துக்கிட் டிருப்பினும் - உயி ரானது உன் தனது உபகரிப்பினைக் கவனிக்காமலும் இப்பேர்ப்பட்ட உன்னைக்கூடச் சரி பண்ணிச் சட்டை பண்ணுமலும் எழுந்து உன்னை விட்டுப்பிரிந்து புறப் பட்டுப் போய்விடுகிறது என்பது னன்ருய் னிச்சய மாய் னீங்களெல்லோரும் தெரிந்திருக்கின்றவர்கள் ஆதலினலேதான் - கைதேர்ந்த வல்ல பண்டிதரென்று சொல்வோரை ஆய்ந்து தேடிக் கண்டெடுத்துப் பணம் கொடுத்துக் கெஞ்ஞித் தாங்கித் தடுக்கிட்டுப் பாடாப் படும் அகண்ட பாருலகீரே - உயிருக்காக வேண்டியே இவ் வரும்பாடு படுகின்ற அன்புடைய உயிரை- எல்லாச் சிரு சிறப்புகளும் தருகின்ற உயிரை - சர்வ வலதும் ஆண்மையும் தருகின்ற உயிரை - எல்லாக் கல்வி கலை கண்காட்சியும் தருகின்ற உயிரை - சர்வமதிப்பு குதிப்பு மகிழ்ச்சியும் தருகின்ற உயிரை - எல்லா இன்ப இச்சை களும் தர உனக்கு இரவு பகல் ஓயாது ஊழியம் செய்து கொண் டிருந்த இலஞ்ஞிய லக்ஷிய உயிரை - வரம்பு கோடற்ற வயதினையுடைய கிரணதைய உடம்புயிரை - உனக்கு உணர்ச்சி உணவு சுவையுடன் எடுத்து ஊட் டிக்கொண்டிருந்த இணை துணையான உயிரை- அதனைக் கண்டு தெரிசினை பண்ணி னீ அதன் மூலமாகச் சிரஞ்ஜீ வித்தனம் பெறுவதற்கு ஒருனள் ஒரு பொழுதாவது மறந்நாப்போலேனும் இச்சைவராமல விருப்பதற்குக்

காரணம் என்னத்தினாலே யென்று இப்போது னீங்க ளெல்லோரும் என்னை னோக்கிக் கேட்டதாக வைத்துக் கொள்வோம் - அவ்வாறு கேள்க்கும்போது சொல்லத் தெரியாத தேறலாக மனித கோலத்தில் னான் இருக்க லாமா பிறப்பரே –

அன்றியும் – ஊனப்படுத்துகின்ற தொழில் அமலினை என்றும் பெற்றிருக்கும் ஒன்பதுவகைக் கோள் களில் ஏதாவது ஒன்றில் மனிதர்கள் பீடிக்கப்பெற்றுத் துயரேறி அவஸ்தை மிஞ்ஞி உயிரானது விலகிவிடப் போகிறது என்ற கோடுவரை எத்தித் தூக்கப்பெற் றிருக்கின்ற ஒருவனை - அந்த அபாய ஆபத்துச் சுருக் கினுக்குள்ச் சிக்கித் தவிக்கின்றதனை இறைவன் கிடக் குதுபோ இன்னும் கொஞ்ஞ னாளக்கி இவனை விடுவித்து விட்டு அதன்பின் இவனுடைய னடக்கையைப் பார்ப் போமென்று இவனது பிரார்த்தனைச் சத்தியக் கெஞ்ஞு தலை னோக்கி இரக்கமுற்று அச் சுருக்கு ஆபத்தினை விடு வித்து விட்டுத் தெளிவித்தால் - உடனே எழுந்ததும் உயிரைத் தேடியடையச் சிறிதும் உணர்ச்சி இல்லாத தோடன்றி னன்றிகெட்ட வீண வியர்த்தனாய் - பழைய பாவ விஸ்வரூப முகத்தோடு எழும்பி - முன்னே திரித்து மீதம் வைத்திருந்த அந்தப் பழைய வரகையே திரும்ப வும் திரிக்கப்போகின்றவர்கள் னிரம்பியிருக்கும் ராச் சிய ஊரிலேதான் னாமும் பங்காளியாய் வீடுகட்டிக் கொண்டு குடியிருந்து வருகிறோமென்பது மறந்து விடவே கூடாது எமது பிறவியரே –

மேலும் நன் உன்னைப்போலவே மனித கோல மெடுத்து வந்து இருப்பதானது - உன்னைக் காணிலும் எத்தனையோ விதத்தில் மட்டமா இருக்கின்றேன் பிறப்பரே - அதாவது நீங்கள் தாயி பிள்ளை உற்றர் உறன் முறையாரோடு திரளினராக இங்கவ் இருக்க - நான் உங்கள் மத்தியில் ஒரு நாதியுமில்லாது பிராந்நெடுத்து வந்து போட்ட குஞ்ஞுபோ லிருப்பதுடனே உதவி ஒத்தாசை செய்ய ஒருவரும் இல்லாது விடுவாசல் வியாபார சாபாரம் ஏதுமற்ற தனித்த ஒத்தையாய் வந்து நின்றுகொண்டு உன் முகத்தை நோக்கி - உங்களின் வயது வளர்வுகாலம் இதுவரை நீர் கேள்க்கவராத யாரும் இதுநாள்வரை கூறாததாகிய இதனை எடுத்து நான் மட்டும் ஏன் சொல்லுகிறேன் என்று நீங்களெல் லோரும் - நல்ல செவித்துளை படைத்த மக்கள் - மன தான்றிக் கவனித்து ஒருவரோ டொருவர் கூறிக்கொள் வீர்களேயானுல் - அதன் பலன் உங்களுக்குக் கிட்டா மல்ப் போகாது பிறவியரே -

'அன்றியும்-புண்ணிய பாவமென்னும் இருவினைப் படைப்புப் பளுப்பாரப் பொதிசுமந் தோடிக்கொண்டி ருக்கும் பெரிய பூமியினிடத்தே மனுச் செனமமெடுத்து மனு சதனகோல வளர்ச்சியில் இர்சையுற்றுத் தேடி வருந்தி முழுப்பாடுற்று முன்னப்பெறி வந்துகொண் டிரா நின்ற மண் பெண் பொன்னுகிய இம் மூவாசையின் பெருக்கு விரிவு விக்கவினைவினுலே ஏதாவது ஒரு இடரு நெருக்கடி புரமானித்தனச் சம்பவங்கள் அழி அவாவி

னுல் ஏற்பட்டுவிட்டால் – அந்த அழி அவாவின் அற்பத் தனக் காரியத்திற்காக நெடுங்காலப் பெரிய காரியப் பேருயிர் வாழ்வினை அற்பமாயெண்ணி இழந்து எக் கோடி காலங்களும் கொடுநரகத்தில் தங்கி விலக்க வேண்டியதாய் விடுமே என்று அஞ்ஞாது உணர்ச்சி யில் ஓராது ஒரு சிறிய நேரக் கஷ்டத்துத் தற்கொலை தானே என்று யோசனை பண்ணி அத் தற்கொலையி னைச் செய்துகொண்டால் – இப்போது ஏற்பட்டிருக்கும் உலக இடரு நெருக்கடியைக் கடந்து கஷ்ட நிவர்த்தி செய்துகொள்ளலாமென்று எண்ணமுற்றுத்தானே பற் பலவாருன தற்கொலை செய்துகொள்ளுகிருர்கள் – அத னைப் பார்த்துக் கேள்வியுறும் பேர்களெல்லாம் அந்த அறிவகன்ற முழுப் பாவகர அயோக்கியத் துரு மர ணத்தையுடைய அன்னுனை மகா ரோஷக்காரனென் றும் ஒரு சொல்லு பொறுக்காத ஈகுடைய சத்தியவந்த னென்றும் பேசுகின்ற வரிசையிலிடத்தே – அவன் இத்துடன் உலகக் கஷ்டங்களையெல்லாம் விட்டு முடித் துக்கொண்டு போய்விட்டானென்றும் கூறுகின்ற உலக அம்மவர்கள் மனத்தள வுறைந்து கிடப்பதினை னேக்கிற் பன்னெடுங் கால காலங்களும் முடிவிலா அவதி அலறுதற்குள் புகுதும் தலவு வாசற்படியாகிய தற்கொலைச் சடுதிச்சாவுத் துரு மரணத்தை – ஓர் அற்ப நேரத்து அவஸ்த்தைச் சாவேதான் என்று எல்லோரும் எண்ணியிருக்கின்ற நின்னணந்நானே யென விளங்கும் படி எடுத்துக் காட்டுது பிறப்பரே –

ஏ மனிதனே-நீ முடிவிலாக் காலம் மாறாத இன்ப ஆன்ம லாபத்தினை அடைவதற்கென்று வந்து உடம் பெடுத்துப் பிறந்திருக்கும் தேகியே - உனக்காக வேண் டியே சந்திர சூரியாள் தாரகை மின்பனி அளவிடற் கரிய சத்துவங்களாகிய அண்டரண்ட சராசரங் களும் அதனுள்ப் படை யுண்ணப்பெற்ற ஜீவமதிச் சுவைக்கூரு ரசித கோடிகளும் ஜடமனச் சுவைக்கூரு ரசித கோடிகளும் படைத்து நிரப்பிவைத்து - இவை முழுதும் ஆள உனக்கே முழு யோக்கியச் சொந்த மெனப் பதிவு மதிப்பெலன் னில்லைரந்நந்து வந்திருக் கின்ற பெரிய பூமிக்குச் சொந்தக்கார மனு சதள கோடி சதகோடியரே - எனது தூலத்துக்குப் பிறவியரே - கேளுங்கோ - இப் பூமியினிடத்தே முளைகண் டெழும்பி வரும் எந்த ஒரு அற்ப வித்துக்கள் எனினும் அதைச் சுட்டெரித்தோ வறுத்தோ விதைக்கப்படுவதே இல்லை - அப்படிச் சுட்டெரிக்கப்பட்டுவிட்ட வித்துக்கள் எதுவாகி லும் அது முளையெழுந்து காணவருவதே இல்லையே இனிப் பலன் தருவது என்றால் அது நீங்கள் கனவில் கண்ட தீர்மானமா - நிச்சயம் பலன்தராது என்பது நீங்கள் எல்லோரும் அறிந்திருக்கின்றது சரதமே - னெடுங்கால ஆன்ம லாப வாழ்வினுக்கு மனுக்கோலம் தாங்கிவந்து நிறைந்திருக்கும் விரிந்த கடல் சூழப் பெற்ற மலர்ந்த புவியோரே - ஜீவான்மாவை அடைந்து பரமபதவீடு அடைந்தில்லாத விண்வேடப் பாட்டுக் கடன்கார மோசடிப்-பாவியர்களை அக்கினியில்ச் சுட்டெ

ரித்தலும் – ஜீவான்மாவை அடைந்து பரமபதவீடு
சேர்க்கையுடைய மதிமகத்துக்களாகிய சான்றோரைப்
பின்விளைவு திருவிளைவு -ஆடலங்கங்களுக்கு ஆக
எழுந்துவர அடையாளத்துடன் மண்மறைவு செய்த
லும் ஆகிய இவ்விரண்டு செய்கைமுறைகளும் – திட்டம்
பிரளாத வெட்டாத சக்கரப் பேசாத மந்திர வேறொரு
வர்க்கு எட்டாத புட்ப இறையாத தீர்த்த இனி முடிந்து
யாரும் கட்டாத லிங்கப் பட்டாங்க தேவ சட்டத்தின்
படியே கூர்ந்து அவரவர் அறிவுக்கே சாட்சிகொண்டு
பார்க்கின் தெரியவருகின்றதாவது –

மனிதனுடைய தேகத்திலுள்ள அவயவங்களில்
வைத்துக் கையோ காலோ காதோ கண்ணோ மூக்கோ
அல்லது மற்ற எலும்பு நரம்புகளோ ஏதோ ஒன்று
வெட்டுஉடைபட்டு ஊனப்பட்டு விடுவதென்பது எவ்
வளவு க்ஷண அற்பநேரத்துக்குள் ஆகி ஊனப்பட்டு
விடுகின்றது பார்த்தீரா – அவ்வாறுற்ற ஊன வடுவினை
மாற்றுவதென்றால் அவ்வூனமுற்ற நேரத்தினைப்போலே
எத்தனைகோடி மடங்கு நேரம் எவ்வளவுபேர்கூடி எம்
முயற்சி முயன்றாலும் அவ்வூன வடுவானது நிவர்த்
தியாகமுடியாமல் முயற்சிப் பாடனைத்தையும் வீணாக்கித்
தோல்விபடுத்திவிட்டு ஊனம் தங்கித் தரித்துவிடுகிறது
பார்த்தீரா பிறவியரே - அதுபோலவே மரணமாகுவது
ஒரு சிறிய அற்பநேரமென்றாலும் அதன் பாடு பலனா
வது – எக்கோடி நீளகாலம் வரும் நாள்களெல்
லாம் பரிசுத்த ஜீவப் பிரயாணருக்கு இஷ்டப்படி
சுவர்ணப் பதவியும் – அசுத்தத் ·தற்கொலைச் சடுதிச்

சாவுத் துரு மரணருக்கு இருட்டலகைத் தேகனய் னரக னெருப்பினுள்ப் புகுந்நு தங்கித் தரித்திருப்பதும் ஆம் - ஆனதினல்ப் பிறவியரே - மரண மென்னப்பெற்ற அவஸ்த்தை அற்பனேரமென்று னினைப்பதற்கு ஒரு சிறிய இடம்கூடக் காணப்படவில்லை - ஆகலான் இவ் வேத விதி னீதிப் பிரசங்நத்தின் மூலமாக வந்நுள்ள னெறிவரித் திரு விருத்தங்ஙளாவன -

அவயவங்ஙள் முடம தானல்
அழுந்நுவர் துன்பம் ஞளும்
இவைமுட மான னேரம்
இசைக்கரை னெடியே காணும்
அவத்தவ ரெண்ணும் அந்ந
அரைனெடி னேர மல்ல
தவத்தவ ருரையைக் கேளீர்
தாங்ஙொணுத் துயர்பன் ஞளே

சூரிகொடு கீறவொரு சூர்னெடிய தென்பர்
வீரிடுபன் ஞளதனின் வினைவுனினை யாதார்
னேருமொரு மரணபயம் னிமிடமது வென்பர்
கூறரிய கொடுனரகம் னீளமுண ராரே

செய்யும்னெடி னேரமதில் க்ஷீணமடை னட்டம்
ஐயவதன் வாதனைய தன்னிகள மென்னே
வெய்யகொடு வாதனையில் ஊயனெடுங் ஙாலம்
வையுமுதல் வாயலது மரணபய மென்னே

செவிசுடும் மரண மென்னும்
சொல்லினைக் கேட்ட போதே
அவைசொலக் கூடா தென்று
ஆங்கவர் கலங்கப் பார்த்தோம்
இவைமனம் னினைக்கும் போதே
இதையத்தில் இடிவீழ்ந் தொப்பாம்
இவையுணர்ந் நிலையே காலி
என்றதற் குரைசெய் கில்லேம்

பனுவலும் பாட லாலும்
பகர்ந்நவிற் பனங்க ளாலும்
அனுபவித் தறியீர் னீவிர்
அழிதுயர் மரணந் நன்னை
அனுபவித் தறிந்து வந்து
அருளுவ னவன்றன் கையில்
சனதங்க ளிலங்க னின்று
சாற்றுவன் சாயுச்சி யோனே.

திருப்புத்தூர் அறுபத்துமூவர் மடத்திலே
தங்கியிருந்நவர்களிடம் ஓர் இரவில்
பேசிய பிரசங்கம்

